மலர் : 53 இதழ் :1

# தமிழரசு

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

ஜூலை 2022
விலை ரூ. 20/–

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு



## மக்களோடு மாண்புமிகு முதலமைச்சர்...




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் 25.06.2022 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில், ''நான் முதல்வன்'' திட்டத்தின்கீழ், 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கான உயர்கல்விக்கு வழிகாட்டும் ''கல்லூரி கனவு'' நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்து, மாணவ, மாணவியர்களுக்குக் கல்லூரி கனவு புத்தகத்தை வழங்கினார்.






## 44ஆவது செஸ் ஒலிம்பியாட் விழிப்புணர்வுப் பேருந்துகள்

# “நம்ம செஸ், நம்ம பெருமை”



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.07.2022 அன்று சென்னை, காமராஜர் சாலையில், 44ஆவது செஸ் ஒலிம்பியாட் – 2022 போட்டி குறித்து விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், செஸ் ஒலிம்பியாட் இலச்சினை மற்றும் சின்னத்துடன் பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட 15 பேருந்துகளைக் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார்.

இந்திய வரலாற்றில் முதன்முறையாகத் தமிழ்நாட்டில் 44ஆவது செஸ் ஒலிம்பியாட் – 2022 போட்டி சரித்திரப் புகழ் வாய்ந்த மாமல்லபுரத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியானது 28.07.2022 முதல் 10.08.2022 வரை நடைபெறவுள்ளது. இப்போட்டியில் சர்வதேச அளவில் 186 நாடுகளைச் சேர்ந்த 2,000க்கும் மேற்பட்ட சதுரங்க விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 09.06.2022 அன்று பெருநகரச் சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டட வளாகத்தில், 44ஆவது செஸ் ஒலிம்பியாட் 2022 போட்டிக்கான இலச்சினை மற்றும் சின்னத்தை அறிமுகப்படுத்தினார்.

அதன் தொடர்ச்சியாக, சர்வதேச அளவில் நடைபெறவுள்ள செஸ் ஒலிம்பியாட் போட்டி குறித்து பொதுமக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் 5 மாநகரப் பேருந்துகளிலும், வெளி மாநிலங்கள், மாவட்டங்களுக்குச் செல்லும் 10 பேருந்துகளிலும் செஸ் ஒலிம்பியாட் இலச்சினை மற்றும் சின்னத்துடன் “நம்ம செஸ், நம்ம பெருமை”, “இது நம்ம சென்னை, நம்ம செஸ்”, “வணக்கம் செஸ், வணக்கம் தமிழ்நாடு” போன்ற வாசகங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்படுகிறது.






# தமிழரசு

**தமிழ்நாடு அரசு**
**செய்தித்துறையின் வெளியீடு**

திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம் : ஆனி – ஆடி
**ஜூலை 2022**

மலர் : 53 விலை ரூ.20 இதழ் : 1



ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
**த. ஹரிராம்**
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
**அ. மகேஸ்வரி**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
**சு. தீபா**
**எஸ். உதயா கதிரவன்**
**ச. மஞ்சுளா**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
**அ. சுகுமார்**
**மு. மணிமேகலை**
**கு. சுபாஷ்**

கணினி வடிவமைப்பு
**தி. ஜெய்சங்கர்**
**க.இரா. உமாமகேஸ்வரி**

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
**கோ. சந்திரசேகர்**



தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.




**பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்**
**தீராமை ஆர்க்குங் கயிறு.** - குறள்: 482

காலம் உணர்ந்து அதற்கேற்பச் செயல்படுதல், அந்த நற்செயலின் வெற்றியை நழுவ விடாமல் கட்டிப்பிணிக்கும் கயிறாக அமையும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

## இந்த இதழில்...


★ ‘‘எண்ணும் எழுத்தும்’’ திட்டம்....................6
★ 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கான உயர்கல்விக்கு வழிகாட்டும் ‘‘கல்லூரிக் கனவு’’....................10
★ கோயம்புத்தூரில் ரூ.290 கோடியில் மேம்பாலம்....................14
★ அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்....................15
★ தங்க முதலீட்டுப் பத்திரம்....................17
★ திருப்பத்தூரில் 16,820 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்....................24
★ ரூ.171.24 கோடியில் 5 புதிய தொழிற்பேட்டைகள்....................29
★ வேலூரில் 30,423 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்....................33
★ இராணிப்பேட்டையில் 71,103 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்....................39
★ கரூர் மாவட்டத்தில் 80,750 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்....................44
★ ரூ.3.93 கோடியில் 14 நடமாடும் தடய அறிவியல் ஆய்வக வாகனங்கள்....................49
★ சென்னையில் ‘‘முதலீட்டாளர்களின் முதல் முகவரி–தமிழ்நாடு’’....................50
★ சென்னை, மாநிலக் கல்லூரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கம் அமைக்கப்படும்....................58
★ ‘‘இல்லம் தேடிக் கல்வி திட்டம்’’ இரண்டு இலட்சமாவது மையம் தொடக்கம்....................65
★ காஞ்சிபுரம் ரூ. 120.75 கோடி மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்புப் பணிகள்....................66
★ திருவண்ணாமலையில் 1,71,169 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்....................67
★ இயற்கை வேளாண்மையில் முக்கியப் பங்கு வகிக்கும் உயிர் உரங்கள்....................78


## முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 02.07.2022 அன்று நாமக்கல் மாவட்டம், சிலுவம்பட்டி ஊராட்சி அருந்ததியர் குடியிருப்புப் பகுதியில் திடீர் ஆய்வு மேற்கொண்டு அங்குள்ள பொதுமக்களிடத்தில் கலந்துரையாடினார்.

திருவள்ளூர்

# அரசுப் பள்ளியில் ஆய்வு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 13.06.2022 அன்று திருவள்ளூர் மாவட்டம், புழல் ஒன்றியத்தில் உள்ள வடகரை அரசு ஆண்கள் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் ஆய்வு மேற்கொண்டபோது 10ஆம் வகுப்பு வகுப்பறையில் மாணவர்களுடன் அமர்ந்து, ஆசிரியை பாடம் நடத்தும் முறையைப் பார்வையிட்டார்.

## அறிவு ஒளி வீசட்டும்

இன்று பள்ளிகள் திறக்கப்படுகின்றன. துள்ளி வரும் பிள்ளைச் செல்வங்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்கிறேன். கொரோனா என்ற பெருந்தொற்றால் பள்ளிக்கு நேரில் வந்து பயிலும் முறை தடைப்பட்டது. இருந்தாலும் ஆன்லைன் மூலமாகக் கல்வி கற்றீர்கள். ஆனாலும் பள்ளியில் அமர்ந்து கற்கும் அனுபவத்துக்கு இணையானது ஏதுமில்லை. பள்ளிச் சூழலே கற்கும் திறனையும், அறிவாற்றலையும் மேன்மைப்படுத்தும். இடையில் தடைப்பட்ட வாய்ப்பை இப்போது அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மாணவ, மாணவியர் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இருபால் ஆசிரியப் பெருமக்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு பள்ளிகளை நோக்கிப் பிள்ளைகள் வருகிறார்கள். அவர்களைக் கனிவுடன் வரவேற்று அரவணைப்புடன் பாடங்களைக் கற்பிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். தடைபட்ட கல்வியைத் தாராளமாக வழங்கி முழுமைப்படுத்த வேண்டிய முழுப்பொறுப்பும் உங்கள் கைகளில்தான் இருக்கிறது.

கல்விச் சாலைகளில் அறிவு ஒளி வீசட்டும்! மாநிலம் பயன் பெறட்டும்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளபதிவு (13.06.2022).




# “எண்ணும் எழுத்தும்” திட்டம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 13.06.2022 அன்று திருவள்ளூர் மாவட்டம், புழல் ஒன்றியம், அழிஞ்சிவாக்கம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பள்ளிக் கல்வித்துறை சார்பில், 2022–2023ஆம் கல்வியாண்டு முதல், தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 3ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்குச் செயல்படுத்தப்பட இருக்கும் ‘‘எண்ணும் எழுத்தும்’’ என்ற முன்னோடித் திட்டத்தினைத் தொடங்கிவைத்தார். இந்நிகழ்வில் எண்ணும் எழுத்தும் திட்டம் தொடர்பான காணொலி, கைப்பேசிச் செயலி, திட்டப்பாடல் ஆகியவற்றை வெளியிட்டு, ஆசிரியர்கள், மாணவர்களுக்கு ஆசிரியர் கையேடு, சான்றிதழ், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள், புத்தகங்கள் உள்ளிட்டவற்றை வழங்கினார்.

கொரோனா பெருந்தொற்றினால் தமிழகப் பள்ளிகள், 19 மாதங்களுக்கும் மேலாக மூடப்பட்டு, வகுப்புகள் இல்லாத நிலையில் மாணவர்களின் கற்றலில் மிகப்பெரிய இடைவெளி ஏற்பட்டது. இந்த இடைவெளியைக் குறைப்பதற்காக, தமிழ்நாடு அரசு, 2022–2023ஆம் கல்வியாண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு எண்ணும் எழுத்தும் திட்டத்தை முன்னெடுத்துள்ளது. இத்திட்டத்தின்படி, 2025ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் உள்ள 8 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் எழுத்தறிவும், எண்ணறிவும் பெறவேண்டும் என்பது இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பெருந்தொற்றினால் தொடக்க வகுப்புகளில் குறிப்பாக 1 முதல் 3ஆம் வகுப்புக் குழந்தைகள், தங்கள் வகுப்பிற்குரிய கற்றல் நிலையை அடைந்திருக்கவில்லை. எடுத்துக்காட்டாக, மூன்றாம் வகுப்புக் குழந்தைகள், இரண்டாம் வகுப்புக்குரிய கற்றல் அடைவைப் பெறவில்லை. இரண்டாம் வகுப்புக் குழந்தைகள் முதல் வகுப்புக்குரிய கற்றல் அடைவைப் பெறவில்லை. இவ்வாறாக, 19 மாத இடைவெளிக்குப் பிறகு, குழந்தைகள், அந்தந்த வகுப்பிற்குரிய திறன்களைப் பெறாமலே வகுப்பை நிறைவு செய்து உள்ளனர். எனவே, குழந்தைகள் இழந்த கற்றலைப் பெறுவதற்கு உதவியாகப் பள்ளிக் கல்வித்துறையின் முன்னோடித் திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள எண்ணும் எழுத்தும் திட்டம், கற்றல் நிலைக்கேற்பக் கற்பித்தல் ‘Teaching at the Right Level’ (TARL) என்ற அணுகுமுறையை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப எண்ணும் எழுத்தும் திட்டத்தில் அரும்பு, மொட்டு, மலர் என்னும் பெயர்களில் தமிழ், ஆங்கிலம், கணக்குப் பாடங்களுக்குச் சூழ்நிலையியல் பாடத்திறன்களையும் ஒருங்கிணைத்து முதன்முறையாக நிலைவாரியான பயிற்சி நூல்கள் (Level Based Workbooks) உருவாக்கி அளிக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி நூல்கள் வாயிலாக மூன்றாம் வகுப்புக் குழந்தைகள், 1, 2ஆம் வகுப்புகளுக்கான பாடத்திறன்களையும் இரண்டாம் வகுப்புக் குழந்தைகள், முதல் வகுப்புக்கான பாடத்திறனையும் அடைவதற்கான வாய்ப்பைப் பெறுவர். இப்பயிற்சி நூல் செயல்பாடுகளைக் குழந்தைகள் செய்து கற்பதற்கு வழிகாட்டி உதவும் வகையில் தமிழ், ஆங்கிலம், கணக்குப் பாடங்களைக் கற்பிப்பதற்கானத் தெளிவான, விரிவான விளக்கங்களுடன் கூடிய ஆசிரியர் கையேடுகளும் முதன்முறையாக உருவாக்கி அளிக்கப்பட்டுள்ளன.

பாடவாரியாக உருவாக்கப்பட்டுள்ள ஆசிரியர் கையேடுகளும் பயிற்சி நூல்களும் ஒவ்வொரு குழந்தையும் தனக்குத் தெரிந்த கற்றல் நிலையிலிருந்து படிப்படியாகத் தனது கற்றலை வளர்த்துக்கொண்டு செல்ல உதவும். மேலும், குழந்தைகளின் கற்றலை மகிழ்ச்சியாக்கும் வகையில் எண்ணும் எழுத்தும் வகுப்பறையில், பாடல் களம், கதைக் களம், செயல்பாட்டுக் களம், படைப்புக் களம், படித்தல் களம், பொம்மலாட்டக் களம் போன்றவை அமைக்கப்பட்டுக் குழந்தைகளின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் ஊக்குவிக்கும் வகையில் கற்றல், கற்பித்தல் நடைபெறும். இதனால், குழந்தைகளுக்குப் பிடித்தமான கதைகள், பாடல்கள்,






விளையாட்டுகள், புதிர்கள், கலைகள், கைவினைப் பொருள்களால் எண்ணும் எழுத்தும் வகுப்பறை நிறைந்திருக்கும்.

எண்ணும் எழுத்தும் வகுப்பறையின் செயல்பாடுகள், குழந்தைகள், கவனச்சிதறலின்றிப் பங்கேற்றுக் கற்கவும் துணைக்கருவிகளின் (Teaching Learning Materials) உதவியுடன் பாடங்களைப் புரிந்து ஆர்வமுடன் கற்கவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை குழந்தைகள், தனியாகவும் இணைந்தும் குழுவாகச் சேர்ந்தும் அச்சமின்றிக் கற்க உதவிபுரியும். மேலும், எண்ணும் எழுத்தும் திட்டத்தில், ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் கல்வி நிருவாகக் கண்காணிப்பும் விளையாட்டுவழி மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"எண்ணும் எழுத்தும்" திட்டத்தின் அனைத்துக் கூறுகளையும் நடைமுறைப்படுத்துவதன் மூலம், 2025ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் உள்ள எட்டு வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் பிழையின்றிப் படிக்கவும் எழுதவும் அடிப்படைக் கணக்குகளைச் செய்யவுமான எழுத்தறிவையும் எண்ணறிவையும் பெறுவது உறுதி செய்யப்படும்.

"எண்ணும் எழுத்தும்" என்ற முன்னோடித் திட்டத்தினைத் தொடங்கிவைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "எண்ணும் எழுத்தும்" மாதிரி வகுப்புகளைப் பார்வையிட்டார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.06.2022 அன்று 'எண்ணும் எழுத்தும்' திட்டத்தைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை**

தமிழகம் முழுவதும் இந்தப் பள்ளியைத் திறந்து வைத்திருக்கக்கூடிய மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

'எண்ணும் எழுத்தும்' இயக்கம் என்கிற நிலையில் இந்த நிகழ்ச்சியை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். 'எண்ணும் எழுத்தும்' திட்டத்தைத் தொடங்கிவைக்க, புழலுக்கு அருகே இருக்கக்கூடிய அழிஞ்சிவாக்கத்திற்கு நான் வந்திருப்பது உள்ளபடியே எனக்கு மகிழ்ச்சியை, பெருமையைத் தந்து கொண்டிருக்கிறது. இந்தப் பகுதிக்கு எத்தனையோ சிறப்புகள் இருந்தாலும், நம்முடைய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் சொன்னது போல, சென்னையில் குடிநீர்த் தேவைக்கு முக்கிய ஆதாரங்களுள் ஒன்றாகத் திகழ்வது புழல் ஏரி என்பது அனைவருக்கும் தெரியும்.

நீர் எப்படி தாகத்தைப் போக்குகிறதோ, அதேபோல், கல்வியினுடைய தாகத்தை, அந்த அறிவுத் தாகத்தைத் தீர்க்கக்கூடிய வகையிலே இந்தத் திட்டம் இங்குத் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் கல்விக்கு மிக மிக அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்து, நம்முடைய அரசு பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்துகொண்டிருக்கிறது.

அதிலும் குறிப்பாக, கொரோனா வந்த சமயத்தில், ஊரடங்கு பிறப்பித்த நேரத்தில் குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள கற்றல் இழப்பை ஈடு செய்வதற்கும், எதிர்காலத்திற்கு ஏற்ற சிந்தனைத் திறனைக் கல்வியின் மூலமாக அவர்கள் பெறுவதற்கும், பல்வேறு முன்னெடுப்புகளை நாம் தொடர்ந்து எடுத்து வந்து கொண்டிருக்கிறோம்.

அந்த வரிசையில்தான், அந்த அடிப்படையில்தான் 'எண்ணும் எழுத்தும்' என்கிற இந்த இயக்கத்தைத் தொடங்கி வைப்பதற்காக இந்த அழிஞ்சிவாக்கத்திற்கு நான் வந்திருக்கிறேன்.

'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்' என்றார் அவ்வையார் அவர்கள். அந்தத் தமிழ் மூதாட்டியின் வழியில் 'எண்ணும் எழுத்தும்' இயக்கம் இங்குத் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

கொரோனா பெருந்தொற்றினால் பள்ளிகள் ஓராண்டுகளாக, ஏன் ஒன்றரை ஆண்டுகளாக மூடப்பட்டிருந்தது. அதனால் வகுப்பறையில் நேரடியாக கற்கும் வாய்ப்பைக் குழந்தைகள் பெறமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் கற்றலில் ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டது. அதனைக் குறைக்கவும், குழந்தைகளின் கற்றலை, அந்த ஆற்றலை அதிகப்படுத்தவும் 'எண்ணும் எழுத்தும்' என்ற இந்த முன்னோடித் திட்டம் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வழக்கமான படிப்புகள் மட்டும் போதாது, புதிய உத்தி தேவை என்பதை அரசு உணர்ந்ததன் அடிப்படையில்தான், இந்தத் திட்டத்தை நாம் இன்றைக்கு வகுத்திருக்கிறோம். ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய கற்றல் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்காக ஒரு உயர்மட்டக் குழுவும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதில் கல்வித்துறை சார்ந்த அலுவலர்களும், கல்வியாளர்களும்

இருப்பார்கள். தமிழ், ஆங்கிலம், கணக்கு ஆகிய ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்தனியாகக் குழுக்கள் உருவாக்கப்பட்டு இருக்கும். இவர்கள் தேசிய மற்றும் மாவட்ட அளவில் ஆலோசனைகளை நடத்தி இந்தத் திட்டத்தைச் சீர்செய்து, செழுமைப்படுத்துவார்கள். இது தொடர்பாகக் கருத்துக்கேட்பு கூட்டங்களும் நடத்தப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களிடமும் கருத்துக்கள் கேட்கப்பட்டிருக்கிறது. இதில் 92,386 தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். இவர்கள் சொன்ன கருத்துக்களை அடிப்படையாக வைத்தே 'எண்ணும் எழுத்தும்' இயக்கம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

''இளமையில் கல்'' என்றார் அவ்வையார் அவர்கள்.

'இளமையில் கற்காவிட்டால், முதுமையில் மண்' என்பார்கள். இளமைப் பருவத்தில் அவர்களுக்குள் புகுத்தப்படக்கூடிய அறிவு மிக எளிதாக நுழைந்துவிடும். ஒரு குழந்தை தனது ஐந்து வயதை அடைவதற்குள் 90 விழுக்காடு அளவுக்கு அதன் மூளை வளர்ந்து விடுகிறது என்று சொல்கிறார்கள்.

3 முதல் 5 வயதுக்குள் அதனுடைய சிந்தனை ஆற்றல் பெருகிவிடுகிறது. இந்தச் சிந்தனை ஆற்றல்தான் அந்தக் குழந்தையின் ஆளுமைத் திறனைத் தீர்மானிக்கிறது. எனவே, இத்தகைய தொடக்கப்பருவத்தில் கல்வியைத் தர வேண்டிய கடமை பெற்றோருக்கு உண்டு. அதனைத்தாண்டி அரசுக்கும் உண்டு.

அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் உயர்கல்வி என்பதே இந்தத் திராவிட மாடல் அரசினுடைய இலட்சியமாக, கடமையாக அமைந்திருக்கிறது.

'அனைவருக்கும் கல்வி' என்ற நோக்கத்திற்காகத்தான் திராவிட இயக்கமே உருவானது. திராவிட இயக்கத்தின் அடிப்படை நோக்கமான சமூக நீதி என்பதே கல்வித் தேவைக்காக உருவாக்கப்பட்டதுதான். நீதிக்கட்சி காலம் தொட்டு இன்றுவரை கல்விக்கு முக்கியத்துவம் தரும் இயக்கமாக நம்முடைய திராவிட இயக்கம் செயல்பட்டு வருகிறது.

தொடக்கக் கல்வியை வெறும் கல்வியாக மட்டும் பார்க்க முடியாது. அது வாழ்க்கையின் வழிகாட்டியாக, தன்னம்பிக்கையின் தூண்டுகோலாக அமைந்திருக்கிறது. இந்தச் சமூகத்தின் திறவுகோலாக ஒவ்வொரு மனிதருக்கும் இருப்பது இந்தத் தொடக்கக் கல்வி!

ஒவ்வொரு குழந்தைக்கும் தொடக்கக் கல்வி மட்டும் ஒழுங்காக, முறையாகக் கிடைத்துவிட்டால், அதன் பிறகு நடப்பது அனைத்துமே சிறப்பாக நடக்கும். அதனால்தான், 'திராவிட மாடல்' அரசு 'எண்ணும் எழுத்தும்' என்ற இந்த இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறது,

- 2025ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டில் உள்ள எட்டு வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் பிழையின்றி எழுதவும் படிக்கவும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பது நம்முடைய இலக்கு!
- 2025ஆம் ஆண்டுக்குள் எட்டு வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் எண்ணறிவு பெற்றவர்களாகத் திகழ வேண்டும் என்பது நம்முடைய இலக்கு!
- 2022–2023ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1, 2, 3 ஆகிய மூன்று வகுப்புகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.
- தமிழ், ஆங்கிலம், கணக்கு ஆகிய மூன்று பாடங்களுக்குப் பயிற்சி நூல்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது.
- தமிழ்வழி, ஆங்கிலவழி ஆகிய இரண்டு மொழி வழியாகவும் இந்த நூல்கள் தயாரிக்கப்பட்டிருக்கிறது.
- பாடமாக மட்டுமில்லாமல், எளிமையான செயல்பாட்டு வடிவத்திலும் பயிற்சி நூல்கள் தயாரிக்கப்பட்டிருக்கிறது.
- குழந்தைகளுக்கு அச்சம் ஏற்படாத வகையில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இதற்காக 'எண்ணும் எழுத்தும்' செயலி உருவாக்கப்பட்டுள்ளது.
- இப்பாடங்களை எப்படிக் கற்பிக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகளும் இணைக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாடமும் நடத்துவதற்கு ஏற்றவாறு வகுப்பறைக் களம் அமைய வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.
- ஆடல், பாடல், கதையாகச் சொல்லுதல், நடித்துக் காட்டுதல், பொம்மலாட்டம், கைவினைப் பொருட்கள் எனப் பல்வேறு வடிவங்களில் இப்பாடங்கள் பயிற்றுவிக்கப்பட இருக்கின்றன.
- இதற்கான காணொளிகளும் வழங்கப்பட உள்ளன.

இப்படிப் பல்வேறு வகையில் இத்திட்டம் செதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் வடிவமைப்பு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துக் கொண்டிருக்கிறது. இதனை வடிவமைத்திருக்கக்கூடிய இந்தத் துறையினுடைய அமைச்சர், அதேபோல் இந்தத் துறையினுடைய செயலர், ஆணையர், அதிகாரிகள், அலுவலர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் என அனைவரையும் நான் மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

இதன்மூலமாகத் தமிழகக் குழந்தைகளின் எதிர்காலம் ஏற்றம் பெறும் என்பதில் சந்தேகமில்லை!

குழந்தைகள் கவனச் சிதறல் இல்லாமல் கல்வி கற்பார்கள். கடந்த இரண்டு ஆண்டுகள் ஏற்பட்ட கற்றல் இடைவெளி குறைவது மட்டுமல்ல, மிகச்சிறந்த அளவில் அவர்கள் கற்றல் திறன் அதிகமாகும். கல்வி ஆர்வமும் அதிகமாகும். படைப்பாற்றல் அதிகமாகும். அறிவாற்றலும் அதிகமாகும். தன்னம்பிக்கையும் அதிகமாகும். ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிய அவர்களது பயணம் சிறப்பாகும்.




தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிக் குழந்தைகள் வியத்தகு உலக சாதனை ஒன்றைச் செய்திருக்கிறார்கள். இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாக Reading, Marathon என்கிற தொடர் வாசிப்பு இயக்கம் ஜூன் 1 முதல் 12 வரை நடத்தப்பட்டது. கூகுள் நிறுவனத்தின் Read aloud செயலியைப் பயன்படுத்தி நமது அரசுப் பள்ளிக் குழந்தைகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் 200 கோடி சொற்களை வாசித்து இருக்கிறார்கள். 14 இலட்சம் மாணவயர்கள் பங்கு கொண்ட இந்தச் சாதனையில் 81.04 இலட்சம் கதைகள் 7.04 இலட்சம் மணி நேரத்தில் வாசிக்கப்பட்டிருக்கின்றன. உலகிலேயே Read aloud செயலியில் இதுவரையிலான பயன்பாடுகள் இவ்வளவு பெரிய சாதனையை நிகழ்த்தப்பட்டதே கிடையாது. இச்சாதனையைச் செய்து தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்திருக்கக்கூடிய மாணவக் கண்மணிகளுக்கு வாழ்த்துக்களை மகிழ்ச்சியோடு நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக உழைத்தத் தன்னார்வலர்களையும் நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2025ஆம் ஆண்டுக்குள் நாம் அடைய வேண்டிய இலக்கை நிச்சயம் அடைவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அமைச்சர் முதல் ஆசிரியர்கள் வரை நான் சொல்ல விரும்புவது, இந்தத் திட்டம் எப்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறதோ, அதன் நோக்கம் சிதையாமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் உங்களுக்கு இருக்கிறது. இவ்வளவு சிறப்பான திட்டமாக அமைந்திருந்தாலும், அது தொடங்கப்படும்போது இருக்கும் ஆர்வமும், அக்கறையும் தொடர்ந்து இருந்தால்தான், இதில் இறுதிப் பயன் என்பதை நாம் முழுமையாக அடைய முடியும். எனவே, தொடக்க விழாவின்போது இருக்கும் அக்கறையும் ஆர்வமும் இறுதிவரை இருக்க வேண்டும். இன்று நடக்கும் தொடக்க விழாவைவிட, மூன்று ஆண்டுகள் கழித்து நடக்க இருக்கும் வெற்றி விழாவையும் நான் முக்கியமாகக் கருதுகிறேன். பள்ளிக்கல்வித் துறையின் வெற்றி மட்டுமல்ல, இந்த அரசின் வெற்றியும் அதில்தான் அடங்கி இருக்கிறது. விலைமதிக்க முடியாதது எது என்று கேட்டால் அது கல்வி மட்டும்தான். அத்தகைய கல்வி ஆற்றலை நம்முடைய குழந்தைகளுக்குத் தருவதன் மூலமாக நாம் ஆற்றும் இந்தப் பணி என்பது விலைமதிக்க முடியாதது ஆகும்!

கல்வி என்பதுதான் யாராலும் திருட முடியாத சொத்து என்று நான் ஏற்கெனவே பலமுறைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். அந்தச் சொத்தை உருவாக்கக்கூடிய திருமிகு திட்டம்தான் இந்த ‘எண்ணும் எழுத்தும்’.

தமிழ்நாட்டுக் குழந்தைகள் கல்வியில், அறிவாற்றலில் மேன்மை அடைய எத்தனையோ நல்ல பல திட்டங்களைத் தமிழக அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

- 🕮 இல்லம் தேடிக் கல்வி
- 🕮 நான் முதல்வன்
- 🕮 இளந்தளிர் இலக்கியத் திட்டம்
- 🕮 வகுப்பறை உற்றுநோக்குச் செயலி
- 🕮 கல்வி தொலைக்காட்சி

ஆகியவற்றின் வரிசையில் இந்த எண்ணும் எழுத்தும் திட்டமும் இணைந்திருக்கிறது.

கல்வியில் சிறந்த தமிழ்நாடாக, உயர்கல்வியிலும், ஆராய்ச்சிக் கல்வியிலும், அறிவாற்றலிலும், சிந்தனைத் திறத்திலும் உயர்ந்த தமிழ்நாடாக மாறுவதற்கான அனைத்துத் திட்டங்களையும் நாம் வகுத்துச் செயல்படுத்துவோம்.

கல்வி மட்டும்தான் நம் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும்! கல்வி மட்டும்தான் நமக்கு மதிப்பைத் தேடித் தரும்! கல்வியால் பெறக்கூடிய பெருமை மட்டும்தான் எதனாலும் அழிக்க முடியாதது!

கல்வியுரிமை என்பது நாம் போராடிப் பெற்றது! எனவே, கல்வியின் மீதான ஈடுபாட்டை வளர்த்துக்கொள்ளுங்கள்!

படிக்காமல் சாதித்த ஒருவரை யாராவது எடுத்துக்காட்டாகக் காட்டினால், அதற்கு இணையாகப் படித்துச் சாதித்தவர்கள் இலட்சம் பேரை நாம் காட்டமுடியும்!

‘படிக்காமலே சாதிக்கலாம்’ என்று யாராவது சொன்னால், அது தன்னம்பிக்கை ஊட்டுவது அல்ல; அது வெறும் ஆசை வார்த்தை!

இவர்களெல்லாம் படித்து முன்னேறுகிறார்களே என்ற எரிச்சலில் தவறான பாதையை கை காட்டும் சூழ்ச்சி அது!

எனவே குழந்தைகள், பள்ளிப் பிள்ளைகள் அனைவருக்கும் எனது அன்பான வேண்டுகோள் என்பது படிப்பு – படிப்பு – படிப்பு மட்டும்தான்.

இதனை முதலமைச்சராக அல்ல, ஒரு தந்தையாக உங்களில் ஒருவனாக இருந்து நான் கேட்டுக்கொள்கிறேன். “எண்ணும் எழுத்தும்” இந்த ஆட்சியின் கண்ணும் கருத்தும் என்பதைச் சொல்லி விடைபெறுகிறேன்.





# 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கான உயர்கல்விக்கு வழிகாட்டும் "கல்லூரிக் கனவு"



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 25.06.2022 அன்று "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கான உயர்கல்விக்கு வழிகாட்டும் "கல்லூரிக் கனவு" நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை.

இந்த இனிய காலை வேளையில், உங்களையெல்லாம் பார்க்கும்போது, எனக்கு உற்சாகமாக இருக்கிறது! கடந்த ஐந்தாறு நாட்களாக எனக்குக் காய்ச்சல் ஏற்பட்டு, அதனால் உடல் சோர்வான நிலையில் இருந்த எனக்கு, இந்த நிகழ்ச்சி அந்த சோர்வுகள் எல்லாம் நீங்கி, ஒரு புத்துணர்ச்சியையும் உற்சாகத்தையும் பெறக்கூடிய நிலையில் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

கள்ளம், கபடம் இல்லாத உங்கள் முகங்களில் இருக்கும் இந்த இயல்பான அழகுதான் இனிமையான அனுபவத்தைத் தருகிறது!

இந்த மாநிலத்தின் முதலமைச்சராக மட்டும் நான் இந்த நிகழ்ச்சிக்கு வந்துவிடவில்லை; உங்களையெல்லாம் என்னுடைய சொந்தப் பிள்ளைகள் என்று கருதி அந்த உணர்வோடு உங்களை நான் வாழ்த்த வந்திருக்கிறேன்.

அரசு அதிகாரிகள்கூட இதனை 'வழிகாட்டும் நிகழ்ச்சி' என்று சொன்னார்கள். நம்மைவிட, இந்தக் காலத்துப் பிள்ளைகள் மிக மிக விவரமானவர்கள்! (நான் சொல்வது உண்மைதானே…!, அதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள் தானே) எனவே உங்களுக்கு எல்லாமே தெரியும். ஏனென்றால், எல்லோர் கையிலும் இப்போது மொபைல் போன் வந்துவிட்டது. இல்லை…இல்லை… உலகமே உங்கள் விரல்நுனிக்கு இப்போது வந்துவிட்டது.

மேற்படிப்புகள் என்னென்ன உள்ளன என்பது பற்றியெல்லாம் நீங்கள் இணையத்தைப் பார்த்து அறிந்துகொள்ளக்






கூடிய சூழ்நிலை இப்போது வந்திருக்கிறது. இருந்தாலும், உங்கள் மதிப்பெண் அடிப்படையில் எந்தப் படிப்புகளைத் தேர்ந்தெடுக்கலாம், எதிர்கால வேலை வாய்ப்புகள் எப்படி இருக்கின்றன, இதையெல்லாம் எடுத்துக்கூறி நாங்களும் உங்களுக்கு வழிகாட்டுவதற்கான வாய்ப்புதான், இந்த நிகழ்ச்சி. நாங்கள் ஏற்படுத்தியுள்ள இந்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதனை உங்களுக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய நிகழ்ச்சியாகவும்தான் நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம்.

நீங்கள் உங்கள் வாழ்க்கையில், பள்ளிக் கல்வி என்ற ஒரு படியைத் தாண்டி, கல்லூரிக் கல்வியில் அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள். மாணவர்களாகிய நீங்கள்தான் இந்த மாநிலத்தின் அறிவுச் சொத்துக்கள்! உங்களை வளர்த்தெடுக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களுக்கு நான் முதல்வராக இருக்கலாம். ஆனால் நீங்கள் அனைவரும் ஒவ்வொரு துறையிலும் முதல்வனாக விளங்க வேண்டும் என்ற பரந்த உள்ளத்தோடு, பரந்த எண்ணத்தோடு தொடங்கப்பட்ட திட்டம்தான், 'நான் முதல்வன்' என்கிற இந்தத் திட்டம்! அதன் ஓர் அங்கமாகத்தான் இந்தக் 'கல்லூரிக் கனவு' நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பன்னிரெண்டாம் வகுப்பை முடித்தோம், கல்லூரியில் சேர்ந்தோம், பட்டம் வாங்கினோம், வேலையில் சேர்ந்தோம், கைநிறைய சம்பளம் வாங்கினோம் என்பதோடு உங்கள் கடமை முடிந்துவிடுவது இல்லை. எத்தகைய ஆற்றல் படைத்தவர்களாக நீங்கள் உயர்ந்தீர்கள், அத்தகைய ஆற்றலை வைத்து இந்தச் சமூகத்தை எப்படி மேம்படுத்த முயன்றீர்கள் என்பதுதான் முக்கியம்.

இதுதான், 'நான் முதல்வன்' திட்டத்தின் உண்மையான நோக்கம்! பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்றேன், மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்றேன், மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்றேன் என்று பெயர் எடுப்பது மட்டுமல்ல, கல்வித் திறனில் முதல்வன், அறிவாற்றலில் முதல்வன், படைப்புத் திறனில் முதல்வன், பன்முக ஆற்றலில் முதல்வன், ஒருவரை மதிக்கத் தெரிந்தவன், சமத்துவமாக நடக்கத் தெரிந்தவன், அனைவரும் பின்பற்றும் பண்பாட்டு அடையாளம் கொண்டவன், அனைவரையும் வழிநடத்தும் தலைமைத் திறன் பெற்றவன் என்று தமிழ்நாட்டு இளைஞர்களை, மாணவர்களை உயர்த்தும் திட்டம்தான் இந்த நான் முதல்வன் என்கிற திட்டம்! அந்த இலக்கை அடையவே இந்தக் கல்லூரிக் கனவு நிகழ்ச்சியை நாம் இங்கே நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அரசுப் பள்ளியில் படித்து, பல துறைகளில் மிகச் சிறந்த ஆளுமைகளாக உருவாகியவர்கள் பெயரை, என்னால் இங்குப் பட்டியலிட முடியும்.

அரசுப் பள்ளியில் படித்து, ஒவ்வொரு நாளும் செய்தித்தாளை விநியோகம் செய்தவர், இந்த நாட்டின் மிகச் சிறந்த குடியரசுத் தலைவர்களுள் ஒருவராக உருவானவர்தான் மிகச் சிறந்த விஞ்ஞானியாக இருந்த, ஏவுகணைத் தொழில்நுட்பம் முதல், பிரதமரின் அறிவியல் ஆலோசகர் உட்படப் பலவற்றிலும் சிறப்பாகச் செயல்பட்டு, இறுதியாக மக்கள் குடியரசுத் தலைவர் என்று போற்றப்பட்ட, அப்துல் கலாம் அரசுப் பள்ளியில் படித்தவர்தான்.

சந்திராயன் புகழ் மயில்சாமி அண்ணாதுரை அரசுப் பள்ளியில் படித்தவர்; இஸ்ரோ தலைவராக இருந்த சிவன் அரசுப் பள்ளியில் படித்தவர்!

ஏன்! இந்த மேடையை அமர்ந்திருக்கக்கூடிய, வரவேற்புரை ஆற்றிய நம்முடைய தலைமைச் செயலாளர் அரசுப் பள்ளியில் படித்தவர். காவல்துறை தலைமை இயக்குநர் அரசுப் பள்ளியில் படித்தவர்தான்.

அரசுப் பள்ளியில், அரசு உதவி பெறும் பள்ளியில் படித்து, அவரவர் துறையில் கோலோச்சிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசுப் பள்ளியில், தமிழ்வழியில் படித்தாலும், நிச்சயம் முன்னேற முடியும் என்பதற்கு, நம் கண்முன்னாலேயே மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக இருக்கிறார்கள்.

அனைவரும் படிக்க வேண்டும் என்பதற்காக உருவான இயக்கம்தான் நம்முடைய திராவிட இயக்கம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அதற்கான வாசற்படிதான் சமூகநீதி! அந்தச் சமூக நீதியை, இடஒதுக்கீட்டு உரிமையைச் சட்டமாக்கி வித்திட்டது, திராவிட இயக்கத்தின் தலைமகனான நீதிக்கட்சி!

'எப்படியாவது படித்துவிடு, எங்காவது போய் முன்னேறி விடு' என்று தந்தை பெரியார் அவர்கள், நம்முடைய கல்வி உரிமையை வென்றெடுக்க இந்தச் சமுதாயத்துக்கு எழுச்சியூட்டினார். அவரால் 'பச்சைத் தமிழர்' என்று போற்றப்பட்ட பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தமிழகம் முழுவதும் பள்ளிகளைத் திறந்தார். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் கல்லூரிகளை, பல்கலைக்கழகங்களை உருவாக்கினார். இன்று நாங்கள் உயர்கல்வியை, ஆராய்ச்சிக் கல்வியை ஊக்கப்படுத்தி வருகிறோம்.

பள்ளிக் கல்வியாக இருந்தாலும், உயர்கல்வியாக இருந்தாலும், திறமை மற்றும் அறிவுசார் கல்வியாக அதனை மாற்றிக் காட்டி வருகிறது நம்முடைய தமிழ்நாடு அரசு. இந்தியாவில் மற்ற மாநிலங்களைவிடத் தமிழகம் உயர, இதுதான் காரணமாக அமைந்திருக்கிறது. மிக அதிகளவு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக

தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

கல்வி அறிவு விகிதம் என்பது தேசிய சராசரியைவிட அதிகம்! கல்வித் தரம் என்பதும் மற்ற மாநிலங்களைவிட அதிகம்! கல்வியில் உயர்ந்த தமிழ்நாடாகத் தற்போது விளங்குகிறது! உலகமெங்கும் தமிழர்கள், உயர்ந்த பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள். இதனை மேலும் மேலும் உயர்த்திக் கொண்டே போகவேண்டும். அதற்கான கல்விக் கொள்கையைத்தான் நாம் இதுநாள் வரை கடைப்பிடித்து வருகிறோம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மாநிலங்களில், தமிழ்நாட்டுக்கு இணையான கல்விக் கொள்கை எந்த மாநிலத்திலும் இல்லையென்றே சொல்லலாம்! இதனை இன்னும் செம்மைப்படுத்தி, கல்வியில் சிறந்த தமிழ்நாடாக ஆக்குவதற்காகத் தீட்டப்பட்ட திட்டம்தான் 'நான் முதல்வன் திட்டம்'. அந்தத் திட்டத்தின்படிதான் கல்லூரிக் கனவு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பன்னிரெண்டாம் வகுப்பை முடித்திருக்கும் நீங்கள், அடுத்த கட்டத்துக்கு உயரப் போகிறீர்கள். பள்ளியில் இருந்து கல்லூரிக்கு உயரப் போகிறீர்கள். காலேஜ் ஸ்டூடண்ட் என்று கெத்தாக வலம் வரப் போகிறீர்கள்.

பள்ளிக்கூடங்களில் இருந்தளவுக்கு உங்களுக்குக் கட்டுப்பாடுகள் இருக்காது என்று சொன்னாலும், கல்லூரிக் காலத்தில் உங்களுக்கான பொறுப்புகள் அதிகம் ஆகிவிடும். அதை மறந்துவிடக்கூடாது. எனவே, பள்ளிக் கல்விக் காலத்தை எப்படிப் பயன்படுத்தினீர்களோ, அதேபோல, நீங்கள் கல்லூரிக் காலத்திலும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரியையும், படிப்பையும் கவனமாகத் தேர்ந்தெடுப்பது எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியம், கல்லூரிக் காலத்தில், கவனத்தைச் சிதறவிடாமல் இருப்பதுதான் மிக முக்கியம். அந்த வகையில், நீங்கள் படிக்கும் ஒவ்வொரு நாளும், படிப்பில் கவனம் செலுத்துவது மட்டுமல்ல, நீங்கள் கல்லூரியில் அடியெடுத்து வைப்பதற்குக் காரணமான, உங்கள் பெற்றோரின் கனவையும் உழைப்பையும், நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டின் மாணவச் செல்வங்களுக்கும், பெற்றோர்களுக்கும் என்னுடைய அன்பான ஒரு வேண்டுகோள். பொறியியல், மருத்துவம் என்பது மிகச்சிறந்தபடிப்புகள்தான்.ஆனால்,அந்தஇரண்டு கனவுகளோடு மட்டும் நின்றுவிட வேண்டாம். இன்று வாய்ப்புகள் எல்லாத் துறைகளிலும் ஏராளமாகக் கொட்டிக் கிடக்கின்றன. ஒவ்வொரு துறையிலும் படித்து முன்னேறி, உழைப்பைக் கொடுத்து வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் மிக அதிகமாக இருக்கின்றன. ஆகவே, கிடைக்கின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தி, அந்தந்தத் துறையில் மிகச்சிறந்த வல்லுநர்கள் ஆவதற்கு, கல்வி நிறுவனங்கள் அளிக்கும் பாடப்பிரிவுகள் குறித்தான ஒரு வழிகாட்டி நிகழ்ச்சிதான் இது. பல திறன்கள், தனித்திறன்கள் கொண்டிருக்கக்கூடிய சமுதாயத்தை உருவாக்குவதே நம் நோக்கம்.



கல்லூரிக் கனவு நிகழ்ச்சிக்காகச் சென்னையில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் மேனிலைப் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு படித்து முடித்திருக்கக்கூடிய மாணவ, மாணவியர்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். நேரு விளையாட்டு அரங்கமே உங்களால் மகிழ்ச்சிக் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. உங்களால் இந்த அரங்கமே அதிர்ந்து கொண்டு இருக்கிறது.

உலக அளவில் ஒவ்வொரு துறையிலும், வெற்றி பெற்றவர்களை உற்றுப் பாருங்கள். அவர்கள் அனைவருமே, தங்களுக்குப் பிடித்தமான துறையைத் தேர்ந்தெடுத்திருப்பவர்களாக, அந்தந்தத் துறையில், அளவுக்கதிகமாக கடுமையாக உழைத்திருப்பார்கள். பிடித்த துறையைத் தேர்ந்தெடுப்பதும், கடும் உழைப்புமே ஒவ்வொருவருடைய வெற்றிக்கு மிகமிக முக்கியமான காரணமாக அமைந்திருக்கிறது. ஆகவே நீங்களும், உங்களுக்குப் பிடித்தமான துறையைத் தேர்ந்தெடுங்கள்! அதில் அதிகமான உழைப்பைக் கொடுங்கள்! உங்களுடைய வெற்றி நிச்சயம்!

இங்கே, உங்களுக்கான அடுத்தகட்டத் திட்டங்கள் குறித்து இங்கே விளக்கிப் பேச இருக்கிறார்கள். இங்கே வல்லுநர்கள் ஒவ்வொருவராக வந்து உங்களுக்கு விளக்கக்கூடிய வகையில் தகவல்களைச் சொல்லப் போகிறார்கள். நான் மாணவக் கண்மணிகளை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன், அவர்கள் சொல்லக்கூடிய விளக்கங்களை, விவரங்களை, குறிப்புகளை நீங்கள் தயவு செய்து குறிப்பெடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இங்குப் பல்வேறு கல்வி நிறுவனங்களின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன, நான்கூட அதைப் பார்த்துவிட்டுத்தான் இந்த மேடைக்கு வந்தேன். அவற்றையும் நீங்கள் தெளிவாக, பொறுமையாக அதைப் பார்த்துத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த 'நான் முதல்வன் – கல்லூரிக் கனவு' நிகழ்ச்சியானது, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஜூன் 29, 30 மற்றும் ஜூலை 1, 2 ஆகிய நாட்களில் நடக்கப் போகிறது.

தமிழகத்தில் ஏராளமான கல்வி நிலையங்கள் உள்ளன. இந்தியாவில் தலைசிறந்த கல்லூரிகளாக 100 கல்லூரிகளைத் தேர்வு செய்தால், அதில் 30 கல்லூரிகள் தமிழ்நாட்டில்தான் இருக்கிறது என்று நான் இங்குப் பெருமையோடு பதிவு செய்ய விரும்புகிறேன். எனவே கல்லூரிப் பட்டம் என்பதை எளிதாக அனைவரும் பெறுவதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. ஆனால், அந்தப் பட்டத்தைத் தாண்டிய தனித்திறமை

இருந்தால்தான் நீங்கள் தனித்து ஜொலிக்க முடியும், பிரகாசிக்க முடியும். அதற்குத் தன்னம்பிக்கை வேண்டும். நம்மால் முடியும் என்ற தைரியம் வேண்டும். நல்ல மொழியாற்றல் வேண்டும்.

தமிழ் மொழியாக இருக்கக்கூடிய நம்முடைய தாய்மொழியான தமிழிலும் உலக மொழியாக இருக்கக்கூடிய ஆங்கிலத்திலும் எழுத, பேச, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அதே நேரத்தில் அது பகுத்தறிவாக இருக்கவேண்டும் என்பதுதான் மிக மிக முக்கியம், அதை மறந்துவிடக் கூடாது.

விரக்தி மனோபாவம் என்பது ஒருபோதும் இருக்கக்கூடாது. உங்களோடு மற்றவர்களை ஒப்பீடு செய்யாதீர்கள். இந்தப் பண்பு நலன்கள் எல்லாம் ஒருவருக்கு நல்ல கல்வியால்தான் அமைந்திட முடியும். அத்தகைய கல்வியை, உயர்கல்வியைப் பெற வழிகாட்டியாக இருக்கப்போவதுதான், இந்தக் 'கல்லூரிக் கனவு' நிகழ்ச்சி!

அறிவை விரிவு செய்!
அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
அணைந்து கொள்!
உன்னைச் சங்கமம் ஆக்கு!
மானிட சமுத்திரம் நானெனக் கூவு

என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசன்.

உங்களுக்கு நான் சொல்வது இதுதான். இன்று முதல் புதிய மனிதர்களாக நீங்கள் ஆகிறீர்கள். வருங்காலச் சமுதாயம் உங்களுக்கு ஒளிமயமானதாக மாறப் போகிறது. உங்களது வாழ்வில் தென்றல் வீசப் போகிறது.

உங்கள் வாழ்க்கைக்கு ஒளியேற்றுவதற்கான ஒரு வாய்ப்பை நான் பெற்றமைக்காக உள்ளபடியே பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன், புளங்காகித உணர்வோடு உங்கள் முன்னால் கம்பீரமாக நான் நின்று கொண்டிருக்கிறேன்.

கல்லூரிச் சாலைக்குள் நீங்கள் செல்கிறீர்கள். கலையில், அறிவியலில், மருத்துவத்தில், பொறியியலில், சட்டத்தில் என உங்களது அறிவு மேம்பாடு அடையட்டும். உங்களின் வளர்ச்சியைப் பார்த்து ரசிக்கக்கூடிய, பெருமைப்படும் ஒரு தந்தையாக, நிச்சயம் நான் உங்களில் ஒருவனாக இருப்பேன் என்று உறுதியோடு கூறுகிறேன்.

2026ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தின் 2 மில்லியன் இளைஞர்களின் திறன் மேம்பாடு அடைய வேண்டும் என்று நான் அடிக்கடி சொல்லி வருகிறேன். அதில் நீங்களும் இடம்பெற்றுள்ளீர்கள். அதேபோல, 2030ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்று சொல்லி வருகிறேன். அதில் உங்கள் பங்கும் இருக்க வேண்டும். ஒரு மனிதனின் மாபெரும் சொத்து என்பது அவனது கல்விதான். அதனால்தான் அதனை யாராலும் திருட முடியாத சொத்து என்று நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன்! வாய்ப்புக் கிடைக்கும் இடங்களில் எல்லாம், கல்வியின் அவசியத்தை நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

கல்வி உரிமை நாம் போராடிப் பெற்றிருக்கிறோம், தயவுசெய்து அதை யாரும் மறந்துவிடக் கூடாது. கல்வியைச் சிறுமைப்படுத்திப் பேசக்கூடிய யாருடைய பேச்சையும் நீங்கள் காதில் வாங்காதீர்கள்! படிப்பில் கவனம் செலுத்துங்கள்! உயர்படிப்புகளையெல்லாம் கற்றுத் தேறுங்கள்! அறிவார்ந்த தமிழ்நாட்டு மக்கள் எனப் பார் புகழ நீங்கள் விளங்க வேண்டும்! அதுதான் நமக்கானப் பெருமை! உங்களையெல்லாம் 'அவையத்து முந்தியிருக்கச் செய்யும்' தந்தை எனும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். படியுங்கள்... படியுங்கள்... படியுங்கள்... பகுத்தறிவோடு சிந்தியுங்கள்... உங்கள் சிறகுகளை விரித்து, உலகம் என்னும் பரந்த வெளியில் சிறகடித்துத் திரியுங்கள்... உங்களுக்குப் பின்னால் வருபவர்களுக்கு நீங்கள் வழிகாட்டிகளாய் திகழுங்கள்... இன்றைக்கு அறிவு என்பதுதான் ஒரு மனிதனின் ஆற்றலாக அளவிடப்படுகிறது.

"Knowledge is one's power" என்பார்கள். ஏதோ ஒன்றில் உங்களது அறிவுக் கூர்மை பெறுமானால், அந்த அறிவு உங்களது வாழ்க்கையை வளமானதாக ஆக்கும். கல்வியில், படிப்பில், விளையாட்டில், கலைத்திறன்களில் முதல்வர்களை உருவாக்குவதுதான் இந்த 'நான் முதல்வன்' திட்டத்தின் நோக்கம்.

நம்முடைய இளைஞர்களில் பல முதல்வர்களை உருவாக்கும் இந்தத் திட்டத்துக்கு, நான் தமிழக முதல்வராக வரவில்லை! உங்களில் ஒருவனாகத்தான் வந்திருக்கிறேன். அந்த நாற்காலியில் ஒவ்வொருவரையும், "நான் முதல்வன்" என்று கம்பீரமாக நீங்கள் சொல்லி, உங்களுடைய துறையில் முதல்வராக நீங்கள் வீற்றிருந்து, அந்த நாற்காலியை அலங்கரிக்கச் செய்வதுதான் என்னுடைய கடமை!

சாதி, மதம், பணம், அதிகாரம், வயது, அனுபவம், குடும்பம், பதவி, நாடுகள், வளர்ச்சி ஆகிய அனைத்தின் தன்மையும், ஆளுக்கு ஆள், நேரத்துக்கு நேரம், நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. ஆனால், அறிவு மட்டும்தான் அனைத்தையும் கடந்து ஒரே அளவுகோலோடு அளவிடப்படுகிறது.

இங்குப் பிறந்த திருவள்ளுவர் உலக ஞானியாகப் போற்றப்படுவதும், ஜெர்மனியில் பிறந்த காரல் மார்க்ஸ் உலகச் சிந்தனைவாதியாக மதிக்கப்படுவதும்தான், அறிவுலகத்தின் ஆற்றல். கல்வியால் அடையும் புகழ்தான் நிலையானது, அதற்கான அறிவுலகப் பயணத்தின் அடுத்த கட்டத்துக்குள் நுழையும் எனது பிள்ளைகளை, ஒளிபடைத்தக் கண்ணினாய் வா வா வா என்று அழைத்து வாழ்த்துகிறேன்.

தவழும் குழந்தை தவறி விழுந்தால், தாங்கிப் பிடிக்கும் தாயின் கரங்கள்! அதே குழந்தை வளர்ந்து வெற்றிக் கொடி நாட்டும்போது, தாயின் கண்கள் 'வானமே எல்லை' என்று சுட்டிக்காட்டும்!

அந்த வகையில், இந்த நிகழ்ச்சி வெறும் வழிகாட்டி நிகழ்ச்சி மட்டுமல்ல! கல்வி, விளையாட்டு, கலைத்திறன், தொழில்நுட்பம் என்று ஒவ்வொரு துறையிலும் தமிழக இளைஞர்களை வெற்றியாளர்களாக, செதுக்கிய நிகழ்ச்சிதான் இது.

வாருங்கள்! உலகை வெல்லும்!
இளைய தமிழகத்தைப் படைப்போம்!
வாருங்கள்! உலகை வெல்லக்கூடிய
இளைய தமிழகத்தைப் படைப்போம்!

❖ ❖ ❖








# கோயம்புத்தூரில் ரூ.290 கோடியில் மேம்பாலம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 11.06.2022 அன்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் கோயம்புத்தூர் நகரில் ரூ.230 கோடி செலவில் இராமநாதபுரம் மற்றும் சுங்கம் முக்கிய சந்திப்புகளில் தே.நெ.எண். 67இல் கட்டப்பட்டுள்ள மேம்பாலம் மற்றும் அதே தேசிய நெடுஞ்சாலையில் ரூ.60 கோடி செலவில் கவுண்டம்பாளையம் சந்திப்பில் கட்டப்பட்டுள்ள மேம்பாலம் ஆகியவற்றைத் திறந்துவைத்தார்.

பொருளாதாரத்தின் அங்கங்களான விவசாயம், தொழில், வணிகம், சுற்றுலா போன்ற துறைகளின் மேம்பாட்டிற்குச் சாலை உட்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளைப் பராமரிப்பதும், மேம்பாடு செய்வதும், கிராமப்புறங்களுக்கு இணைப்புச் சாலை அமைப்பதும் நெடுஞ்சாலைத்துறையின் முக்கிய பணிகளாகும். தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத்துறை வாயிலாகத் தரமான, பாதுகாப்பான சாலை கட்டமைப்பினைச் சிறந்த முறையில் உருவாக்கி, பராமரித்து வருகிறது.

அந்த வகையில், இராமநாதபுரம் மற்றும் சுங்கம் சந்திப்பில் ரூ.230 கோடி செலவில் 3.15 கி.மீ. நீளத்திற்குக் கட்டப்பட்டுள்ள 4 வழித்தட மேம்பாலத்தை மக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.

இப்பாலம் திறக்கப்படுவதால், இராமநாதபுரம், ஒலம்பஸ், சுங்கம் ஆகிய மூன்று முக்கிய சந்திப்புகள் மற்றும் அல்வேனியா பள்ளி சந்திப்பு, சவுரிபாளையம் சந்திப்பு, புளியகுளம் பிரிவு சாலை சந்திப்பு, வானொலி நிலையம் சந்திப்பு, பந்தய சாலை சந்திப்பு, வாலாங்குளம் சாலை சந்திப்பு ஆகிய ஆறு இதர சந்திப்புகளிடையே உள்ள போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, சிக்னல், சந்திப்புகளில் வாகனங்கள் நின்று செல்வதால் ஏற்படும் காலதாமதமும் தவிர்க்கப்படும். அத்துடன் விபத்துக்களைத் தவிர்ப்பதற்கும் இது உதவும். மேலும், சிங்காநல்லூரிலிருந்து அரசு மருத்துவமனை, இரயில் நிலையம், நகர்மண்டபம், உக்கடம் ஆகிய பகுதிகளுக்கு மக்களால் போக்குவரத்து நெரிசலின்றி எளிதாகச் செல்ல முடியும். இதன்மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்பெறுவர்.

மேலும், கோயம்புத்தூர் நகரில், கவுண்டம்பாளையம் சந்திப்பில் ரூ.60 கோடி செலவில் 1.17 கி.மீ. நீளத்திற்குக் கட்டப்பட்டுள்ள 4 வழித்தட மேம்பாலத்தை மக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.

இப்பாலம் திறக்கப்படுவதால், கவுண்டம்பாளையம், நல்லாம்பாளையம் சாலை சந்திப்புகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் குறையும். இதன்மூலம் கோவையிலிருந்து மேட்டுப்பாளையம், குன்னூர், ஊட்டி, கூடலூர், மைசூர் செல்லும் வாகனங்கள் எளிதாகச் செல்ல முடியும்.

❖ ❖ ❖

# அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் 14.06.2022 அன்று, தலைமைச் செயலகத்தில், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொழில்நுட்ப மையங்களாகத் தரம் உயர்த்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்கும், புனேவில் உள்ள டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் திறன் மேம்பாடு அவசியமாகும். தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மாநிலத்தில் உள்ள 91 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் வாயிலாகத் தொழிற்சாலைகளின் தேவைக்கேற்பத் திறன் பெற்ற தொழிலாளர்களைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

**அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்ப மையங்களாகத் தரம் உயர்த்துதல்**

2021–2022ஆம் ஆண்டு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் மானியக் கோரிக்கையில், தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்துச் செல்லும் பயிற்சியாளர்கள், தொழில் நிறுவனங்களில் உடனடி வேலைவாய்ப்புப்பெறும் வகையில், பயிற்சியின் தரம் உயர்த்திட, அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் புனரமைக்கப்பட்டு, நவீனத் தொழில்நுட்ப இயந்திரங்கள் நிறுவப்பட்டு எதிர்காலத் தேவையினைப் பூர்த்தி செய்திட புதிய தொழிற்பிரிவுகள் தொடங்கப்படும் பயிற்றுநர்களுக்கு முன்னணி நிறுவனங்களில் பயிற்சி வழங்கிட தனியார் நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களையும் உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்ப மையங்களாகத் தரம் உயர்த்தி அவர்களுக்கான வேலைவாய்ப்புகள் பன்மடங்கு உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்கும், புனேவில் உள்ள டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்**

அதன்படி, தற்போது 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொழில் 4.0 தரத்திலான நவீனத் திறன் பயிற்சிகள் வழங்கும் வகையில், தொழில்நுட்ப மையங்களாகத் தரம் உயர்த்த தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்கும், புனேவில் உள்ள M/s.TATA Technologies Ltd., நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்மூலம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் முன்னணித் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள், மென்பொருட்கள் ஆகியவை ரூ.2,877.43 கோடி செலவில் நிறுவப்பட்டுத் தொழில்நுட்ப மையங்களாக மாற்றப்படவுள்ளன.

இதன்மூலம், ரோபோட்டிக்ஸ், இண்டஸ்ட்டிரியல் ஆட்டோமேஷன், மேனுஃபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல், அட்வான்ஸ்டு மேனுஃபேக்சரிங், மின்சார வாகனங்களுக்கான மெக்கானிக், இண்டர்நெட் ஆப் திங்க்ஸ், அடிட்டிவ் மேனுஃபேக்சரிங், இண்டஸ்ட்டிரியல் பெயிண்டிங், அட்வான்ஸ்டு வெல்டிங் போன்ற நவீனத் திறன் பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இதனால் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர்கள் பயிற்சி பெற்று, உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள முன்னணி நிறுவனங்களில் பணியமர்த்தப்படும் வாய்ப்புகள் ஏற்படும். மேலும், தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள், பல்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பொறியியல் கல்லூரி மாணவர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனப் பணியாளர்கள் ஆகியோர்களும் பயிற்சி பெற்றுப் பயன்பெறுவர்.









# தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்ட
# Valar 4.0 வலைத்தளம்

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. த.மனோ தங்கராஜ் ஆகியோர் 15.06.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் சார்பில், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்ட Valar 4.0 வலைத்தளத்தை (valar.tn.gov.in) தொடங்கிவைத்தனர்.

தேசிய அளவிலான உயர்திறன் மையங்கள் மற்றும் தொழில் முனைவோர்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகள், தொழிலாளர்களைக் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாடு உள்ளது. இதில், குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு மிக அதிகமாகவுள்ளது.

மாநிலத்தில் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் திறனை மேம்படுத்தவும், உற்பத்தியைப் பெருக்கவும், நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவும், கருத்துக்களைப் பரிமாறவும், பிரச்சினைகள், சவால்களுக்குத் தீர்வுகாணவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் “2030ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் $ பொருளாதாரம்” என்ற இலக்கை அடையவும், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின்கீழ்ச் செயல்படும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை Valar 4.0 வலைத்தளத்தை உருவாக்கியுள்ளது.

இந்த வலைத்தளத்தில், குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களின் விவரங்கள், திட்டங்கள் சம்பந்தமான தகவல்கள் கிடைக்கும்.

இவ்வலைத்தளத்தில் தொழில் துறையினர், சேவை வழங்குநர்கள், கல்வி நிறுவனங்கள், உணவு பதப்படுத்துதல், மென்பொருள், வன்பொருள், பொருட்களின் தொகுப்புத் தேவைகள் (Packaging Requirements) போன்ற பல்வேறு பிரச்சினைகள், சிக்கல்கள், சவால்களுக்கு யோசனைகள், தீர்வுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் வரை 242 நிறுவனங்கள் Valar 4.0 வலைத்தளத்தில் பதிவு செய்துள்ளனர். 29 நகரங்களிலிருந்து 122 பயனர்கள் தங்களின் பெயர், நிறுவனங்களின் பெயர், தொடர்புகொள்ளும் விவரங்களைப் பதிவு செய்துள்ளனர். 279 சேவைகள், 20 திட்டங்கள், 389 நிபுணர்களின், விவரங்கள் இந்த வலைத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த வலைத்தளத்தைத் தமிழ்நாடு மின்னாளுமை முகமை, சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் (IITM) உறுதுணையுடன் வடிவமைத்து உருவாக்கியுள்ளது. ●






# தங்க முதலீட்டுப் பத்திரம்



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.06.2022 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் உள்ள பயன்பாட்டில் இல்லாத பலமாற்றுப் பொன் இனங்கள் பிரித்து எடுக்கப்பட்டு, உருக்கி சுத்த தங்கக்கட்டிகளாக மாற்றம் செய்யப்பட்டு, பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்யப்பட்டு, ரூ.10 கோடி மதிப்பீட்டிலான தங்க முதலீட்டுப் பத்திரத்தைக் கோயில் நிருவாகிகளிடம் வழங்கினார்.

கடந்த பத்து ஆண்டுகளாகத் திருக்கோயில்களில் காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்களில், திருக்கோயிலுக்குத் தேவைப்படும் இனங்கள் நீங்கலாக, ஏனைய இனங்களை மும்பையில் உள்ள ஒன்றிய அரசுக்குச் சொந்தமான தங்க உருக்காலையில் உருக்கி, சொக்கத் தங்கமாக மாற்றி, திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் வங்கிகளில் முதலீடு செய்து, அதிலிருந்து வரும் வட்டி மூலமாகத் திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், இப்பணிகளைக் கண்காணிப்பதற்கு மண்டலங்கள் மூன்று ஏற்படுத்தப்பட்டு, ஓய்வுபெற்ற மாண்பமை நீதியரசர்கள் தலைமையிலான குழுக்கள் மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் இந்து சமய அறநிலையத்துறையின் 2021–2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, திருக்கோயில்களில் பயன்பாட்டில் இல்லாத பலமாற்றுப் பொன் இனங்களை உருக்கி சுத்த தங்கக்கட்டிகளாகப் பெற்று வங்கியில் முதலீடு செய்தல் பணிக்காகத் தமிழ்நாட்டின் சென்னைப் பகுதி, திருச்சிராப்பள்ளி பகுதி, மதுரை பகுதி ஆகிய மூன்று பகுதிகளில் ஓய்வு பெற்ற மாண்பமை உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதியரசர்கள் தலைமையில் தனிக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

அதன்படி, சென்னை மண்டலம் – திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் ஓய்வு பெற்ற மாண்பமை உச்சநீதிமன்ற நீதியரசர் திரு.துரைசாமி ராஜு அவர்கள் தலைமையிலும், திருச்சிராப்பள்ளி மண்டலம் – சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ஓய்வு பெற்ற மாண்பமை உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.க.ரவிச்சந்திர பாபு அவர்கள் தலைமையிலும், மதுரை மண்டலம் – இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ஓய்வுபெற்ற மாண்பமை உயர்நீதிமன்ற நீதியரசர் செல்வி ஆர்.மாலா அவர்கள் தலைமையிலும், குழுக்கள் அமைக்கப்பட்டு, இத்திட்டம் 13.10.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கிவைக்கப்பட்டது.

மாண்புமிகு நீதியரசர் தலைமையில் பிரித்தெடுக்கும் பணி முடிக்கப்பட்டு, 27,250.500 கிராம் எடையுள்ள பலமாற்றுப் பொன் இனங்கள் 01.04.2022 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் மும்பையில் உள்ள ஒன்றிய அரசுக்குச் சொந்தமான உருக்காலைக்கு எடுத்துச் சென்று, அதனை உருக்கிச் சுத்தத் தங்கக்கட்டிகளாக மாற்றும் பொருட்டுச் சாத்தூர் கிளை பாரத ஸ்டேட் வங்கி மேலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட பொன் இனங்கள் 18.04.2022 அன்று மும்பையில் உள்ள ஒன்றிய அரசுக்குச் சொந்தமான தங்க உருக்காலையில் வங்கி அதிகாரிகள், மாண்புமிகு நீதியரசர் தலைமையிலான குழுவின் முன்னிலையில் சுத்தத் தங்கக்கட்டிகளாக மாற்றப்பட்டு மும்பை SBI BULLION BRANCHஇல் கடந்த 29.04.2022 அன்று நிரந்தர முதலீடு செய்யப்பட்டது. அவ்வாறு முதலீடு செய்யப்பட்ட சுத்தத் தங்கக்கட்டிகளின் மதிப்பு ரூ.10 கோடி ஆகும். இதன்மூலம் ஆண்டிற்கு ரூ.24 இலட்சம் வட்டித் தொகையாகத் திருக்கோயில் கணக்கில் வரவு வைக்கப்பட உள்ளது.

மேற்படி தங்க முதலீட்டுப் பத்திரத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் நிருவாகிகளிடம் 15.06.2022 அன்று ஒப்படைத்தார். இந்த முதலீட்டின் மூலம் பெறப்படும் வட்டித்தொகை அந்தந்த திருக்கோயிலின் திருப்பணிகளுக்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும்.

# திருக்கோயில் பணியாளர்களுக்குப் பணிக்கொடை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 28.06.2022 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பணியாற்றி ஓய்வுபெற்ற 69 திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் காலஞ்சென்ற திருக்கோயில் பணியாளர் ஒருவரின் வாரிசுதாரருக்கும் ரூ.2,70,09,752 பணிக்கொடை வழங்கிடும் அடையாளமாக 12 ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்குப் பணிக்கொடையும், மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், வல்லக்கோட்டை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மாமல்லபுரம், ஆளவந்தார் அறக்கட்டளை ஆகியவற்றில் பணியாற்றி, பணிக்காலத்தில் இறந்த 3 திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் குடும்பநல நிதியாக தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலை ஆகியவற்றை வழங்கினார்.



# புதுக்கோட்டை மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களுக்கு நினைவு மண்டபம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு – 22.06.2022

**த**மிழகத்தில் 300 ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட புதுக்கோட்டை சமஸ்தானத்தின் 9ஆவது மன்னரான ராஜா ராஜகோபால தொண்டைமான் அவர்கள் தனது பதவிக் காலத்தில் புதுக்கோட்டை மக்களின் நலனிற்காகக் கல்வி, போக்குவரத்து, விவசாயம், நீர்ப்பாசனம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை ஏற்படுத்தித் தந்த பெருமைக்குரியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மிகவும் பின் தங்கியிருந்த புதுக்கோட்டை மாவட்டத்தை முன்னேற்றுகின்ற வகையில் 1974ஆம் ஆண்டு தனி மாவட்டமாக அறிவித்தார். மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைத்திட ராஜா ராஜகோபால தொண்டைமான் அவர்கள் தான் வாழ்ந்த 99.99 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரண்மனை வளாகத்தை மிகவும் குறைந்த தொகைக்கு மகிழ்ச்சியுடன் அரசிற்கு வழங்கினார். அன்னாருக்குப் பெருமை சேர்க்கும் வகையில், மாமன்னர் அவர்களின் திருவுருவச் சிலையினை 14.03.2000 அன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்து, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மன்னர் இராஜகோபால தொண்டைமான் மாளிகை என்றும் பெயர் சூட்டினார்.

மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்நன்னாளில், மன்னரின் எளிமையையும், மக்களுக்கு ஆற்றியுள்ள அரும்பணிகளையும் நினைவுகூரும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் புதுக்கோட்டை நகரில் மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களின் அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

## நூற்றாண்டு விழாக் காணும் புதுக்கோட்டை மாமன்னர்



**பு**துக்கோட்டைச் சமஸ்தானத்தின் மறைந்த மாமன்னர் ஸ்ரீ பிரகதாம்மாள் தாஸ் H.H. ராஜா ராஜகோபால தொண்டைமான் அவர்களின் 100ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடுவது அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தமிழகத்தில் ஏறத்தாழ 300 ஆண்டுகள் (கி.பி. 1639 தொடங்கி 1948 வரை) பாரம்பரியம் கொண்ட புதுக்கோட்டைச் சமஸ்தானத்தின் வரலாறு நீண்டு நெடியது.

மாமன்னர் ரய தொண்டைமான் தொடங்கி தற்பொழுது நூற்றாண்டு விழாக் காணும் மன்னர் ராஜகோபால தொண்டைமான் வரையில் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தை உள்ளடக்கிய மக்களுக்கு ஆற்றியுள்ள தொண்டுகள் அளவிடற்கரியது. மன்னராக இருந்தபோதிலும் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்ததோடு, நம் இந்தியத் திருநாடு விடுதலைப் பெற்றவுடன் அன்றைய உள்துறை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் வேண்டுகோளை ஏற்றுத் தனது புதுக்கோட்டை சமஸ்தானத்தை இந்திய அரசுடன் இணைத்ததோடு மட்டுமின்றி, சமஸ்தானத்தின் கஜானாவிலிருந்த ரூ.53 இலட்சம் மதிப்புள்ள பணம், நகை உள்ளிட்ட அத்தனையும் ஒப்படைத்த பெருமைக்குரியவர். மேலும், புதுக்கோட்டை நகரின் மையப் பகுதியில் 99 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள அரண்மனை வளாகத்தினையும் அரசிடம் ஒப்படைத்தார்கள்.

புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கும், மன்னருக்கும் பெருமை சேர்க்கின்ற வகையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்னாரின் திருவுருவச் சிலையினை 14.03.2000 அன்று திறந்து வைத்தார்கள் என்பதையும் பெருமையோடு குறிப்பிட விரும்புகின்றேன். மாமன்னரின் நூற்றாண்டு விழா காணும் இந்நன்னாளில் மன்னரின் எளிமையும் அவர் மக்களுக்கு ஆற்றியுள்ள அரும்பணிகளும் நாம் அனைவரும் நினைவு கூரத்தக்கது.

அப்பெருமகனாரின் நூற்றாண்டு விழா 23.06.2022 அன்று கொண்டாடப்படும் இத்தருணத்தில் விழாக் குழுவினருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
(23.06.2022)

# இலங்கை மக்களுக்கு இரண்டாம் கட்ட அத்தியாவசியப் பொருட்கள்








இலங்கையில் தற்போது நிலவிவரும் கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப் பொருள் தட்டுப்பாட்டில் சிக்கித் தவித்து இன்னலுறும் இலங்கை மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தமிழக மக்களின் சார்பில் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

இதனிடையே இலங்கை நாட்டின் நிலைமை மிகவும் மோசமடைந்த நிலையில் இனியும் தாமதிப்பது நன்றாக இருக்காது என்ற அடிப்படையில் தமிழக அரசின் சார்பில் இலங்கை மக்களுக்கு உதவிபுரிந்திடும் வகையில்

1. ரூ.80 கோடி மதிப்பிலான 40 ஆயிரம் டன் அரிசி,
2. ரூ.28 கோடி மதிப்பிலான உயிர்காக்கக்கூடிய மருந்துப் பொருட்கள்,
3. ரூ.15 கோடி மதிப்பிலான குழந்தைகளுக்கு வழங்க 500 டன் பால் பவுடர்,

ஆகிய அத்தியாவசியப் பொருட்கள், உயிர்காக்கக்கூடிய மருந்துகள் ஆகியவற்றை அனுப்பி வைக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து உரிய அனுமதிகளை வழங்கவேண்டும் என்று ஒன்றிய அரசினை வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 29.04.2022 அன்று தனித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானத்தில் அறிவிக்கப்பட்டபடி, இலங்கை மக்களுக்கு உதவக்கூடிய வகையில் உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துப்பொருட்களை அனுப்பிவைக்கும் பணியினைச் சீரிய முறையில் செய்து முடித்திட அயலகத்தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தமிழ்நாடு அரசு மருந்துப் பொருட்கள் நிறுவனம், ஆவின் நிறுவனம் ஆகிய துறைகளை உள்ளடக்கிய உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது.

இலங்கைவாழ் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பிவைக்கும் நிகழ்வு முதற்கட்டமாக 18.05.2022 அன்று பிற்பகல் 5.00 மணியளவில் சென்னை துறைமுகத்தில் நடைபெற்றது. ரூ.30 கோடி மதிப்பிலான 9,045 மெட்ரிக் டன் அரிசி, ரூ.1.5 கோடி மதிப்பிலான 50 மெட்ரிக் டன் ஆவின் பால் பவுடர், ரூ.1.44 கோடி மதிப்பிலான 8 டன் அத்தியாவசிய மருந்துப்பொருட்கள் ஆகிய பொருட்கள் அடங்கியத் தொகுப்பு இலங்கை நாட்டிற்கு TAN BINH 99 என்ற சரக்குக் கப்பலில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து அனுப்பி வைத்தார். இதில் சிறப்பு நிகழ்வாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் மாதிரி தொகுப்பு இலங்கை துணைத்தூதர் முனைவர் வெங்கடேசுவரன் அவர்களிடம் வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக 22.06.2022 அன்று இரண்டாம் கட்டமாகக் காலை 10 மணியளவில் தூத்துக்குடி துறைமுகத்தில் VTC SUN என்ற சரக்குக் கப்பலின் மூலமாக ரூ.48.30 கோடி மதிப்பிலான 14,712 டன் அரிசி, ரூ.7.50 கோடி மதிப்பிலான 250 டன் ஆவின் பால் பவுடர், ரூ.11.90 கோடி மதிப்பிலான உயிர்காக்கும் மருந்துப் பொருட்கள் என மொத்தம் ரூ.67.70 கோடி மதிப்பிலான 15,000 மெட்ரிக் டன் அத்தியாவசியப் பொருட்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கும் நிகழ்வு நடைபெற்றது. ●

## மனிதம் போற்றுவோம்



இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் இன்னலுறும் மக்களுக்கு, தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, ரூ.67.70 கோடி மதிப்பிலான அத்தியாவசியப் பொருட்கள் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 22.06.2022 அன்று 2ஆம் கட்டமாக அனுப்பி வைக்கப்பட்டது.

அன்பின் வழியது உயிர்நிலை என்று மனிதம் போற்றுவோம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு

# மருத்துவப் படிப்பில் பதக்கங்கள் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு முதல்வர் வாழ்த்து






**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 24.06.2022 அன்று தலைமைச் செயலகத்தில், 2016ஆம் ஆண்டு நீட் தேர்வு அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்னர் மாநில பாடத்திட்டத்தின்படி அரசு மருத்துவக் கல்லூரிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டு 2022ஆம் ஆண்டு இளங்கலை மருத்துவப் படிப்பை நிறைவு செய்து, மருத்துவப் படிப்பில் பதக்கங்கள், பாராட்டுச் சான்றிதழ்களைப் பெற்ற 28 மாணவ, மாணவியர்களைப் பாராட்டி வாழ்த்தினார்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் மருத்துவ மாணவர்களுக்கு அரசு பல்வேறு சலுகைகள் அளித்து அவர்களை ஊக்குவிக்கிறது. இங்குப் படிக்கும் மாணவர்கள், தங்களின் திறமையை இந்திய அளவில் வெளிப்படுத்தி வருகின்றனர். மாநிலப் பாடத் திட்டத்தில் படித்து மருத்துவப் படிப்பில் சேர்ந்த மருத்துவ மாணவர்கள், திறமையாகப் படித்து, அரசு மருத்துவமனைகளில் ஏழை மக்களுக்கு மருத்துவச் சேவையை வழங்கி வருகின்றனர் என்பதாலேயே தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட நீட் என்னும் நுழைவுத் தேர்வைத் தொடர்ந்து எதிர்த்து வருவதோடு, அதனை ரத்து செய்யவும் நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சிறந்தவர்கள் என்பதைப் பறைசாற்றும் விதமாக, மருத்துவப் படிப்பில் சிறந்து விளங்கி மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதக்கங்கள், பாராட்டு சான்றிதழ்கள் பெற்ற சென்னை அரசு மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி, சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி, சென்னை, ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி, மதுரை அரசு மருத்துவக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரி, சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி ஆகிய மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த 28 மாணவ, மாணவியர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாராட்டி வாழ்த்தினார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஸ்டெதாஸ்கோப், மருத்துவச் சிகிச்சை கையேடு அடங்கிய பெட்டகத்தை வழங்கினார்.

இம்மருத்துவ மாணவர்கள் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் தேர்வுகள் தவிர, ஒவ்வொரு துறையாலும் நடத்தப்படும் சிறப்புப் பதக்கத் தேர்வுகளிலும் பங்கேற்று மூன்று பதக்கங்களுக்கு மேல் வென்றவர்கள். இந்தப் பதக்கத் தேர்வுகள் எழுத்துத் தேர்வு, செயல்முறைத் தேர்வு, நேர்முகத் தேர்வு என மிகக் கடினமான முறைமைகளைக் கொண்டதாகும். அனைத்துப் பாடப்பிரிவுகளிலும் சிறந்து விளங்கிய மாணவர்களுக்குக் "கல்லூரியின் சிறந்த மாணவர்" என்ற சான்றிதழும் வழங்கப்படுகிறது.




# வேலூர் சி.எம்.சி. இராணிப்பேட்டை மருத்துவமனை வளாகம் திறப்பு

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 25.06.2022 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து இராணிப்பேட்டை மாவட்டம், கன்னிகாபுரத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள வேலூர் சி.எம்.சி. இராணிப்பேட்டை மருத்துவமனை வளாகத்தைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்துவைத்தார்.

இப்புதிய மருத்துவமனை வளாகம் 1,500 படுக்கை வசதிகளுடன், அவசர சிகிச்சை மையம், விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காக 6 பிரத்தியேக அறுவை சிகிச்சை அறைகள், கூடுதலாக 29 அறுவை சிகிச்சை அறைகள், 250 படுக்கை வசதிகளுடன் கூடிய தீவிரச் சிகிச்சைப் பிரிவு, புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு, இருதய சிகிச்சை மற்றும் ஆய்வகங்கள், 29 படுக்கை வசதிகளுடன் கூடிய எலும்பு, மஜ்ஜை மாற்றுச் சிகிச்சைப் பிரிவு, முழு வசதி கொண்ட இரத்த சேமிப்பு மற்றும் இரத்த நன்கொடையாளர் மையம், 50 டயாலிசிஸ் படுக்கை வசதிகள், உயர்நிலை நோய் கண்டறியும் மற்றும் சிகிச்சைக்கான கதிரியக்கவியல், அதிநவீன ஆய்வகங்கள் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், இவ்வளாகத்தில் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள், மின்சார விநியோகத்தில் முப்பது சதவிகித தேவையினைச் சோலார் பேனல்கள் மூலம் பூர்த்தி செய்யும் வசதி போன்ற பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவன புதிய அலுவலகம் திறப்பு



மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. த.மனோ தங்கராஜ் அவர்கள் 23.06.2022 அன்று, அண்ணாசாலை செங்கல்வராயன் மாளிகையில், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவன புதிய அலுவலகத்தைக் குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்துப் பார்வையிட்டார். உடன் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத் தலைவர் திரு. குறிஞ்சி என்.சிவக்குமார், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் / தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவன மேலாண்மை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. எ.கே.கமல் கிஷோர், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை தலைமைத் தொழில்நுட்ப அலுவலர் திரு. ராபர்ட் ஜெரார்ட் ரவி, இ.தொ.ப., ஆகியோர் உள்ளனர்.

# சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகள் ஆய்வு



**செ**ன்னையில் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள், 26.06.2022 அன்று சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்ட பணிகள் குறித்து நந்தனத்தில் இருந்து ஆலந்தூர் வரை மெட்ரோ இரயிலில் பயணம் செய்து, மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள பல்வேறு பயணிகளின் வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் வழித்தடம் நான்கில் ஒரு பகுதியான கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி வரையிலான 26.1 கிலோ மீட்டர் பகுதியில் நடைபெற்றுவரும் கட்டுமானப் பணிகளை நேரில் ஆய்வு செய்தார். இந்த வழித்தட பகுதியில் தெள்ளியகரம் மெட்ரோ இரயில் நிலையத்திற்கு அருகில் நடைபெறும் வழித்தட கட்டுமானம், கரையான்சாவடி நிலையத்திற்கு அருகில் நடைபெறும் அடித்தள தூண்கள், அதன் இணைப்புப் பணிகள் குறித்து ஆய்வு செய்தார். மேலும், கோலப்பன் சேரியில் அமைக்கப்பட்டுள்ள வார்ப்பு மைதானத்தில் 'யு' கர்டர், 'ஐ' கர்டர், தூண் மூடிகள் வார்ப்பதற்கு முந்தைய பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**திட்டத்தின் முக்கிய அம்சங்கள் :**

சென்னை மெட்ரோ இரயில் திட்டம்–2இல், வழித்தடம் 4இல் கலங்கரை விளக்கத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச்சாலை வரை 26.1 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்படுகிறது. போரூர்ப் புறவழிச்சாலை மெட்ரோ முதல் பூந்தமல்லி புறவழிச்சாலை மெட்ரோ வரையிலான 7.94 கிலோ மீட்டர் உயர்த்தப்பட்ட வழித்தடம் போரூர்ப் புறவழிச் சாலை சந்திப்பு தெள்ளியகரம், அய்யப்பன் தாங்கல், பேருந்து பணிமனை, காட்டுப்பாக்கம், குமணன்சாவடி, கரையான்சாவடி, முல்லைத் தோட்டம், பூந்தமல்லி பேருந்து நிலையம், பூந்தமல்லி புறவழிச்சாலை ஆகிய ஒன்பது மெட்ரோ இரயில் நிலையங்கள், பூந்தமல்லி பணிமனை இணைப்பு ஆகிய பணிகள் வழித்தடம் 4இல், இ.சி.வி 02 ஒப்பந்தத் தொகுப்பில் அடங்கும் எச்.சி.சி, கே.யி.சி கூட்டமைப்பு இந்தத் தொகுப்பின் ஒப்பந்த நிறுவனம் ஆகும்.

இத்திட்டத்தில் பொதுமக்கள் சாலையில் பாதுகாப்பாகச் செல்வதற்கு வழித்தட பகுதி முழுமைக்கும், தடுப்புப் பலகைகள் அமைத்தல், அடித்தளக் கட்டுமானம் இணைப்புத் தூண்கள், தூண் மூடிகள் நிறுவுதல், ஆகிய யூ–கர்டர் நிறுவுதல், தொடர்புடைய பணிகள் அடங்கும். இந்தத் திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு மொத்தம் 924 அடித்தளக் கட்டுமானங்கள் 154 இணைப்புகள் 116 தூண்கள் 31 தூண் மூடிகள், 29 யூ–கர்டர்கள் நிறுவுதல் போன்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

வெளிவட்ட சாலை ஒட்டிய கோலப்பன் சேரியில் வார்ப்பு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. இங்குத் தூண் மூடிகள் யூ–கர்டர்கள், ஐ–கர்டர்கள் வார்க்கப்படுகிறது. நகரத்தின் போக்குவரத்திற்கு இடையூறின்றி வார்க்கப்பட்ட கட்டுமானப் பொருட்கள் இரவில் எடுத்துச் செல்லப்பட்டு நிறுவப்படுகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாகக் காட்டுப்பாக்கத்தில் இருந்து முல்லைத் தோட்டம் வரை 2.15 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒருங்கிணைந்த பாதை மற்றும் மேம்பாலம், நெடுஞ்சாலைத்துறை பணியுடன் இணைந்து அமைக்கப்படுகிறது.






# திருப்பத்தூரில் 16,820 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 29.06.2022 அன்று திருப்பத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், திருப்பத்தூர் நகரத்தில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் உள்ளிட்ட ரூ.129.56 கோடி செலவில் முடிவுற்ற 28 திட்டப் பணிகளைத் திறந்துவைத்து, ரூ.13.66 கோடி மதிப்பீட்டிலான 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 16,820 பயனாளிகளுக்கு ரூ.103.42 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை :

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

நீண்ட நெடிய வரலாற்றினைக் கொண்டுள்ள நகரம், இந்த திருப்பத்தூர் நகரம். இந்தத் திருப்பத்தூரின் புகழை,



பெருமைகளைப் பற்றி நம்முடைய திரு. துரைமுருகன் அவர்களும், திரு. வேலு அவர்களும் மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சுமார் 1,600 ஆண்டுகள் பழமையானது எனவும், சோழ, விஜயநகர, ஹொய்சாள மன்னர்கள் ஆண்ட பகுதி எனவும் இந்த வரலாறு கூறுகின்றது.

விஜயநகரப் பேரரசின் ஆட்சியின்போது, பதினான்காம் நூற்றாண்டில் திரு—வன—புரம் என்ற பெயரில் இருந்த ஊர்தான், திருப்பத்தூர் எனப் பெயர் மாற்றம் அடைந்து இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. பத்துப் புனிதமான ஊர்கள் இருந்ததால் திரு—பத்து—ஊர் என அழைக்கப்பட்டு, பின்னர், அது திருப்பத்தூர் ஆனது எனவும் கூறப்படுகிறது. இத்தகைய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த புகழ்மிக்க மாவட்டத்து மக்களான உங்களைச் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன், பூரிப்பு அடைகிறேன்.

ஜவ்வாது, ஏலகிரி மலைத் தொடர்களால் சூழப்பட்ட, இயற்கை எழில் மிகுந்த மாவட்டம் இந்த மாவட்டம். பழங்குடி மக்கள் அதிகமாக வசிக்கும் மலைத்தொடர் இது. ஏலகிரி மலையில் உற்பத்தியாகும் காட்டாறு, மலை அடிவாரத்தில் கீழே இறங்கி, ஜலகம்பாறை அருவியாக உருவெடுக்கிறது. பொதுமக்கள் பல இடங்களிலிருந்து வந்து கண்டுகளிக்கக்கூடிய வகையிலும் இந்த இடம் அமைந்துள்ளது.

அப்படிப்பட்ட இயற்கை சூழ்ந்த மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவில் கலந்துகொண்டு, உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கக்கூடிய ஒன்றுபட்ட வேலூர் மாவட்டத்திற்கான, என்னதான் நீர்வளத்துறை அமைச்சராக இருந்தாலும், கழகத்தினுடைய பொதுச்



செயலாளராக இருந்தாலும், இந்த ஒன்றுபட்ட வேலூர் மாவட்டத்திற்கான அமைச்சர் யார் என்று கேட்டால் அண்ணன் துரைமுருகன்தான் என்று எந்த நேரத்திலும் சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை. எனவே, அப்படிப்பட்ட அவருக்கும், இந்த மாவட்டத்திற்கான பொறுப்பு அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய, எந்நாளும் பொறுப்பான அமைச்சராக இருக்கக்கூடிய திரு. எ.வ.வேலு அவர்களுக்கும், மாவட்டக் கழக நிருவாகத்திற்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அவரே சொன்னார், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர் அவர். எனவே, அந்த மாவட்டத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், திருப்பத்தூர் பொறுப்பைக் கொடுத்ததும், இங்கு வந்து தன்னுடைய சொந்த மாவட்டத்தைப் போல, பல்வேறு பணிகளை முடுக்கி விட்டிருக்கிறார் அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள்.

“நான் என்ன நினைப்பேன் என்பதை, நான் சொல்லாமலேயே, என் கண் ஜாடையைப் புரிந்து கொண்டு செயலாற்றுவதில் திரு.எ.வ.வேலு முன்னிலையில் இருக்கிறார்” என்று தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர் அவர்.

தலைவர் கலைஞர் அவர்களுடைய மனதை நிறைவு செய்வது என்பது சாதாரண காரியம் அல்ல, எளிதான செயல் அல்ல, நம் துரைமுருகன் அவர்களுக்குத் தெரியும். அவரோடு நெருங்கிப் பழகக்கூடியவர்களுக்குத் தெரியும். அவர் மனதை அறிந்து, புரிந்து, அதைப்போலவே செயல்படுத்திக் காட்டுவதும் எளிதான செயல் அல்ல. அதில் ஒரு சிலர்தான் சிறப்பாகச் செயல்பட்டு தலைவர் கலைஞரின் பாராட்டைப் பெற்றார்கள். அதில் எ.வ.வேலு அவர்களும் ஒருவர். அதனால்தான், ‘எதிலும் வல்லவர் வேலு; அதனால்தான் அவர் எ.வ.வேலு’ என்று நான் குறிப்பிட்டேன். ‘எ’ – எதிலும், ‘வ’ – வல்லவர். அத்தகைய எதிலும் வல்லவர் உங்கள் மாவட்டத்திற்குக் கிடைத்திருக்கிறார். அதனால், திருப்பத்தூர் – ‘திரு–புத்தூர்’ என்று சொல்லும் அளவுக்குப் புதியதாக இப்போது மாறிக்கொண்டு வந்திருக்கிறது. அவருக்குத் தோளோடு தோள் நின்று பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர், செயல்வீரர் திரு. தேவராஜி அவர்களுக்கும், அதேபோல, நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய என்னுடைய அருமைத் தம்பி திரு. கதிர் ஆனந்த் அவர்களுக்கும், தம்பி திரு.அண்ணாதுரை அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. நல்லதம்பி அவர்களுக்கும், திரு.வில்வநாதன் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் முதலில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 25ஆம் நாளன்று இந்த விழா நடந்திருக்க வேண்டும். ஆனால் கடந்த வாரம், லேசான காய்ச்சல் எனக்கு ஏற்பட்டு, அது முழுமையாகக் குணமாகாத காரணத்தால், மருத்துவர்கள் “ஒருசில நாட்கள் ஓய்வெடுப்பது நல்லது” என்று எனக்கு உத்தரவிட்டதால், அந்தக் குறிப்பிட்ட தேதியில் என்னால் வர முடியவில்லை.

ஆனால், இன்றைய நாள் புதிய உற்சாகத்தோடு உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன். மருந்து, மாத்திரைகளைவிட மக்கள் முகங்களைப் பார்க்கும்போது தான், எனக்கு உற்சாகமும் மலர்ச்சியும் ஏற்படுகிறது. உங்களது முகங்களைப் பார்த்ததும், உடல் சோர்வு நீங்கி, உற்சாகம் பிறக்கிறது. மக்களைச் சந்திக்கின்றபோது ஏற்படக்கூடிய உற்சாகத்திற்கு ஈடு, இணை எதுவும் கிடையாது.

அண்ணன் திரு.துரைமுருகன் சொன்னார், வருகிற வழியெல்லாம் மக்கள் கூட்டம் எப்படி வரவேற்றது என்பதைப் பற்றி திரு. வேலுவும் எடுத்துச் சொன்னார், திரு.காந்தி அவர்களும் குறிப்பிட்டுக் காட்டினார். உண்மைதான். எழுச்சியை மட்டுமல்ல, உணர்ச்சியை மட்டுமல்ல, வாழ்க என்ற அந்த முழக்கத்தை மட்டுமல்ல, சில தாய்மார்கள், சில இளைஞர்கள் என்னை நிறுத்தி, என் கையைப் பிடித்துக்கொண்டு கேட்டார்கள், “உடம்பு எப்படி இருக்கிறது, முதலில் அதைச் சொல்” என்று சொன்னார்கள். அதுதான் என்னுடைய மெய் சிலிர்த்துக் கொண்டிருக்கிறது. நான் சொன்னேன், நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா? இந்த ஆட்சி எப்படி நடக்கிறது? ஏதாவது குறை இருக்கிறதா? குற்றம் இருக்கிறதா? என்று சொல்லுங்கள் என்று கேட்டபோது, எந்தக் குற்றமும் கிடையாது, குறையும் கிடையாது, முதலில் நீங்கள் ஓய்வு எடுங்கள் என்றுதான் சொன்னார்கள். அவர்களுடைய சிரிப்பைப் பார்த்தேன்.

‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏழையின் சிரிப்பைக் காணும்போது, நாமும் உற்சாகம் அடைகிறோம் என்பதுதான் முழு உண்மை! இந்தத் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்டு இருக்கக்கூடிய 4 சட்டமன்றத் தொகுதிகளைச் சார்ந்திருக்கக் கூடிய 16,820 பயனாளி பெருமக்களுக்குப் பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.103.43 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை இப்போது இந்த மேடையில் நாம் வழங்கவிருக்கிறோம். அதாவது 16,820 குடும்பங்களின் கோரிக்கை இன்றைய நாள் நிறைவேற்றப்படவிருக்கிறது. இப்படி ஒவ்வொரு தேவைகளையும் தேடித்தேடி நிறைவேற்றி வரக்கூடிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் ரூ.109 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு, இந்த மேடைக்கு நாங்கள் வருவதற்கு முன்பு திறந்துவிட்டுத்தான் இங்கு வந்திருக்கிறோம். அந்தக் கட்டடத்தின் பெருமையைப் பற்றி நம்முடைய அமைச்சர்கள் சொன்னார்கள். மிகக் கம்பீரமாக இருக்கிறது. இதில் என்ன ஒரு பெரிய மகிழ்ச்சி என்றால், என்ன ஒரு பெரிய பெருமை என்றால், என்ன ஒரு சிறப்பு என்றால், குறித்த காலத்திற்கு முன்பே கட்டி முடித்து, அதை இன்றைக்கு நாம் திறந்து வைத்திருக்கிறோம். அதுதான் மிகப்பெரிய பெருமை.

அதேபோல், வாணியம்பாடி வருவாய்க் கோட்ட அலுவலர் அலுவலகம் ரூ.2.12 கோடி மதிப்பீட்டிலும், ஆதியூர் ராவுத்தன்பட்டியில் சமுதாயக் கூடமும், சோலூர் கிராமத்தில் கல்லூரி விடுதிகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் 16 சுகாதார நிலையங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. வாணியம்பாடியில் தொழிற்பயிற்சி அளிக்கும் மையம் தொடங்க அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இவை அனைத்தும் ஒரே விழாவாக இந்த விழா நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. கடந்த ஆட்சியாளர்கள், ஒரு திட்டத்துக்கு ஒரு விழா நடத்துவார்கள். ஆனால் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான், பல்வேறு திட்டங்களுக்கும் சேர்த்து ஒரே விழாவாக நாம் எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

ஒரு திட்டத்திற்கு ஒரு விழா எடுப்பதாக இருந்தால், ஒவ்வொரு மாவட்டத்திலும் 365 நாளும், தனித்தனியாக நாம் விழா எடுத்தாக வேண்டும். அந்தளவுக்கு ஏராளமான திட்டங்கள், அந்தத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த ஓராண்டுக் காலத்தில், இந்தத் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு இந்த அரசு செய்திருக்கும் பணிகளை நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

1,703 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. 'முதல்வரின் முகவரி' திட்டத்தின்கீழ் 2,218 மனுக்கள் பெறப்பட்டு, 1,741 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது. 85 இலட்சம் முறை கட்டணமில்லாப் பேருந்து பயணத்தைப் பெண்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். 20,518 பேரின் கூட்டுறவு நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 5 இலட்சம் பேர் 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின் மூலமாகப் பயனடைந்துள்ளார்கள். நான் சொல்வது இந்த திருப்பத்தூர் மாவட்டம்.

'இன்னுயிர் காப்போம்' திட்டத்தின் மூலமாக 196 பேரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.



'கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்' மூலமாக 10,963 பேர் பயனடைந்துள்ளார்கள். 3.13 இலட்சம் குடும்பங்கள், 4 ஆயிரம் ரூபாய் நிதி உதவி பெற்றுள்ளார்கள். 3.12 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் 14 வகையிலான மளிகைப் பொருட்களைப் பெற்றுள்ளார்கள். 3.22 இலட்சம் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு, 22 வகையிலான மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு, அதில் 25.52 இலட்சம் பேருக்குச் சோதனை செய்யப்பட்டுள்ளன. 2.85 இலட்சம் பேருக்கு நோய் எதிர்ப்புச் சக்தி மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பெற்ற, 11,978 பேருக்குக் காப்பீட்டு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளன. தேசிய முதியோர் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம், மகளிருக்கான பல்வேறு ஓய்வூதியங்கள் என சுமார் ரூ.70 கோடி அளவில் வழங்கப்பட்டுள்ளது.

1.89 இலட்சம் மரக்கன்றுகள் தரப்பட்டிருக்கின்றன. காய்கறித் தோட்டத் தளைகள் 7,000 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. 860 வேளாண் குடும்பங்களுக்கு வேளாண் உபகரணத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. நான்கு கோவில்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. 'நமக்கு நாமே' திட்டத்தின்கீழ் 3,750 பணிகள் நடைபெற்று வருகின்றன. 821 உழவர்களுக்கு புதியதாக மின் இணைப்பு தரப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் வாயிலாக இவ்வளவு பணிகளை நாம் செய்து முடித்திருக்கிறோம். ஆகவே, இந்த விழாவில் சில முக்கியமான அறிவிப்புகளை, நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய அளவிற்கு இருக்கக்கூடிய சில முக்கியமான அறிவிப்புகளை நான் இங்கு வெளியிட விரும்புகிறேன்.

விஷமங்கலம் கிராமத்தில் பாம்பாறு மீது பாலம், கொல்லக்குப்பம் கிராமத்தில் கானாறு மீது பாலம், வடம்பூங்குளம் கிராமத்தில் பாம்பாறு மீது பாலம், கொடுமாம்பள்ளிக் கிராமத்தில் பாம்பாறு மீது பாலம் ஆகிய பணிகள் உடனடியாகத் தொடங்க இருக்கின்றன. அது மட்டுமல்ல. ஏலகிரி மலையில் சாகச சுற்றுலாத்தலம் ஒன்று ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மற்றொரு சுற்றுலாத்தலமான ஆண்டியப்பனூர் அணையில் ரூ.1.03 கோடி மதிப்பீட்டில் படகு குழாம் மற்றும் பல வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. ஜலகம்பாறை அருவியில் பல்வேறு வசதிகளைச் செய்துத்தர, வனத்துறைச் சார்பில் திட்டப்பணிகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதற்கு விரைவில் அனுமதி அளிக்கப்படும்.

ஆம்பூர் அருகே உள்ள, ‘ஊட்டல்’ சரஸ்வதி கோயில், அங்குள்ள வற்றாத சுனை நீர் ஆகியவற்றை மேம்படுத்திட, சுற்றுலாத்துறை சார்பில் திட்டப்பணிகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு விரைவில் அனுமதி வழங்கப்படும்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஏலகிரி வேகமாக வளர்ந்து வரும் சுற்றுலாத்தலமாக விளங்குவதால், இங்குள்ள ஆரம்பச் சுகாதார நிலையம் கூடுதல் படுக்கை வசதிகள், மருத்துவ வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

திருப்பத்தூர் மாவட்டத்தில், உயர்கல்வியில் பின்தங்கியுள்ள நாட்றாம்பள்ளி வட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு, உயர்கல்வி பயில்வதற்கான கல்லூரி வசதிகள் இல்லாத நிலையைக் கருத்தில் கொண்டு, புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று தொடங்கப்படும்.

இப்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அவசிய, அவசரமான திட்டங்கள் எவை எவை என்பதைப் பட்டியலிட்டுப் பார்த்து, அதனை நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு நாம் தொடர்ந்து செய்து வருகிறோம்.

அனைவருக்குமான வளர்ச்சி, அனைத்துத்துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்து மக்களின் வளர்ச்சி இதுதான் ‘திராவிட மாடல்’ ஆட்சி, அதைத்தான் இன்றைக்கு நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தத் திராவிட மாடல் ஆட்சி என்பது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்குமான வெற்றிச் சூத்திரமாக அமைந்துள்ளது. எப்போதுமே இந்தியாவுக்கு வழிகாட்டும் மாநிலமாகத் தமிழ்நாடுதான் இருந்திருக்கிறது.

இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்தபோது, விடுதலை முழக்கத்தை முதன்முதலாக ஒலித்த மண் இந்தத் தமிழ்நாட்டு மண். அதுவும் உங்கள் மாவட்டத்திற்கு அருகில் இருக்கும் வேலூரில்தான் முதன்முதலில் புரட்சியே தொடங்கியது.

இன்றைக்கு இந்தியா முழுக்க சமூகநீதியின் குரல் ஒலிக்கிறது. பல்வேறு மாநிலங்களில் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. இந்தச் சமூகநீதித் தத்துவத்தை முதன்முதலாக 1920ஆம் ஆண்டே அமல்படுத்தியது தமிழ்நாடுதான்.

இன்றைக்கு இந்தியா முழுக்க மாநிலச் சுயாட்சிக் குரல் ஒலிக்கிறது. பா.ஜ.கட்சி நீங்கலாக அனைத்து மாநில முதலமைச்சர்களும் மாநில சுயாட்சிக்காகக் குரல் கொடுப்பவர்களாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாநில சுயாட்சிக்காக, 1974ஆம் ஆண்டே தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியவர்தான் நம்முடைய உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்கள்.

இன்றைக்கு இந்தியா முழுமைக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, 27 விழுக்காடு இடஒதுக்கீடு உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

இரண்டு நாட்களுக்கு முன்பு பிறந்தநாள் கொண்டாடினோமே, ‘சமூக நீதிக் காவலர்’ வி.பி.சிங் அவர்கள், இந்தியாவின் பிரதமராக இருந்தபோது, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த வைத்து, அவர்கள் மூலமாக இந்தியா முழுமைக்குமான பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாழ்வில் ஒளியேற்றினோம் என்று சொன்னால், இப்போதும் 27 விழுக்காட்டு இடஒதுக்கீட்டு உரிமையை, நமது சட்டப் போராட்டங்களின் மூலமாக உறுதி செய்து தந்திருக்கிறோம். இப்படி என்னால் அடுக்கிக் கொண்டே போக முடியும்.

அந்த வகையில் அரசியல் நெறிமுறைகளை மட்டுமல்ல, ஆட்சியியல் நெறிமுறைகளையும் இந்தியாவுக்கு வழங்கும் வழிகாட்டியாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கிறது. இப்போதும் நாம் அறிமுகம் செய்து வரும் எத்தனையோ நல்ல பல திட்டங்களைப் பல்வேறு மாநில அரசுகள் பின்பற்றி வருகின்றன. பெரும்பாலான மாநில அரசுகள் சமூக நீதி அரசுகளாக, மாநிலச் சுயாட்சி பேசக்கூடிய அரசுகளாக, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பல்வேறு சமூகநலத் திட்டங்களை அமல்படுத்தும் அரசுகளாகப் பெண்கள், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள் ஆகிய, விளிம்புநிலை மக்களைப் பற்றிக் கவலைப்படும் அரசுகளாகச் செயல்பட, வழிகாட்டும் அரசாகத் திராவிட கம்பீரத்தோடு சொல்லவேண்டும் என்று சொன்னால், அது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசுதான் என்பதை நான் அழுத்தந்திருத்தமாக குறிப்பிட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு பேரறிஞர் அண்ணா அவர்களது தலைமையில் முதன்முதலில் 1967ஆம் ஆண்டு அமைந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் மூன்று முத்தான திட்டங்களை நமக்குக் கொடுத்தார். ஆனால் காலம் அவரை நம்மிடம் இருந்து பிரித்தது. இரண்டே ஆண்டுகளுக்குள் நம்மிடமிருந்து அவரை பிரித்தது.

அதன் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய திட்டங்களால் உருவானதுதான் இந்த நவீன தமிழ்நாடு! இன்றைக்கு நாம் பார்க்கிறோமே இந்தத் தமிழ்நாடு, நவீனத் தமிழ்நாடாகப் பார்க்கிறோமே, இது தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு!

அப்போது, வெளிமாநிலத்தில் இருந்து வந்த பத்திரிகையாளர்கள், ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் இதனை ஆய்வு செய்துவிட்டுச் சொன்னார்கள், ‘திராவிட முன்னேற்றக் கழகம் தனது எல்லையைத் தமிழ்நாட்டுடன் சுருக்கிக் கொண்டாலும், அவை முன்னெடுக்கும் தத்துவங்கள் இந்தியா முழுமைக்கும் ஏற்றவாறு அமைந்திருக்கிறது’ என்று எழுதிக் காட்டினார்கள்.

அந்த அடிப்படையில்தான், நாம் தமிழ்நாட்டை ஆண்டாலும், நாம் முன்னெடுக்கும் திட்டங்கள்,

அமல்படுத்தி வரும் திட்டங்கள் இந்தியா முழுமைக்கும் அவசியமான, முக்கியமானவையாக அமைந்திருக்கின்றன.

இந்தியா முழுமைக்கும் வர வேண்டும் என்றால், இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் வளர வேண்டும். மாநிலத்தை ஆளும் முதலமைச்சராக இருப்பதால், நான் இப்படிச் சொல்கிறேன் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். சமீபத்தில் தமிழ்நாட்டிற்கு வந்தாரே இந்தியக் குடியரசு துணைத் தலைவர் திரு. வெங்கையா நாயுடு அவர்கள், இதைத்தான் வலியுறுத்திச் சொன்னார். ஒரு மாநிலம் வளர வேண்டும் என்று சொன்னால், அந்த மாநிலத்திற்கு உட்பட்டிருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களும் வளர வேண்டும். மாநிலத்தின் முதலமைச்சர் என்பதால், மாவட்டங்களை நான் மறந்துவிடவில்லை.

இப்போது, திருப்பத்தூர் மாவட்டத்திற்கான திட்டங்களை அறிவித்திருக்கிறேன் மாலையில், வேலூருக்குப் போகிறேன், நாளை, இராணிப்பேட்டைக்குப் போகிறேன். இப்படித் தொடர்ந்து மாவட்டத்துக்கான திட்டங்களை நான் அறிவிக்க இருக்கிறேன். இப்படி அனைத்து மாவட்டங்களையும் வளர்த்தெடுப்பதை முக்கியமாக நான் நினைக்கிறேன்.



மாவட்டங்களுக்கான பொதுவான திட்டங்களை அறிவித்தால் போதுமா? அதோடு கடமை முடிந்து விடுகிறதா? இல்லை! ஒவ்வொரு தனி மனிதருடைய தேவையையும் நிறைவேற்றியாக வேண்டும். அந்த வகையில்தான் அனைத்து மக்களிடமும் கோரிக்கை மனுக்களைப் பெற்று, அவற்றையும் நான் நிறைவேற்றிக் கொண்டு வந்திருக்கிறேன். இதுதான் நாம் இன்றைக்குப் பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிறோமே, திராவிட மாடல் ஆட்சி இதுதான்! இதுதான் இந்தத் திராவிட மாடல் ஆட்சியின் இலக்கணம்!

இந்த இலக்கணத்தில் இருந்து இம்மியளவும் மாறாமல் இந்த ஆட்சி தொடர்ந்து பீடுநடை போடும். அப்படி நடந்தால், ஐந்தாண்டுக் காலத்தில் மிகப்பெரிய மாற்றத்தைத் தமிழ்நாடு நிச்சயம் பெறும். உங்கள் ஒவ்வொருவருடைய குடும்பமும் வளம் பெற வேண்டும்; நல்வாழ்வு பெற வேண்டும், அதற்கு என்ன செய்ய வேண்டும்? நன்றாகக் கவனியுங்கள், உங்கள் குடும்பத்தில் உள்ள பிள்ளைகளை நல்லா படிக்க வைக்க வேண்டும்! படித்த பின்னர் அவர்கள் வேலை தேடித் தவிப்பதைத் தடுக்கத்தான், சமீபத்தில், மாணவர்களுக்கான கல்வி வேலைவாய்ப்பிற்கான சிறப்புத் திட்டமான “நான் முதல்வன்” என்ற திட்டத்தை நான் துவக்கியிருக்கின்றேன். “நான் முதல்வன்” என்றால் ஸ்டாலின் மட்டும் முதல்வன் இல்லை. இங்கே இருக்கக்கூடிய அத்தனை பேரும் முதல்வர்கள். இளைஞர்கள், மாணவர்கள் அத்தனை பேரும் முதல்வனாகத் தன்னைக் கருத வேண்டும்.

உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்கு அது பெரிதும் உதவும். வாழ்க்கை வழிகாட்டித் திட்டமாக, இளைஞர்களிடையே இந்தத் திட்டம் வரவேற்பை இன்றைக்குப் பெற்று வருகிறது. இப்படி, ஒவ்வொரு திட்டத்தையும், தமிழ்நாட்டு மக்களாகிய உங்கள் நலன் கருதியே, இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

உங்களின் வாழ்வு உயர, தமிழ்நாடும் உயரும். அத்தகைய பொற்காலத்தை உருவாக்குவதற்காகதான் எனது உடல் சோர்வைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல், நான் உழைத்துக்கொண்டு இருக்கிறேன். இன்னும் சொல்லட்டுமா, எனது சக்தியை மீறி உழைத்துக்கொண்டு இருக்கிறேன். நான் மட்டுமல்ல, அனைத்து அமைச்சர்களும் அப்படித்தான் செயல்பட்டு வருகிறார்கள். அமைச்சர்கள் மட்டுமல்ல, அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருமே அப்படித்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

முதலமைச்சர் பொறுப்பில் இருக்கின்ற நானும், அரசின் இளநிலைப் பொறுப்பில் இருக்கிற ஓர் அலுவலரும் ஒரே மாதிரியான நோக்கத்துடன் செயல்பட்டால், இந்த அரசுதான் சிறப்பான அரசாக விளங்கிடும். அத்தகைய அரசாக இன்றைய தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

இத்தகைய ஆட்சிக் காலமானது தமிழ்நாட்டின் பொற்காலம்! இந்தப் பொற்கால ஆட்சியைத் தொடர்வோம்... இந்தப் பொற்கால ஆட்சியைத் தொடர்வோம்... இந்தியாவுக்கே முன்மாதிரியான ஆட்சியாக இதனை மலரச் செய்வோம். மீண்டும் சொல்கிறேன், இது இந்தியாவுக்கே முன்மாதிரியான ஆட்சியாக மலரச் செய்வோம்... மலரச் செய்வோம் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

# ரூ.171.24 கோடியில்
# 5 புதிய தொழிற்பேட்டைகள்




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 27.06.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் வாயிலாக ரூ.171.24 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ள 5 புதிய தொழிற்பேட்டைகள், தண்டரையில் உள்ள ஒருங்கிணைந்த தொழில்நுட்ப ஜவுளி பூங்காவில் ரூ.2.22 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பொது வசதி கட்டடம் ஆகியவற்றைத் திறந்துவைத்து, புதிய தொழிற்பேட்டைகளின் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாடு மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கவும், அவைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு பொதுத்துறை நிறுவனமாக நிறுவப்பட்டது. புதிய தொழிற்பேட்டைகள், தொழில் முனைவோர் உடனடியாக தொழில் தொடங்க ஏதுவான வசதிகளை உள்ளடக்கிய அடுக்குமாடி தொழில் வளாகங்கள் உருவாக்குதல், தொழில்முனைவோர் குழுமங்களுக்கு பொது வசதி மையங்கள் ஏற்படுத்துதல், தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளைப் பராமரித்தல், மேம்படுத்துதல் போன்ற செயல்பாடுகளைத் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் வாயிலாகச் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், ஆலத்தூர் கிராமத்தில் 67.96 ஏக்கர் பரப்பளவில் ரூ.115.07 கோடி திட்ட மதிப்பீட்டில் 2,000 நபர்கள் நேரடியாகவும், 4,000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை பெறும் வகையில் 192 தொழில் மனைகளுடன் பகுதி–IIஇல் உருவாக்கப்பட்டுள்ள புதிய தொழிற்பேட்டை;

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பெரியகோளப்பாடி கிராமத்தில் 57.181 ஏக்கர் பரப்பளவில் ரூ.11.82 கோடி திட்ட மதிப்பீட்டில் 1,800 நபர்கள் நேரடியாகவும், 4,000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினைப் பெறும் வகையில் 171 தொழில் மனைகளுடன் உருவாக்கப்பட்டுள்ள புதிய தொழிற்பேட்டை;

சேலம் மாவட்டம், சேலம் தெற்கு வட்டம், பெரிய சீரகப்பாடி கிராமத்தில் 56.81 ஏக்கர் பரப்பளவில் ரூ.22.22 கோடி திட்ட மதிப்பீட்டில் 1,000 நபர்கள் நேரடியாகவும், 2,000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினைப் பெறும் வகையில், 79 தொழில் மனைகளுடன் உருவாக்கப்பட்டுள்ள புதிய தொழிற்பேட்டை;

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், இராசம்பாளையம் கிராமத்தில் 36.80 ஏக்கர் பரப்பளவில் ரூ.9.72 கோடி திட்ட மதிப்பீட்டில் 1,200 நபர்கள் நேரடியாகவும், 2,500 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினைப் பெறும் வகையில் 107 தொழில் மனைகளுடன் உருவாக்கப்பட்டுள்ள புதிய தொழிற்பேட்டை;

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம், ஆலங்குடி கிராமத்தில் 36.47 ஏக்கர் பரப்பளவில் ரூ.12.41 கோடி திட்ட மதிப்பீட்டில் 1,200 நபர்கள் நேரடியாகவும், 2,500 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினைப் பெறும் வகையில் 105 தொழில் மனைகளுடன் உருவாக்கப்பட்டுள்ள புதிய தொழிற்பேட்டை;

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், தண்டரைக் கிராமத்தில் உள்ள ஒருங்கிணைந்த தொழில்நுட்ப ஜவுளிப் பூங்காவில் 0.56 ஏக்கரில், 5,700 சதுர அடி கட்டட பரப்பில் வங்கி, உணவகம், மருந்தகம், நிருவாக அலுவலகம், கூட்டரங்கம் போன்ற வசதிகளுடன் தொழில்முனைவோர்களின் பயன்பாட்டிற்காக ரூ.2.22 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பொது வசதிக் கட்டடம்;

என மொத்தம், ரூ.171.24 கோடி மதிப்பீட்டில் 7,200 நபர்கள் நேரடியாகவும், 15,000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினைப் பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள 5 புதிய தொழிற்பேட்டைகள், ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொது வசதிக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.



# ஸ்போர்ட்ஸ் ஸ்டார்
# தென்னக விளையாட்டு மாநாடு







**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 28.06.2022 அன்று சென்னையில் 'தி ஹிந்து' குழுமத்தின் சார்பில் நடைபெற்ற ஸ்போர்ட்ஸ் ஸ்டார் தென்னக விளையாட்டு மாநாட்டில் கலந்துகொண்டு விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு ஸ்போர்ட்ஸ் ஸ்டார் விருதுகளை வழங்கி ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி அமைந்ததற்குப் பிறகு, அனைத்துத் துறைகளிலும் பல்வேறு முன்னெடுப்புகளைச் செய்து வருகிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அதிலும் குறிப்பாக ஒரு திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதும் உங்களுக்கு நன்றாகப் புரியும்.

அதாவது, அனைவருக்குமான வளர்ச்சி, அனைத்துத் துறையினுடைய வளர்ச்சி, அனைத்து மாவட்டத்தினுடைய வளர்ச்சி, அதையும் தாண்டி, அனைத்துச் சமூக வளர்ச்சி என்ற அடித்தளத்தில் நம்முடைய 'திராவிட மாடல்' ஆட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சி என்பதைத் தொழில் வளர்ச்சியாக மட்டும் சிலர் எடுத்துக்கொள்கிறார்கள். 'டெவலப்மெண்ட்' என்பதைத் தாண்டிய விரிவான பொருள், 'வளர்ச்சி' என்ற சொல்லுக்கு உண்டு. அந்த வகையில் தமிழ்நாடு அனைத்து வகையிலும், அனைத்துத் துறைகளிலும் மேம்பட்டு விளங்க முயற்சித்துக் கொண்டு இருக்கிறோம்.

அதில் ஒரு முக்கியமான துறைதான், விளையாட்டுத்துறை. அத்தகைய விளையாட்டுத்துறையிலும் முன்னோக்கிய பாய்ச்சலில் தமிழ்நாடு இன்றைக்குச் சென்றுகொண்டிருக்கிறது என்பதை நீங்கள் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

குறிப்பாக, வருகின்ற ஜூலை 28 அன்று 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி சென்னையில் நடப்பது நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு மிகப்பெரிய பெருமை என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். 200 நாடுகள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்க உள்ள செஸ் ஒலிம்பியாட் திருவிழா, முதன்முறையாக நம்முடைய சென்னை மாநகரில் நடைபெற இருக்கிறது.

2022ஆம் ஆண்டிற்கான போட்டியை, உக்ரைன் போர் காரணமாக, ரஷ்யாவில் நடத்தும் முடிவைக் கைவிடுவதாகச் சர்வதேச செஸ் கூட்டமைப்பு அறிவித்தது. எனவே, இந்தப் போட்டியைத் தங்கள் நாடுகளில் நடத்துவதற்குப் பல நாடுகள் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டன.

அகில இந்திய செஸ் கூட்டமைப்பு, இந்தியாவில் செஸ் ஒலிம்பியாட்டை நடத்த நாமும் முயற்சிகளை மேற்கொண்டோம். அப்போது நமது அரசு உரிய நேரத்தில், உரிய நடவடிக்கை எடுத்த காரணத்தால் அந்த வாய்ப்பு சென்னைக்குக் கிடைத்திருக்கிறது.



இந்தியாவில் நடப்பது இது முதல் முறை என்பதையும், அதையும் தாண்டிப் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், அந்த முதல் முறையும் நம்முடைய தமிழ்நாட்டில் நடப்பதுதான் நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய மகிழ்ச்சி.

விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் என 2,500 பேர் உலகம் முழுவதிலும் இருந்து அந்தப் போட்டிக்கு, நிகழ்ச்சிக்கு வர இருக்கிறார்கள்.

இதனால் சர்வதேச அளவில் தமிழகம் அனைவராலும் உற்றுநோக்கக்கூடிய ஒரு மாநிலமாக மாறப் போகிறது.

செஸ் ஒலிம்பியாட் விளையாட்டுப் போட்டியை நடத்துவதன் மூலமாக நம்முடைய தமிழக அரசு பெருமையடைகிறது. இந்தச் சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை நடத்துவதற்காக மாநில அரசு ரூ.92.13 கோடி நிதியை ஒதுக்கியிருக்கிறது.

44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான இலச்சினை (Logo) மற்றும் சின்னத்தைச் சில வாரங்களுக்கு முன்னால் நான் வெளியிட்டேன். சதுரங்க விளையாட்டில் இருக்கக்கூடிய 'நைட்' போலவே ஒரு குதிரை வடிவமைக்கப்பட்டு, அது வணக்கம் சொல்லும் வகையில் காணப்பட்டது. தமிழ் முறைப்படி அது வேட்டி, சட்டை அணிந்துகொண்டு, அதற்கு 'தம்பி' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இத்தகைய 'கவுண்ட் டவுன்' தொடங்கப்பட்டுள்ள நேரத்தில் இந்த கான்க்ளேவ் நடப்பது மிகமிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது. சரியான நேரத்தைத் தேர்வு செய்த 'தி இந்து' குழுமத்தை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன், அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நானும் கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளில் ஆர்வம் உள்ளவன்தான். கிரிக்கெட் போட்டிகளைப் பார்ப்பதை நான் தவற விடமாட்டேன். பள்ளிக் காலம் முதல் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கக்கூடியவன். மேயர் ஆனபோதும் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டு நான் விளையாடி இருக்கிறேன்.

எத்தகைய பணிச்சூழல்கள் இருந்தாலும் மறைந்த நம்முடைய தமிழக முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களும் கிரிக்கெட் போட்டிகளைத் தவறாமல் பார்த்துவிடுவார்கள்.

விளையாட்டுப் போட்டிகள் என்பது, விளையாடுபவர்களை மட்டுமல்ல, போட்டிகளைப் பார்ப்பவர்களையும் உற்சாகம் ஊட்டக்கூடிய வகையில் அது அமைந்திருக்கிறது. அதேபோல் விளையாடுபவர்களை 'விளையாட்டு வீரர்கள்' என்று சொல்கிறோம்.

அத்தகைய கம்பீரமான துறைதான் இந்த விளையாட்டுத்துறை. இத்தகைய விளையாட்டுத்துறையில் ஏராளமான முன்னெடுப்புகளைத் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது.

நம்முடைய கழக ஆட்சி அமைந்தவுடனே ஒரு அறிவிப்பைச் செய்தோம். அதாவது,

❖ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.3 கோடி, வெள்ளிப்பதக்கம் வெல்லக்கூடிய வீரருக்கு ரூ.2 கோடி, வெண்கலப் பதக்கம் வெல்லக்கூடிய வீரருக்கு ரூ.1 கோடி என்று அறிவித்தோம். இது மிகப்பெரிய பரிசுத் தொகை!

விளையாட்டு வீரர்களுக்கு முதலில் தேவையானது ஊக்கம்தான். அத்தகைய ஊக்கத்தை அளிப்பதற்காக இந்த அறிவிப்பை நம்முடைய அரசின் சார்பில் நாம் செய்தோம்.

❖ டோக்கியோ ஒலிம்பிக், பாராலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்களுக்குத் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.55 இலட்சம் வழங்கினோம்.

❖ வாள் சண்டை வீராங்கனைப் பவானி தேவி அவர்களுக்கு டோக்கியோ ஒலிம்பிக்கில் கலந்துகொள்ள ரூ.5 இலட்சம் ஊக்கத்தொகை வழங்கினோம்.

❖ தமிழ்நாடு உடற்கல்வி இயல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் இறகுப்பந்து பயிற்சிக் கூடம், மேசைப்பந்து பயிற்சிக் கூடம், தங்கும் விடுதி, ஆய்வகம் ஆகியவை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பக் கலை வீரர்களுக்கு விளையாட்டு ஒதுக்கீட்டில் 3 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ காட்பாடியில் திறந்தவெளி மாவட்ட விளையாட்டு வளாகமும், சென்னையில் பெண்களுக்கான புதிய விளையாட்டு விடுதியும், கிருஷ்ணகிரி, ஓசூரில் விளையாட்டு அரங்குகளில் புதிய அரங்குகளும் அமைக்கப்பட இருக்கின்றன.

❖ டோக்கியோ ஒலிம்பிக்கில் நடந்த தடகளப் பிரிவில் கலந்துகொண்ட தனலட்சுமி, சுபா ஆகிய இருவருக்கும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திலும், பாரா ஒலிம்பிக்கில் உயரம் தாண்டுதலில் வெள்ளிப்பதக்கம் வென்ற மாரியப்பனுக்குத் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகிதங்கள் நிறுவனத்திலும் பணிநியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்களுக்கு ஏராளமாக, தாராளமாக நிதி உதவிகளை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது, செய்யவும் போகிறது. தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட நிலையை இன்றைக்கு நாம் உருவாக்கியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல,

❖ ஜப்பான் நாட்டில் நடந்த மாற்றுத்திறனாளிகளுக்கான பாராலிம்பிக் தடகள விளையாட்டில் வெள்ளிப்பதக்கம் வென்ற மாரியப்பன் அவர்களுக்கு ரூ.2 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

❖ ஸ்காட்லாந்தில் நடந்த ஸ்குவாஷ் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தீபிகா பல்லிக்கல், கார்த்திக், சவுரவ் கோஷல், ஜோஷ்னா சின்னப்பா ஆகியோருக்கு ரூ.3 கோடி ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

❖ 2015, 2019ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா, அபுதாபியில் நடந்த சிறப்பு ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு ரூ.3.9 கோடி நிதி உதவி தரப்பட்டுள்ளது.

❖ 2020ஆம் ஆண்டுக்கான 'ஃபிடே' உலகச் சதுரங்க ஆன்லைன் குழு வாகையர் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற குழுவினருக்கு ரூ.92 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.

❖ 2021ஆம் ஆண்டுக்கான 'ஃபிடே' உலகச் சதுரங்க ஆன்லைன் குழு வாகையர் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற குழுவினருக்கு ரூ.57.60 இலட்சம் நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

இதற்கெல்லாம் மேலாக, மகுடம் வைத்தாற்போல மதுரையில், அலங்காநல்லூரில் நமது பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கென பிரம்மாண்டமான அரங்கம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டில் கட்டுமானப் பணிகள் துவங்கப்படவிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல், மாவட்ட அளவில் விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் விளையாட்டு அரங்கம் அமைக்கவும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நம்முடைய அரசு வெளியிட்டிருக்கிறது. இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். இவை அனைத்தும் இந்த ஓராண்டுக் காலத்தில் செய்யப்பட்டவை.

தமிழக விளையாட்டுத்துறை மிகமிக வேகமாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்பட்டு வருகிறது என்பதை இதன்மூலம் நாம் அறியலாம். இத்தகைய விளையாட்டு வீரர்களைத் தேடியும், உருவாக்கியும் வருகிறது நம்முடைய அரசு. இத்தகைய செயல்பாடுகளுக்கு ஊக்கம் அளிப்பதாக இந்த மாநாடு அமைந்திருக்கிறது.


நமது மாநிலத்திலுள்ள அனைத்து விளையாட்டு வீரர்களையும் ஊக்கப்படுத்தவும், அனைத்து விளையாட்டுக்களையும் மேம்படுத்தவும் இங்கேயே சர்வதேச விளையாட்டு வீரர்களை உருவாக்கவும் இந்த மாநாடு அடித்தளம் அமைக்கும் என்று நான் மனதார நம்புகிறேன்.

விளையாட்டுத்துறையில் தமிழக அரசு எடுக்க வேண்டிய முன் முயற்சிகள் குறித்தும், பள்ளி, கல்லூரி மாணவர்களிடம் விளையாட்டை ஊக்கப்படுத்த என்னென்ன செய்யலாம் என்பது குறித்தும், விளையாட்டை உடல்சார் கல்வியாக அனைவரும் நினைக்க என்ன மாதிரியான வடிவங்களில் இதனை அறிமுகம் செய்யலாம் என்பது குறித்தும், மெகா விளையாட்டுப் போட்டிகளை எந்த வகையில் நடத்தலாம் என்பது குறித்தும் அரசுக்கு இந்த மாநாடு அரிய ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டுத்துறையைப் பொறுத்தவரையில் எத்தனையோ கனவுகள் நமது அரசிற்கு இருக்கின்றன. அவற்றை நனவாக்கும் வகையில் விளையாட்டுத்துறை இன்னும் சிறக்க வழிவகைகளை நாம் காணவேண்டும். அதற்கு இந்த கான்கிளேவ் நல்ல துவக்கமாக அமையும் என்று நான் கேட்டு, இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டமைக்காக மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

❖ ❖ ❖


## சாகித்ய அகாதெமி விருது பெற்ற ஊடகவியலாளருக்கு வாழ்த்து



'ஒரு பிணந்தூக்கியின் வரலாற்றுக் குறிப்புகள்' எனும் மொழிபெயர்ப்பு நூலுக்காக சாகித்ய அகாதெமி விருது பெற்றுள்ள ஊடகவியலாளர் நாராயணன் (எ) மாலன் அவர்களுக்கு வாழ்த்துக்கள்!

அறிவார்ந்த படைப்புகள் தமிழாக்கம் பெற்று நம் கைகளில் தவழ்ந்திட வேண்டும்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
(26.06.2022)





# வேலூரில்
# 30,423 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 29.06.2022 அன்று வேலூர் மாவட்டம், கோட்டை மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், வேலூர் புதிய பேருந்து நிலையம் உள்ளிட்ட ரூ.62.10 கோடி செலவிலான முடிவுற்ற 17 பணிகளைத் திறந்துவைத்து, ரூ.32.89 கோடி மதிப்பீட்டிலான 50 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 30,423 பயனாளிகளுக்கு ரூ.360.53 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

வேலூர் என்பது வீரத்தின் அடையாளம். விவேகத்தின் அடையாளம். விடுதலையின் அடையாளம். போர்க்களத்தின் அடையாளம். இத்தகு சிறப்புகள் அனைத்தும் பொருந்திய, நல்லிணக்கத்தின் அடையாளமாகத் திகழும், சீர்மிகு மாவட்டமாம் வேலூரில் நடைபெறும் இந்த அரசு விழாவில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவின் முதலாவது சுதந்திரப் போராட்டம் 1857இல் நடந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் சொல்வார்கள். அதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்பே கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக, அனலும் கனலும் தெறித்த ஊர்தான் இந்த வேலூர்.

1806ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் நாள் வேலூர் கோட்டையில் நடத்திய புரட்சிதான் அதனுடைய தொடக்கமாக அமைந்திருக்கிறது. இந்தியர்கள் அடிமைகளாக வாழத் தயாராக இல்லை என்பதைப் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அறிவித்தது. அத்தகைய எழுச்சி மிகுந்த ஊரில் இந்தக் கோட்டையில் இந்த விழா நடந்துகொண்டிருக்கிறது.

இன்னொரு மகிழ்ச்சிக்குரிய பெருமை என்ன என்றால், என்னுடைய அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய என்னுடைய ஆருயிர் அண்ணன் துரைமுருகன் அவர்களின் மாவட்டமும் இதுதான். எனவே கூடுதல் மகிழ்ச்சியோடு நான் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறேன்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும், இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களும் அடுத்தடுத்து நம்மை விட்டு விலகிய நிலையில், கழகத்தைக் கொண்டு செலுத்தக்கூடிய பெரும் கடமை, என்னுடைய தோளில் முழுமையாக விழுந்தது. அப்போது என்னைத் தாங்கி நிற்கக் கூடிய தூணாக இருந்தவர்தான் இங்கு இருக்கக்கூடிய அண்ணன் துரைமுருகன் அவர்கள்.





கட்சியைப் பொறுத்தவரைக் கழகத்தின் பொதுச்செயலாளராக, சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் அவை முன்னவராக, ஆட்சியைப் பொறுத்தவரை அமைச்சராக இருந்து, எனக்கு வழிகாட்டும் திசைகாட்டியாக இருக்கிறார் அண்ணன் துரைமுருகன் அவர்கள்.

'துரை' – 'துரை' என்று தலைவர் கலைஞர் அவர்கள் எப்படி அவரை அழைத்து அருகில் வைத்துக்கொள்வாரோ, அதேபோல, என்னோடும் தோளோடு தோள் கொடுத்து நின்று வருகிறார் அண்ணன் அவர்கள். அவரை நான் சக அமைச்சராக அல்ல, என்னுள் ஒருத்தராக நினைத்துத்தான் அவரிடம் நான் அன்பு செலுத்தி வருகிறேன்.

என்னைச் சிறு வயது இளைஞராகப் பார்த்தவன் என்று அவர் அடிக்கடி எடுத்துச் சொல்வார். உண்மைதான். அவர் என்னை இளைஞராகப் பார்த்தவர், இன்று தலைவராகப் பார்க்கிறார். ஆனால், நான் உங்களை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் இடத்தில், இனமானப் பேராசிரியர் இடத்தில் வைத்துப் பார்க்கிறேன் என்று முன்பு ஒரு முறை சொன்னேன். அதையே இந்தக் கூட்டத்தில், இந்த விழாவில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் அண்ணன் துரைமுருகன் அவர்களின் பொதுவாழ்வுப் பொன்விழாவை முன்னிட்டு, சிறப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து நான் பேசினேன். சட்டமன்றத்தின் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் தொடர்ந்து அவரை வாழ்த்திப் பேசினார்கள். அண்ணன் துரைமுருகன் அவர்கள் நூற்றாண்டு விழாவையும் காண வேண்டும் என்று அந்த எண்ணத்தை, எனது வாழ்த்துக்களை உங்கள் அனைவரின் சார்பாகவும் அங்குச் சொன்னது மட்டுமல்ல, இங்கும் அதை வழிமொழிய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் சிறப்பாகச் செயல்படுகிறேன், வேகமாக உழைக்கிறேன் என்று சொன்னால், அதற்கு அண்ணன் துரைமுருகன் போன்ற என்னுடைய அமைச்சரவைச் சகோதரர்கள் அனைவரும் அளித்து வரும் ஒத்துழைப்பும், செயல்பாடுகளும்தான் காரணம்.

அனைத்துத் துறைகளிலும் இந்த அரசு சிறப்பாகச் செயல்படுகிறது என்று சொன்னால், அனைத்து அமைச்சர்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள் என்று பொருள்.

அனைத்துத் துறைகளும் வளர வேண்டும், அனைத்து மாவட்டங்களும் வளர வேண்டும், அனைத்துத் தரப்பு மக்களும் வளம்பெற்று பல்வேறு வாய்ப்புகள் பெருக வேண்டும் என்கிற உணர்வோடு பாடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய அரசுதான் இந்த திராவிட மாடல் அரசு. அதுதான் இன்றைக்கு ஆட்சிப்பீடத்தில் இருக்கிறது. இந்த மாடல் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, காலையில் நான் சொன்னதுபோல, இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டக்கூடிய மாடல் என்று போற்றிப் புகழப்படக்கூடிய சூழலில், வேலூரில் இந்த அரசு விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணமான அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களையும், அண்ணன் துரைமுருகன் அவர்களும் நானும் என்ன நினைக்கிறோம் என்பதை அறிந்து சிறப்பாகச் செய்து முடிக்கக் கூடிய மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் செயல்வீரர் தம்பி நந்தகுமார் அவர்களையும், அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர் தம்பி கதிர் ஆனந்த் அவர்களையும், சட்டமன்ற உறுப்பினர் வேலூர் கார்த்திகேயன் அவர்களையும், சகோதரி அமுலு விஜயன் அவர்களையும், மேயர், துணை மேயர் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு அதேபோல, நம்முடைய மாவட்டத்தின் ஆட்சியர் திரு. குமாரவேல் பாண்டியன், I.A.S., அவர்களையும், மற்றுமுள்ள அதிகாரிகளையும், அலுவலர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், அவர்களுக்கு நான் நன்றி சொல்ல விரும்புகிறேன்.

வேலூரில் அரசு நலத்திட்ட விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்ட நேரத்தில், கடந்த ஓராண்டுக் காலத்தில் இந்த மாவட்டத்திற்கு என்னென்ன பணிகளைச் செய்திருக்கிறோம் ? என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறோம் ? என்கின்ற பட்டியலை என்னுடைய அலுவலகத்தில் இருக்கக்கூடிய செயலாளர் அவர்களிடத்தில் நான் கேட்டேன், கொடுத்தார்கள். ஒரு புத்தகம் போடும் அளவுக்குக் கட்டுகளாகக் கொண்டுவந்து கொடுத்தார்கள். "இவ்வளவும் இந்த ஓராண்டுக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களா, செய்யப்பட்ட உதவிகளா" என்று நானே சந்தேகப்பட்டு, வியந்து அவர்களைக் கேட்டேன். "ஆமாம்" என்று சொன்னார்கள். அவை அனைத்தையும் இந்த விழாவில் சொல்வதாக இருந்தால், கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் ஆகும். அந்தளவுக்கு மகத்தான சாதனைகளை இந்த ஓராண்டுக் காலத்தில் செய்துள்ள காரணத்தால், உங்கள் முன்னால் நான் கம்பீரமாக இன்றைக்கு நின்று கொண்டிருக்கிறேன்.

வேலூருக்கு என்னென்ன பணிகள் நடந்திருக்கிறது என்று இங்கு அமைச்சர்கள் சொன்னார்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள்.

✪ வேலூர் மாநகராட்சியைப் பொறுத்தவரை ஏராளமான திட்டப்பணிகள் நடந்து வருகின்றன. சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் 52 பணிகள், ரூ.963 கோடி மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு, 24 பணிகள் ரூ.334 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.



✪ பள்ளிகொண்டா மற்றும் ஒடுக்கத்தூர் பேரூராட்சிகளில், சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

✪ பேரணாம்பட்டு நகராட்சியில் சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வருகந்தாங்கல் இரயில்வேப் பாலம் ரூ.22 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. சிறுகளம்பூர் இருளர் இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

✪ கடந்த ஒரு வருடத்தில், இம்மாவட்டத்தில் 12 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம், 704 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.61.55 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

✪ 45 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.3.25 கோடி வழங்கப்பட்டுள்ளது. 7,305 அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு ரூ.1.73 கோடி மதிப்பிலான நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

✪ 346 புதிய சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. கூட்டுப் பண்ணைத் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட 16 உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கும் ரூ.80 இலட்சம் மூலநிதி வழங்கப்பட்டது.

✪ வேலூர் மாவட்டத்தில் கடந்த ஓராண்டுக் காலமாக 4,647 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் 7,897 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

✪ முதல்வரின் முகவரி திட்டத்தின்கீழ் 34,672 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 12,415 தகுதியுடைய நபர்கள் புதியதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

✪ 1,915 உழவர்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்ட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 230.81 ஹெக்டேர் பரப்பளவுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

இப்படி நான் சொல்லிக்கொண்டேப் போகலாம் இங்கிருக்கின்ற அரசு அதிகாரிகள் "அந்தத் திட்டத்தைச் சொல்லவில்லையே, இந்த திட்டத்தைச் சொல்லவில்லையே" என்று நினைக்கலாம். ஒவ்வொரு துறையிலும் பல்வேறு பணிகளைச் செய்தாலும், அதில் ஒன்றிரண்டை நேரத்தின் அருமை கருதி நான் சிலவற்றை மட்டும் சொல்லியிருக்கிறேன். எனவே "நமது துறையைச் சேர்ந்த திட்டங்களை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் சொல்லாமல் விட்டு விட்டாரே!" என்று சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்த அதிகாரிகள் வருத்தப்பட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில், இப்போதும் பல பணிகள் இந்த வேலூர் மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பாலாற்றின் குறுக்கே பொய்கை கிராமத்தில் தடுப்பணை, சேண்பாக்கம் கிராமத்தில் தரைகீழ்த் தடுப்பணை, அகரம் ஆற்றின் குறுக்கே கோவிந்தம்பாடிக் கிராமத்தில் தடுப்பணை, பொன்னையாற்றின் குறுக்கே குகையநல்லூர் கிராமத்தில் தடுப்பணை என ரூ.58 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் விரைவில் துவங்கப்பட இருக்கிறது.

பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் திட்டத்தின் (RRR) கீழ், பின்வரும் 9 ஏரிகளைப் புனரமைக்கும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

முத்துக்குமரன் மலை முதல் பீஞ்சமந்தை பழங்குடியின மலைக் கிராமம் வரை, 6.55 கிலோமீட்டர் தூரம் தார்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

✪ பேரணாம்பட்டு நகராட்சியில், அண்ணாநகர் சிறுவர் விளையாட்டுப் பூங்கா அமைக்கும் பணிக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குடியாத்தம் நகராட்சியில் தார்ச்சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

✪ கரிகிரி, தொரப்பாடி மற்றும் பத்தலப்பல்லி ஆகிய பகுதிகளில் 864 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. நரிக்குறவர் இனமக்கள் 43 நபர்களுக்கு ரூ.98 இலட்சம் மதிப்பிலான தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

இந்த வரிசையில், மேலும் சில புதிய திட்டங்களை இந்த விழா மூலமாக நான் அறிவிப்பதற்காகத் திட்டமிட்டிருந்தேன். ஆனால், நம்முடைய மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் இந்த மாவட்டத்தினுடைய மண்ணின் மைந்தன் அண்ணன் துரைமுருகன் அவர்கள் இந்த மேடையில் கலைஞர் காலத்தில், அதற்குப் பிறகு இப்போது நான் பொறுப்பேற்று



நான் நடத்திக்கொண்டிருக்கக்கூடிய இந்த ஆட்சியின் மூலமாக எத்தனை திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, எதைக் கேட்டாலும் கொடுத்திருக்கிறார்கள், தட்டாமல் தந்திருக்கிறார்கள் என்று பெருமையோடு சொல்லி, இவ்வளவு திட்டங்களைப் பெற்றாலும் இன்னும் ஒரு திட்டம் பாக்கி இருக்கிறது என்று ஒரு கோரிக்கையை வைத்தார். அதாவது,

✪ காட்பாடி வட்டம், மகிமண்டலம் கிராமத்தில், சுமார் 300 ஏக்கர் பரப்பளவில், புதியதாக சிப்காட் தொழிற்பேட்டை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்கு இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதன்மூலமாக, அவர் சொன்னது போல ஆயிரக்கணக்கானவர்களுக்கு, இந்த மாவட்டத்தைச் சார்ந்த இளைஞர்களுக்கு நிச்சயமாக வேலைவாய்ப்பு உருவாகும்.

✪ வேலூர் வட்டம், மேல்மொணவூர், அப்துல்லாபுரம் கிராமப் பகுதிகளில், சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் டைடல் பார்க் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காட்பாடி வட்டம், சேர்க்காடு கிராமத்தில், சுமார் 6 ஏக்கர் பரப்பளவில், புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

✪ அணைக்கட்டு வட்டம், பள்ளிக்கொண்டா பேரூராட்சியில், புதிய உழவர் சந்தை அமைக்கும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. வேலூர் வட்டச்சாலையானது 9 கிராமங்களின் வழியே, 13.7 கிலோமீட்டர் நீளத்தில், சுமார் ரூ.325 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட இருக்கிறது. தற்போது நில எடுப்புப் பணிகள் நிறைவடையக்கூடிய தருவாயில் உள்ளது.

✪ காங்கேயநல்லூர் முதல் சத்துவாச்சாரி வரை பாலாற்றின் குறுக்கே, சுமார் ரூ.120 கோடி மதிப்பீட்டில், 3.2 கி.மீ நீளத்தில், உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்பட இருக்கிறது.

✪ குடியாத்தம் புறவழிச்சாலை, 7 கிராமங்களின் வழியே 7 கிலோமீட்டர் நீளத்தில் சுமார் ரூ.225 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட இருக்கிறது. வேலூர் புறவழிச் சாலைகள் 13 கிராமங்களின் வழியே, 21 கிலோமீட்டர் நீளத்தில், சுமார் ரூ.250 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட இருக்கிறது.

✪ காட்பாடி வட்டம் சேர்க்காடு கிராமத்தில், சுமார் 6 ஏக்கர் பரப்பளவில், பன்னோக்கு அரசு மருத்துவமனை அமைக்கப்பட இருக்கிறது. வல்லம், கீழ்ப்பள்ளிக் குப்பம் ஆகிய கிராமங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம் (LC 109), சுமார் ரூ.181 கோடி மதிப்பீட்டில் அது அமைக்கப்பட இருக்கிறது.

✪ அணைக்கட்டு ஒன்றியத்தில், பீஞ்சமந்தை, ஜர்தான்கொள்ளை, பாலாம்பட்டுக் கிராமங்களில் உள்ள, 73 கிராமங்களில் சுமார் 18 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். இந்தப் பகுதிக்கு நல்ல சாலை இணைப்பு வழங்கி, மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட, ரூ.34 கோடி செலவில் தரமான தார்ச்சாலைகள் அமைக்கப்படும்.

✪ வேலூர் மாவட்டத்தில் மழைக்காலங்களில் பல கிராமங்களின் சாலை இணைப்பு வசதி துண்டிக்கப்பட்டு, அந்தக் கிராமங்களில் வசிக்கக்கூடிய மக்கள் பல்வேறு இன்னலுக்குள்ளாகின்றார்கள். இதனைச் சரிசெய்யக்கூடிய வகையில், காட்பாடி ஒன்றியத்தில் ஒரு சாலையிலும், குடியாத்தம் ஒன்றியத்தில் இரண்டு சாலைகளிலும், பேர்ணாம்பட்டு ஒன்றியத்தில் ஒரு சாலையிலும், அணைக்கட்டு ஒன்றியத்தில் இரண்டு சாலைகளிலும் ரூ.14 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலங்கள் அமைக்கப்படும்.

கே.வி.குப்பம் வட்டத்தில் உள்ள விரிஞ்சிபுரத்திலும், வேலூர் வட்டத்திலுள்ள கீழ்மொணவூரிலும், பாலாற்றின் கரையில் வெள்ளச் சேதங்களைத் தவிர்த்திட, ரூ.7 கோடி செலவில் வெள்ளத்தடுப்புப் பணிகள் செயல்படுத்தப்படும் எனப் பல்வேறு திட்டங்களை நான் முதல்கட்டமாக அறிவித்திருக்கிறேன். இன்னும் பல சிறப்பான திட்டங்கள் வர இருக்கின்றன.

வேலூர் மாவட்டத்தில் என்னென்ன பணிகள் நடந்திருக்கின்றன, நடக்கப் போகின்றன என்பதைச் சொன்னேன்.







வருவதற்காகத்தான். இந்த மாநிலத்தின் உரிமைகளைப் பெறுவதற்காகத்தான், எந்த சமரசத்துக்கும் இடமில்லாமல் போராடும் அரசாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கிறது.

அதற்குச் சமீபத்திய எடுத்துக்காட்டு எனச்சொல்லவேண்டுமென்றால்,மேகதாது அணை பிரச்சினை. தமிழ்நாட்டு மக்களின் உயிர்நாடியான பிரச்சினைகளில் ஒன்று காவிரிப் பிரச்சினை. தமிழ்நாட்டுக்குக் காவிரி நீரில் முழு உரிமை இருக்கிறது. எனவே, காவிரி நீர் உரிமையைப் பெறுவதில், திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவுக்கும் சென்று போராடும்! வாதாடும்! என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். தனது உரிமையை நிலைநாட்டும்! என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதன்படிதான் இப்போதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

காவிரியின் குறுக்கே கருநாடக அரசு, மேகதாது என்ற புதிய அணையைக் கட்டத் திட்டமிட்டிருக்கிறது. அதைத் தொடக்கத்தில் இருந்தே நாம் எதிர்த்து, தடுத்து வருகிறோம். ஆனாலும் அவ்வப்போது நேரம் கிடைக்கிறபொழுது எல்லாம், பொழுது போகவில்லை என்றால், உடனே அதைப் பற்றித் தொடங்கிவிடுகிறார்கள். அணை கட்ட நிதி ஒதுக்குவது, சட்டம் போடுவது, ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுப்பது, டெல்லிக்குப் படையெடுப்பது என்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்யும் போதெல்லாம், நாமும் அவற்றுக்குத் தடுப்பணை போடும் காரியங்களைச் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறோம்.

இரண்டு வாரங்களுக்கு முன்னால், கருநாடக அரசு இதில் அதிகமான முனைப்பைக் காட்டியது. காவிரி ஆணையத்தில் மேகதாது அணை குறித்து விவாதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். உடனடியாக, நான் பிரதமருக்குக் கடிதம் எழுதினேன். மேகதாது தொடர்பாக விவாதிக்கக் கூடாது அப்படி என்று வலியுறுத்தி, வற்புறுத்தி பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

இந்த நிலையில் கருநாடக முதலமைச்சர் அவர்கள், டெல்லி சென்று ஒன்றிய அமைச்சரைச் சந்தித்து, மேகதாது அணைக்கு ஆதரவாகப் பேசிவிட்டு வந்திருக்கிறார்கள். உடனடியாக, நம்முடைய நீர்வளத்துறை அமைச்சர், காவிரிப் பிரச்சினையில் அத்துப்படி அவருக்கு எந்த நேரத்தில், எதைக்கேட்டாலும், தூங்கிக் கொண்டிருக்கும்போது எழுப்பிக் கேட்டால் கூட அந்தக் காவிரிப் பிரச்சினையில் பட்டு, பட்டு என்று அப்படி Finger tipsஇல் வைத்திருப்பார். அவர்தான் அன்றைக்கு அந்தத் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடியவர். ஆகவே அவருடைய

இதேபோல, அனைத்து மாவட்டங்களிலும் பணிகள் நடந்து வருகின்றன.

கடந்த பத்தாண்டுக் காலத்தில் செய்யத் தவறிய அனைத்துப் பணிகளையும், கடந்த ஓராண்டுக் காலத்தில் செய்து முடித்திருக்கிறோம் என்கிற அந்த நெஞ்சை நிமிர்த்தி இன்றைக்கு நான் உங்கள் முன்னால் நின்றிருக்கிறேன். இப்படி, அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு பணிகளைச் செய்வதன் மூலமாகத்தான், தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் சிறந்த மாநிலமாக நாம் வளர்த்தெடுக்க முடியும். தமிழ்நாட்டை, இன்று இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், அண்ணாந்து பார்க்கும் நிலையில் வைத்திருக்கிறோம். நமது நாட்டின் வளர்ச்சியிலும், ஒன்றிய அரசின் நிதி ஆதாரங்களிலும், தமிழ்நாடு எவ்வளவு அதிகமான பங்களிப்பைத் தருகிறது என்பதை அண்மையில் பாரதப் பிரதமர் அவர்கள் சென்னையில் வந்திருந்தபோது அந்த நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்டு அவர் முன்னிலையிலேயே சொன்னேன். பத்திரிகையில் படித்திருப்பீர்கள், ஊடகங்களில் பார்த்திருப்பீர்கள்.

இந்தியாவினுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பில், தமிழ்நாட்டின் பங்கு 9.22 விழுக்காடு! ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 6 விழுக்காடு! இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 8.4 விழுக்காடு! இந்தியாவின் ஜவுளித்துறை ஏற்றுமதியில் 19.4 விழுக்காடு! கார்கள் ஏற்றுமதியில் 32.5 விழுக்காடு! தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 33 விழுக்காடு!

ஆனால், நமது தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசால் பகிர்ந்தளிக்கப்படுவது 1.21 விழுக்காடு மட்டுமே! தமிழ்நாடு போன்ற வளர்ந்த மாநிலங்கள், நாட்டின் வளர்ச்சிக்கும், பொருளாதாரத்திற்கும் அளிக்கக்கூடிய பங்கிற்கு ஏற்ப, ஒன்றிய அரசும், திட்டங்களிலும் நிதியிலும், தனது பங்களிப்பைஉயர்த்தவேண்டும்என்றுமாண்புமிகுபிரதமரை மேடையில் வைத்துக்கொண்டு நான் பேசும்பொழுது இந்தக் கோரிக்கையை எடுத்து வைத்தேன். உரிமையோடு கேட்டேன். மாநில சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்ற உணர்வோடு குறிப்பிட்டேன். அதுதான் உண்மையான கூட்டுறவுக் கூட்டாட்சியாக அமையும் என்றும் சொன்னேன்.

நிதி உரிமைகளைக் கேட்பது என்பது, ஏராளமான மக்கள் நலத்திட்டங்களை மக்களுக்குக் கொண்டு



தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் எல்லாம் அழைத்துப் பேசி முடிவெடுத்து, ஒரு குழு அமைத்து, அந்தக் குழு டெல்லிக்குப் போனது. அவருடைய தலைமையில்தான் போனார்கள். ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சரைச் போய் சந்தித்து நமது தரப்பினுடைய வாதங்களை வலியுறுத்திச் சொல்லியிருந்தார்கள். ஆகவே டெல்லிக்குச் சென்று அமைச்சரைச் சந்தித்துத் “தமிழகத்துக்கு உடன்பாடு இல்லாமல், எந்தக் காரியத்தையும் காவிரிப் பிரச்சினையில் செய்ய நாங்கள் அனுமதிக்க மாட்டோம்” என்று ஒன்றிய அமைச்சரிடம் வாக்குறுதி பெற்று வந்திருக்கிறது நம்முடைய குழு. அந்த உறுதியைப் பெற்றுத்தான் அண்ணன் துரைமுருகன் அவர்கள் சென்னைக்கு வந்தார்கள்.

அதேபோல், காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் மேகதாது குறித்து விவாதிக்க மாட்டோம் என்று அந்த அறிவிப்பையும் வெளியிட்டு இருக்கிறார்கள். இப்போது தற்சமயத்தில், கூட்ட விவரத்தில் இருந்து மேகதாது விஷயத்தை நீக்கி விட்டார்கள்.

நான் என்ன சொல்கிறேன் என்றால், காவிரி விவகாரத்தில் உச்சநீதிமன்றம் 2018ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 16ஆம் தேதி வழங்கிய தீர்ப்பின்படி, தொடர்புடைய மாநிலத்தின் அனுமதியைப் பெறாமல், ஒன்றிய அரசின் அனுமதியையும் பெறாமல் அணையைக் கட்ட முடியாது.

ஆகவே, கருநாடக அரசின் முடிவானது உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது! எனவே, கருநாடக அரசுக்கு எந்தவிதமான தொழில்நுட்ப, சுற்றுச்சூழல் அனுமதியையும், ஒன்றிய அரசு தரக்கூடாது என்பதை இந்தக் கூட்டத்தின் வாயிலாகவும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படித் தமிழ்நாட்டின் அனைத்து உரிமைகளுக்காகவும், எந்தச் சமரசங்களுக்கும் இடமில்லாமல் போராடக்கூடிய, வாதாடக்கூடிய அரசுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு.

நிதி உரிமை வேண்டும், சமூகநீதி உரிமை வேண்டும், காவிரி உரிமை வேண்டும், கல்வி உரிமை வேண்டும் என்று குரல் கொடுப்பதால், இது ஏதோ ஒன்றிய அரசுக்கு எதிரான குரலாக அனைவராலும் பார்க்கப்படுகிறது. ஒரு சிலரால். இல்லை! இவை அனைத்தும் தமிழ்நாட்டு மக்களுக்கு ஆதரவான குரல்கள்தான் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. ஆளும் கட்சியாக இருக்கும்போதும், தீட்டக்கூடியத் திட்டமாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருக்கும்போது வைக்கும் கோரிக்கையாக இருந்தாலும் சரி, அவை அனைத்தும் தமிழ்நாட்டின் அனைத்து மக்களுடைய நலனுக்காக மட்டுமே! அப்படித்தான் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை என்பதே எல்லா மக்களும், எல்லா நலனையும் பெற வேண்டும் என்பதுதான். மக்களுக்காகத்தான் எங்களது கொள்கையே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, ஏழை, எளிய நடுத்தர வகுப்பு மக்களுக்காகவே பிறந்து, மக்களுக்காகவே வாழ்ந்து இன்றும் நம்மை இயக்கிக்கொண்டு இருப்பவர்கள்தான், தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களும்.

95 வயதில், மூத்திரவாளியைத் தூக்கிக் கொண்டு, தமிழ்ச் சமுதாயத்துக்காக உழைத்தவர் தந்தைப் பெரியார் அவர்கள்.

புற்றுநோய் தன்னைத் துன்புறுத்திய நிலையிலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை உருவாக்கி நல்ல பல திட்டங்களை நிறைவேற்றிவிட்டு மறைந்தார் நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அண்ணா.

14 வயதில் தமிழ்க்கொடி தாங்கி, போராட்டக் களத்துக்கு வந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 95 வயது வரையிலும் ஓயாமல் இந்த இனத்துக்காகப் போராடினார்.

இவர்களது வாழ்க்கையே ஒரு கொள்கைப் பாடம்! மக்களுக்காகப் போராடு, மக்களுக்காக வாதாடு, மக்களுக்காகச் சேவை செய், மக்களுக்குத் தேவையானதை மட்டுமே செய் என்பதையே இவர்கள் மூவரும் இன்றைக்கும் நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அத்தகைய மக்கள் நலனுக்காகவே, இத்தகைய விழாக்களை மாவட்டந்தோறும் அரசு விழாக்களாக மட்டுமல்ல, மக்கள் விழாக்களாகவே நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அந்த வகையில் இப்போது அமைந்துள்ள ஆட்சி, மக்களாட்சியாகத் தொடங்கியது! மக்களாட்சியாகவே தொடரும்! தொடரும்! தொடரும்! என்று கூறி விடைபெறுகிறேன்!

❖ ❖ ❖




# இராணிப்பேட்டையில் 71,103 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.06.2022 அன்று இராணிப்பேட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.118.40 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம், ரூ.32.18 கோடி செலவிலான 23 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, ரூ.22.19 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 71,103 பயனாளிகளுக்கு ரூ.267.10 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இராணிப்பேட்டை என்பது புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். ஒரு காலத்தில் இராணுவப் பேட்டையாக இருந்ததுதான் இந்தப் பகுதி. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், குதிரைப்படைகள் நிலைகொண்ட பகுதியாக, வரலாற்றில் இது பதிவாகி இருக்கிறது. இங்கு இருக்கும் பழைய கட்டடங்களில், இராணுவ அதிகாரிகள் தங்கியிருந்தார்கள். முதல், இரண்டாம் உலகப் போர்கள் நடந்த காலத்திலும், இது முக்கிய தளமாக இருந்திருக்கிறது.

எனவே, புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டமாக இருந்தாலும், இராணிப்பேட்டை பழமையானதுதான்! வரலாற்றுச் சிறப்புக்குரிய மாவட்டமாக இது விளங்கிக்கொண்டிருக்கிறது. ஆந்திரா, கருநாடகா ஆகிய இரண்டு அண்டை மாநிலங்களையும் இணைக்கும் இடத்தில், இந்த மாவட்டம் அமைந்திருப்பது, இன்னொரு சிறப்பாக நாம் பார்க்கிறோம். கனிம வளங்கள் நிறைந்த மாவட்டமாகவும் இருக்கிறது. ஆன்மீகத்தில் நாட்டமுள்ளவர்கள் குறிப்பிடும், 108 திவ்ய தேசங்களில் 65ஆவது திவ்ய தேசமாகச் சொல்லப்படும் சோளிங்கர் அமைந்துள்ள மாவட்டம் இது. இந்த மேடையில் இருக்கும் தலைவர் கலைஞர் அவர்களால் அடிக்கடி புகழப்படக்கூடிய திராவிட ஆழ்வார் ஜெகத்ரட்சகனிடம் கேட்டால், இதைப்பற்றி மட்டுமே ஒரு மணி நேரம் பேசுவார்!

தென்னிந்தியாவில் இருக்கும் தொழில் மையங்களில் ஒன்றாகவும் இராணிப்பேட்டை இருக்கிறது. தோல் பொருள் ஏற்றுமதியில், உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் மாவட்டமாகவும் இது இருக்கிறது. அனைத்துச் சமூக மக்களும் அமைதியாக வாழும் சமரசம் உலவும் மாவட்டமாகவும் இந்த மாவட்டம் இருக்கிறது.

புதியதாக உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய மாவட்டமாக இருந்தாலும், பல்வேறு பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றி வரும் மாவட்டங்களில் இந்த இராணிப்பேட்டை முன்னணியில் இருப்பதை நான் தெளிவாக உணர்ந்திருக்கிறேன்.

‘மீண்டும் மஞ்சப் பை’ திட்டத்தைச் சீரிய முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய மாவட்டமாக இராணிப்பேட்டை மாவட்டம் இருப்பதை அறிந்து, இந்த மாவட்ட நிருவாகத்தை நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

36,000 பங்களிப்பாளர்களின் பங்களிப்புடன், 3 மணி நேரத்தில் 187 டன் நெகிழிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு இருக்கின்றன. இது மிகப்பெரிய சாதனை! ஏற்கெனவே 128 டன் சேகரித்து, ஸ்விட்சர்லாந்து நாட்டில் நிகழ்த்தப்பட்ட உலக சாதனையை முறியடித்திருக்கிறது. இதனால், பல்வேறு சாதனைப் புத்தகங்களில் இராணிப்பேட்டை மாவட்டம் இடம்பெற்றிருக்கிறது. இத்தகைய சாதனை தொடர வேண்டும். இதே போன்ற செயல்பாடுகளில் மற்ற மாவட்டங்களும் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் இந்த நிகழ்ச்சியின் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



இத்தகைய சிறப்புமிகு மாவட்டத்தில், இத்தகைய சிறப்புக்குரிய விழாவை ஏற்பாடு செய்துள்ள என்னுடைய அருமை சகோதரர், சாதனைச் செல்வன் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் அமைச்சர் திரு. காந்தி அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் அமைச்சராக அவர் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அந்தத் துறையில் பல்வேறு முன்னெடுப்புகளை, அவர் சீரிய முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறார்.

அவருக்கு இங்கு இருக்கக்கூடிய மக்கள் செல்வாக்கைப் பற்றி, நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. 1996, 2006, 2016, 2021 என நான்கு முறை இந்தத் தொகுதியில் வெற்றி பெற்று, எல்லோருமே அவரை இராணிப்பேட்டை காந்தி என்று அழைப்பதைவிட அவர், சாதனைச் செல்வர், சாதனைச் செல்வர் என்று அழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொன்னால், இராணிப்பேட்டை என்று சொல்வதைவிட, காந்திப்பேட்டை என்று சொன்னால்கூட அது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அண்ணன் திரு. துரைமுருகன் அவர்கள் திரு. காந்தியைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் பலமுறை இந்த மாவட்டத்திற்கு வந்தபோது அவரைப்பற்றி நான் பலமுறை பேசியிருக்கிறேன்.

காந்தி என்றால் கலகலப்பு என்று பொருள். அந்தளவுக்கு, தான் இருக்கும் இடத்தை எப்போதும் அவர் கலகலப்பாக வைத்திருப்பார். அவர் பேசக்கூடிய தமிழ் இருக்கிறது பாருங்கள், மிகவும் அழகாக இருக்கும். மழலைத் தமிழில், இந்த வட்டார மக்களின் தமிழாகவே அது இருக்கும். அந்த வகையில் மக்களின் அமைச்சராக இருந்து செயல்படும் அவருக்கு மீண்டும், மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் ஆற்றக்கூடிய அந்தப் பணிகளுக்கெல்லாம் துணை புரியும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களையும், அதேபோல இந்த மாவட்டத்திற்கு உட்பட்டிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் தம்பி ஆற்காடு ஈஸ்வரப்பன் அவர்களையும், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர் நம்முடைய இயக்கத்தோடு எந்த அளவுக்கு நெருக்கமாக, உறவாகப் பழகிக்கொண்டிருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படிப்பட்ட சோளிங்கர் முனிரத்தினம் அவர்களையும், இந்த மாவட்டத்தின் ஆட்சியரையும், பல்வேறு அதிகாரிகளையும், அலுவலர்களையும், இந்த நிகழ்ச்சி சிறப்போடு அமைவதற்காகப் பாடுபட்டிருக்கக்கூடிய அனைவரையும் நான் இந்த நேரத்தில் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

71,103 பயனாளிகளுக்கு, ரூ.267.10 கோடி மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகள் இன்றைக்கு வழங்கப்பட இருக்கின்றன.

வீட்டுமனைப் பட்டா, உதவித்தொகைகள், நிவாரண நிதிகள், மகளிர் நலன்சார் திட்டங்கள், தனிநபர் இல்லக் கழிவறை அமைத்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் அட்டைகள், மாற்றுத்திறனாளிகளுக்கு ஸ்கூட்டர், செயற்கைக் கால் மற்றும் கை, வீடுகட்டும் திட்டம், மருத்துவக் காப்பீடுகள், இலவசத் தையல் இயந்திரங்கள், மூன்றாம் பாலினத்தவர்களுக்கான அட்டைகள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்குதல், உழவர் கடன்கள், ஆதிதிராவிடர் நலத்திட்ட உதவிகள், சூரிய ஒளி பம்புச் செட்டுகள் அமைத்தல், நரிக்குறவர் அடையாள அட்டை, பால்கறவை இயந்திரம் இப்படிப் பல்வேறு திட்ட உதவிகளை, இன்று 71,103 பயனாளிகள் பெற இருக்கிறார்கள்.

“ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்றார் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள். அவரது பொன்மொழிக்கு இலக்கணமான பொற்காலமாக அமைந்திருக்கக்கூடிய கழக ஆட்சி இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறது.

அதனுடைய அடையாளமாகத்தான் இன்றைய தினம் ஒரே நாளில் இராணிப்பேட்டை மாவட்டத்தில் மட்டும் 71 ஆயிரம் பேரின் கோரிக்கைகள் நிறைவேறுகின்றன. இப்படி ஒவ்வொரு தனிமனிதரின் கோரிக்கைகளையும், கேட்டுக் கேட்டு, பார்த்துப் பார்த்து, நிறைவேற்றித் தரும் அரசுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு.

பெற்றவர்கள்தான் தங்களுடைய பிள்ளைகளுக்கு என்னவெல்லாம் தேவையோ அதையெல்லாம் தனித்தனியாக நிறைவேற்றித் தருவார்கள். அதைப்போலத்தான், ஒரு அரசும் செயல்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதனால்தான்

ஒவ்வொரு தனிமனிதரின் கோரிக்கையையும் கேட்டுப் பெற வேண்டும் என்று அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியிருக்கிறேன்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர், முதல்வரின் முகவரி, மக்கள் குறைதீர்ப்பு நாள் இதுபோன்ற அரசு விழாக்களில், அமைச்சர்களே மக்களைச் சந்தித்து மனுக்களைப் பெறுவது என பல்வேறு வழிமுறைகளின் மூலமாக உங்கள் கோரிக்கைகள், உடனடியாக எங்களை வந்து சேர வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இன்றைய நாளில் மட்டும், ரூ.4 கோடி மதிப்பீட்டில், கன்னிகாபுரம், பொன்னமங்கலம் சாலையில், செய்யாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கும் திட்டப்பணியும், ரூ.7.46 கோடி மதிப்பீட்டில், இராணிப்பேட்டை, அரக்கோணம் அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்களில், புதிய பணிமனைக் கட்டடங்கள் (Work Shop) அமைக்கும் திட்டப்பணிகளும், இராணிப்பேட்டையில் ரூ.10.25 கோடி மதிப்பீட்டில், புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி, ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில், ஆற்காட்டில் கட்டப்படவுள்ள கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டப்பணி என்று மொத்தம் ரூ.22.19 கோடி மதிப்பீட்டிலான நான்கு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

முடிவுற்ற பல்வேறு திட்டப்பணிகள், இன்று திறப்பு விழா கண்டிருக்கிறது.

❖ ரூ.118.40 கோடி மதிப்பீட்டில், இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

❖ ரூ.13.14 கோடி மதிப்பீட்டில் வாலாஜா, சோளிங்கர், ஆற்காடு, கலவை ஆகிய பகுதிகளில், புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள், சோளிங்கர், வாலாஜா மற்றும் கலவை வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

❖ ரூ.5.65 கோடி மதிப்பீட்டில், ஆற்காடு, அரக்கோணம் பகுதிகளில், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், ரூ.1.37 கோடி மதிப்பீட்டில், 2 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 4 அங்கன்வாடி மையக் கட்டடங்கள், 2 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், 2 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள், ரூ.76 இலட்சம் மதிப்பீட்டில், வாலாஜா வட்டாரம் லாலாபேட்டை, திமிரி வட்டாரம் கலவை ஆகிய பகுதிகளில் துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடங்கள்.

❖ ரூ.5.60 கோடி மதிப்பீட்டில், வாலாஜா அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், 30 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டடம், ரூ.5.67 கோடி மதிப்பீட்டில், அரக்கோணம் வட்டம், அரிகில்பாடி கிராமத்தில் கல்லாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள, தளமட்ட சுவர் (தடுப்பணை) ஆகியவை திறந்துவைக்கப்பட்டுள்ளன. மொத்தமாகச் சொல்வதாக இருந்தால், ரூ.150.59 கோடி மதிப்பீட்டிலான 24 முடிவுற்ற திட்டப் பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, தோல், காலணி உற்பத்தித் தொழிலில், இராணிப்பேட்டை மாவட்டம் சிறந்து விளங்குகிறது. காலணி, அது சார்ந்த பொருட்களின் உற்பத்தியை, சர்வதேசத் தரத்திற்கு மேலும் உயர்த்தி, அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் இப்போது நான் ஒரு புதிய அறிவிப்பை மகிழ்ச்சியோடு



வெளியிடப் போகிறேன். திரு. காந்தி, அதேபோல இராணிப்பேட்டை தொகுதியில் இருக்கக்கூடியவர்கள், இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் பெருமைப்படக்கூடிய வகையில் ஒரு அறிவிப்பு.

**பனப்பாக்கத்தில், ரூ.400 கோடி செலவில் 250 ஏக்கர் பரப்பளவில் மெகா காலணி உற்பத்தி பூங்கா ஒன்று அமைக்கப்படும்.**

நேற்று மாலை வேலூரில் நடைபெற்ற அரசு விழாவில், நம்முடைய திரு. துரைமுருகன் அவர்கள் எடுத்து வைத்த அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, காட்பாடியில் சிப்காட் அறிவித்தேன். இன்று இராணிப்பேட்டையில் இந்தப் பூங்காவை அறிவித்திருக்கிறேன்.

இதனால், சர்வதேச அளவில், தலைசிறந்த காலணி உற்பத்தி, ஏற்றுமதி மையமாக இராணிப்பேட்டை மாவட்டம் மேலும் வலுப்பெறும். இந்தப் பூங்கா நிறுவப்படும் காரணத்தால், 20 ஆயிரம் பேருக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இந்த ஓராண்டுக் காலத்தில், கழக அரசின் சார்பாக, இராணிப்பேட்டை மாவட்ட மக்களுக்குச் செய்து தரப்பட்டுள்ள நன்மைகளையும், இந்த நேரத்தில் நான் நினைவூட்டுவது என்னுடைய கடமையாக, பொருத்தமாகக் கருதுகிறேன்.

❖ முதல்வரின் முகவரி திட்டத்தின்கீழ் 9,309 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. 1,696 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

❖ 527 பேருக்குக் கல்விக் கடன் தரப்பட்டுள்ளது. 1.01 கோடி பேருந்து பயணங்களைக் கட்டணமில்லாமல் மகளிர் மேற்கொண்டுள்ளார்கள்.

❖ 24,031 பேரின் நகைக்கடன் ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆட்சிக்கு வந்தவுடன் 5 சதவிகிதம் தள்ளுபடி செய்யப் போவதாகச் சொன்னோம். அதையெல்லாம் கூட கிண்டல் செய்தார்கள். கேலி செய்தார்கள். விமர்சனம் எல்லாம் செய்தார்கள். ஆக, அதையெல்லாம்சரியாகஇருக்கிறதா ?என்றுசரிபார்த்து



இப்போது படிப்படியாகச் செய்திருக்கிறோம். அந்த வகையில் இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், 24,031 பேரின் நகைக்கடன் ரத்து செய்யப்பட்டுள்ளது.

❖ ஆறு இலட்சம் பேர் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் மூலம் சிகிச்சை பெற்றுள்ளார்கள். 346 பேர் இன்னுயிர் காப்போம் திட்டம் மூலம் பயனடைந்துள்ளார்கள்.

❖ ஆவின் பால் விலையைக் குறைத்ததன் மூலமாக 90 ஆயிரம் நுகர்வோர் பயனடைந்துள்ளார்கள். 2,082 உழவர்களுக்குப் புதிதாக இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. 18,377 பேர் வருமுன் காப்போம் திட்டம் மூலம் பயனடைந்துள்ளார்கள்.

❖ 3.30 இலட்சம் கொரோனா கால நிவாரண நிதி பெற்றுள்ளார்கள். 3.30 இலட்சம் 14 வகையிலான மளிகைப் பொருட்களைப் பெற்றுள்ளார்கள். 3.30 இலட்சம் பேர் 22 வகையிலான மளிகைப் பொருட்களைப் பெற்றுள்ளார்கள். 2,437 மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த, 34,987 பேரின் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 84 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. 1.83 இலட்சம் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. 1,680 குடும்பங்களுக்கு வேளாண் உபகரணத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 6 திருக்கோயில்கள் ரூ.12 கோடி செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. தனியார் வேலைவாய்ப்பு முகாம் மூலமாக 4,000 பேர் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். ஊரக வளர்ச்சித்துறை மூலமாகப் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 7,289 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.361 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 239 இளைஞர்களுக்குத் தொழில் திறன் பயிற்சி தரப்பட்டுள்ளது. 300 புதிய சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. நான்கு நகராட்சிகளில் ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் பூங்காக்கள். 40 சாலைப் பணிகள் இப்படிச் சொல்லிக்கொண்டேப் போகலாம், ஆனால், நேரம் கடந்துகொண்டிருக்கிறது. இவை எல்லாம் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அல்ல, செய்து முடிக்கப்பட்ட திட்டங்கள். 'இவை அனைத்தும் ஓராண்டுக் காலத்தில், செய்து முடிக்கப்பட்ட திட்டங்கள்'.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதில் ஏறக்குறைய 70 சதவிகிதம், 80 சதவிகிதம் நாம் நிறைவேற்றி இருக்கிறோம் என்று சொன்னால், இவை அனைத்தையும், தாண்டிய அளவில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய திட்டங்கள். அதனால்தான் உங்கள் முன்னால் இன்றைக்குக் கம்பீரமாக நான் நின்று கொண்டு இதைத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறேன்.

நாங்கள் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை என்று எதிர்க்கட்சியில் இருக்கக் கூடியவர்கள், சில உதிரிக் கட்சியில் இருக்கக்கூடியவர்கள், நாங்கள்தான் அடுத்த முதலமைச்சர் என்று சொல்லிக்கொண்டு அனாதைகளாக அலைந்து கொண்டிருக்கக்கூடியவர்கள் இன்றைக்குப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் இதைச் சட்டமன்றத்திலும் சொல்லியிருக்கிறேன், மக்கள் மன்றத்திலும் சொல்லியிருக்கிறேன், எந்தெந்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை நான் பட்டியல் போட்டுத்தான் உங்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். புள்ளி விபரத்தோடுதான் சொல்லியிருக்கிறேன். ஆக, நீங்கள் பலன்பெற்று வருகிறீர்கள். ஆனால், பூனைக் கண்ணை மூடிக்கொண்டு உலகம் இருண்டுவிட்டது என்று நினைப்பதைப் போலச் சிலர் நினைக்கிறார்கள்! பேசுகிறார்கள்!

இன்னொன்றையும் சொல்கிறார்கள், 'ஸ்டாலின் விளம்பரப் பிரியராக இருக்கிறார்' அப்படி என்று சொல்லியிருக்கார். எனக்கு எதற்கு விளம்பரம்? இனிமேலும் எனக்கு விளம்பரம் தேவையா? 55 ஆண்டுகளாக அரசியலில் இருக்கக்கூடியவன் நான். இனிமேல் எனக்கு விளம்பரம் எதற்கு?

நரிக்குறவர் வீட்டுக்குப் போனார், இருளர் வீட்டுக்குப் போனார், அங்கே போய் அவர்கள் வீட்டில் சாப்பிட்டார், என்றெல்லாம் வரும் செய்திகளை வைத்து அப்படிச் சொல்கிறார்கள், நான் கேட்கிறேன் அவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்புகிறேன். அந்த ஒரு சந்திப்புக்குப் பின்னால் எத்தனை நலத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை அவர்கள் முதலில் அறிந்திருக்க வேண்டும்.

நரிக்குறவர் வீட்டுக்கும், இருளர் வீட்டுக்கும் சென்றதன் மூலமாக, 'இது நமது அரசு' என்ற நம்பிக்கையை, அவர்கள் மனதில் ஆழமாக நாம் விதைத்திருக்கிறோம்! அதுதான் முக்கியமானது! ஏதோ ஒரு நாள் அவர்களது வீட்டுக்குச் சென்றதன் மூலமாக எனது கடமை முடிந்துவிட்டதாக நான் நினைத்து, அத்துடன் நான் சும்மா இருந்து விட்டேனா?

இதே இராணிப்பேட்டையில், சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' என்ற தலைப்பில், நடைபெற்ற நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் வந்து சந்தித்தேன். மனுக்களைப் பெற்றேன். அனைவரது கோரிக்கையையும் கேட்பதற்காக அன்றைக்கு வந்தேன். பலர் எனது கையில் மனுக்களைக் கொடுத்தீர்கள். அதில் சில பேர்களை நான் பேச வைத்தேன். அப்போது சில நரிக்குறவர்கள் பெண்கள், அதிலும் குறிப்பாகப் பெண்கள் மேடைக்குப் பக்கத்தில் வந்து, நாங்களும் பேச வேண்டுமென்று கேட்டார்கள். பேச வைத்தோம். அவர்கள் கோரிக்கையைக் கவனமாகக் கேட்டேன்.

ஆட்சிக்கு வந்ததும் அதையெல்லாம் மறந்துவிடவில்லை என்பதன் அடையாளமாகத்தான், தற்போது பல்வேறு திட்டங்களைச் செய்து கொடுத்தும் வருகிறோம். இன்றைக்கு 293 நரிக்குறவர் இன மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்த இராணிப்பேட்டை விழாவிலேயே இருளர் பழங்குடியினர் மக்களுக்கு அரசின் அனைத்து நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

குடும்ப அட்டை, இலவச வீட்டுமனைப் பட்டா, வீடு ஒதுக்கீடு ஆணை, முதியோர் உதவித்தொகை, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, சாதிச் சான்றிதழ், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட அட்டை, சேமிப்பு வங்கிக் கணக்கு நலவாரிய அட்டைகள் ஆகியவற்றை வழங்கி, விளிம்புநிலை மக்களின் அடிப்படைத் தேவைகளைத் தீர்த்திருக்கிறோம்.

இன்று நலத்திட்ட உதவிகள் பெறக்கூடிய நபர்களில், 5,767 பேர் இருளர் இன மக்கள். இந்த மாவட்டத்தில் உள்ள 9,600 இருளர் பழங்குடியின மக்களில், 5,767 இருளர் பழங்குடியினர் இன மக்களுக்கு இன்றைய தினம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவிருக்கின்றன. அதேபோல் திருநங்கையர் 20 பேருக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவிருக்கின்றன.

9,522 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் செய்யப்படவிருக்கின்றன. 101 மாற்றுத்திறனாளி, சிறப்புக் குழந்தைகளின் தாய்மார்களுக்கு மின்மோட்டாருடன் கூடிய இலவசத் தையல் இயந்திரங்கள் வழங்கி, அவர்கள் மூலமாக, குறைந்த விலையில் மஞ்சள் பைகள் தயாரித்து விநியோகித்திட, நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இந்த அரசாங்கத்தினுடைய இதயம் என்பது இத்தகைய விளிம்புநிலை மக்களின் மகிழ்ச்சியில்தான் இருக்கிறது. பழங்குடியின மக்களுக்கு ஒரு அடையாள அட்டை கொடுப்பதும், பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை உருவாக்குவதற்கு இணையானது! இவை விளம்பரத்துக்காகச் செய்யப்படுவது அல்ல.

பிள்ளைகளுக்குக் கொடுக்கும் புத்தகப் பைகளில், கடந்த ஆட்சியைப்போல, முதலமைச்சரான நான் எனது படத்தைப் போட்டுக் கொண்டு இருந்தால், அதை விளம்பரம் என்று சொல்லலாம். கழக ஆட்சி கடந்த ஆண்டு பொறுப்புக்கு வந்தபோது, நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். பள்ளிக்கல்வித் துறை சார்பில், கடந்த ஆட்சிக் காலத்தில் அப்போதைய முதலமைச்சர்களின் படத்தை அச்சிட்டுத் தயாரிக்கப்பட்ட பைகள் இன்னமும் மீதம் இருக்கின்றன. அதைப் பயன்படுத்த வேண்டாம் என்று அமைச்சர், அதிகாரிகள் என்னிடத்தில் வந்து சொன்னார்கள். நான் உடனே சொன்னேன். அதைப் பயன்படுத்தாமல் போனால், ரூ.17 கோடி அரசுக்கு வீண் இழப்பீடு ஏற்படும், செலவு ஏற்படும், பணம் வீணாகும், "பரவாயில்லை, முன்னாள் முதலமைச்சர்கள் படமே இருக்கட்டும்" என்று சொல்லி. அந்தப் பைகளைக் கொடுக்கச் சொன்னவன்தான் இந்த ஸ்டாலின் என்பதை மக்களாகிய நீங்கள் அறிவீர்கள்.

விளம்பரங்கள் எனக்குத் தேவையில்லை. ஏற்கெனவே கிடைத்த புகழையும் பெருமையையும் காலமெல்லாம் கரையாமல் காப்பாற்றினால் போதும் என்று நினைப்பவன் நான்.

'திராவிட மாடல்' என்று சொன்னால், காலமெல்லாம் இந்த ஸ்டாலின் முகம்தான் நினைவுக்கு வரும்! இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்று சொன்னால் போதும்! என் குரல்



நினைவுக்கு வரும் உங்களுக்கு! 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை இந்தியா முழுமைக்கும் கொண்டு சேர்த்தது யார்? என்றால், என் முகம்தான் நினைவுக்கு வரும்! அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் என்பது, யார் ஆட்சிக் காலத்தில் அமலானது? என்று கேட்டால், என் முகம்தான் நினைவுக்கு வரும். தமிழ்நாட்டின் அம்பேத்கரான பெரியாருக்கும், இந்தியாவின் பெரியாரான அம்பேத்கருக்கும், அவர்களது பிறந்தநாளைச் சமூக நீதி நாளாகவும், சமத்துவ நாளாகவும் அறிவித்தது யார்? என்றால், என் பெயர்தான் நினைவுக்கு வரும்.கையில் காசு இல்லை என்றாலும் போகவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேரலாம் என்ற நம்பிக்கையுடன், பேருந்துகளில் ஏறும் பெண்களுக்கு எந்நாளும் என் முகம்தான் நினைவுக்கு வரும். நான் என்று சொல்வது தனிப்பட்ட இந்த ஸ்டாலின் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். நாம் அனைவரும் சேர்ந்த கூட்டுக்கலவைதான் நான்.

என்றும் உங்களில் ஒருவன்தான் நான்! முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்திருப்பதால் மட்டும் நான் அல்ல! உங்கள் அனைவரது சேர்க்கையாக நான் அமர்ந்திருக்கிறேன். நாம் அனைவரும் சேர்ந்து நடத்தும் ஆட்சிதான் இது! நமக்கான ஆட்சிதான் இது!

இந்த ஆட்சியானது கடந்த பத்தாண்டுக் காலமாக, தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சரிவைச் சீர் செய்து கொண்டிருக்கிறது. பள்ளத்தை நிரப்பி வருகிறது! துன்பங்களைப் போக்கி வருகிறது! தொய்வைத் துடைத்து வருகிறது! அதே சமயத்தில் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க எந்நாளும் உழைத்து வருகிறது. மீண்டும் சொல்கிறேன், நேற்றைக்கும் சொன்னேன், என் சக்தியை மீறியும் உங்களுக்காக உழைப்பேன், உழைப்பேன்!

இந்த உதயசூரிய அரசு உழைக்கும் உழைக்கும்! என்று உறுதியளித்து விடைபெறுகிறேன்!

❖ ❖ ❖



# கரூர் மாவட்டத்தில் 80,750 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 02.07.2022 அன்று கரூரில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.28.60 கோடி செலவில் முடிவுற்ற 95 திட்டப் பணிகளைத் திறந்துவைத்து, ரூ.581.44 கோடி மதிப்பீட்டிலான 99 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 80,750 பயனாளிகளுக்கு ரூ.500.83 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை,

உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம்!

பேசாமல் அப்படியே கொஞ்ச நேரம் நின்று கொண்டு உங்களை எல்லாம் பார்த்துக்கொண்டே இருந்தால்போதும் என்று சொல்லும் அளவுக்கு மாபெரும் கடல் அலையை இங்கே நான் பார்க்கிறேன்.

கடல் இல்லாத இந்தக் கரூருக்கு, மக்கள் கடலையே உருவாக்கி இருக்கிறார் நம்முடைய அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள். அலை இல்லாத கரூருக்குள் மக்கள் அலையை உருவாக்கி இருக்கிறார் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள்.

இங்கு மட்டுமல்ல, இந்த மாவட்டத்திற்குள்ளே நுழைந்ததில் இருந்தே நான் பார்க்கிறேன், பார்க்கும் இடமெல்லாம் மக்கள்! நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள்.

நோக்க நோக்க மகிழ்ச்சி என்று சொல்லிப் பாராட்டும் அளவுக்கு மக்கள் தலைகளால் கரூரை மக்களூராக மாற்றிக் காண்பித்திருக்கிறார் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள். எப்போதும், எந்த நேரத்திலும், எதையும் மிகப் பிரம்மாண்டமாகச் செய்துகாட்டக் கூடியவர் அவர். அடுத்த பிரம்மாண்டத்தை மிஞ்சக்கூடிய அளவுக்கு, அடுத்த பிரம்மாண்டத்தையும் அவரேதான் செய்வார். அந்த வகையில் ஒப்பில்லாத மிகப் பிரம்மாண்டமான ஒரு அரசு விழாவாக இது அமைந்துள்ளது.

எந்தப் பணியாக இருந்தாலும் அதற்கு ஒரு டார்கெட் நிர்ணயிப்பார். எந்தச் சூழலிலும் அந்த டார்கெட்டை முடித்துக் காட்டக் கூடியவர் என்று அவரை நான் ஏற்கெனவே பலமுறைப் பாராட்டி இருக்கிறேன், வாழ்த்தியிருக்கிறேன். அவர் அமைச்சராக வருவதற்கு முன்பு, மின்சாரத்துறை எந்த நிலைமையில் இருந்தது என்று உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

மக்களின் குறைகளை உடனடியாகத் தீர்க்க மின்னகம் சேவை மையம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மிகக் குறுகிய காலத்தில் ஒரு இலட்சம் உழவர்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. 316 துணை மின் நிலையங்கள் ஆகிய மாபெரும் சாதனைகளைச் செய்து அந்த துறையை மீட்டெடுத்து வருகிறார்.

அதே நேரத்தில், கரூர் மாவட்டத்தை மட்டுமல்ல, கோவை மாவட்டத்தில் பொறுப்பு அமைச்சராக பொறுப்பேற்று அந்த மாவட்டத்தையும் சேர்த்துக் கவனித்து, எங்கும் எந்தத் தொய்வும் இல்லாமல் அவர் செயல்பட்டு வருகிறார். இத்தகைய ஆற்றலை அனைவரும் பெற வேண்டும் என்று சொல்லும் அளவுக்குத் தன்னை அவர் நிரூபித்துக் கொண்டு வருகிறார்.

அந்த வரிசையில்தான், 80,750 பேருக்கு ரூ.500 கோடி மதிப்பிலான நலத்திட்டங்கள் வழங்கும் விழா, ரூ.28.60 கோடி மதிப்பிலான 95 பணிகளைத் திறந்து வைக்கும் விழா, ரூ.582 கோடி மதிப்பிலான 99 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் விழா என சுமார் ரூ.1,100 கோடி மதிப்பிலான திட்டப் பணிகளுக்கான விழாவாக இது அமைந்திருக்கிறது.

இதுவும் பிரம்மாண்டம்தான்!

கருநாடக மாநிலத்தின் குடகுமலையில் உற்பத்தியாகும் காவிரிக்கு ஆடு தாண்டும் காவிரி




என்று பெயர். அதாவது அவ்வளவு குறுகிய அளவுதான் அந்த நீர்ப்பகுதியின் அகலம் இருக்கும். ஆனால் தமிழ்நாட்டின் எல்லையில் நுழையும் காவிரி ஆறானது, கரூர் மாவட்டம், குளித்தலையில் பாயும்போது விரிவடைந்து பாயும். அதனால் அதற்கு 'காகம் கடக்கா காவிரி' என்று பெயர். அதாவது காகம் கூடக் கடக்க முடியாத அளவு என்று அதன் பிரமாண்டத்தைச் சொல்வார்கள்.

கரூர் என்றாலே பிரம்மாண்டம்தான். அதற்கு இந்த விழாவே மிகப் பெரிய சாட்சி, எடுத்துக்காட்டு இதற்கான ஏற்பாடுகளைச் செய்து அதில் வெற்றி பெற்றிருக்கக்கூடியவர், மன்னிக்க வேண்டும், மிகப் பெரிய வெற்றி பெற்றிருக்கக் கூடியவர் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களையும், அதேபோல் அவருக்குத் துணை நின்று பணியாற்றி இருக்கக்கூடிய, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நம்முடைய மேயர், துணை மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்பில் பொறுப்பேற்று இருக்கக்கூடிய பிரதிநிதிகள், அதிலும் குறிப்பாக, சிறப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர் அவர்களையும், மற்றுமுள்ள அதிகாரிகள், அலுவலர்களையும் மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன், நன்றி கூற விரும்புகிறேன்.

இன்று நடைபெறும் இந்த விழாவில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.26.39 கோடி மதிப்பீட்டில் 55 பணிகளுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் 6 பணிகளும், பேரூராட்சித்துறையின் சார்பில் ரூ.9.30 கோடி மதிப்பீட்டில் 9 பணிகளுக்கும், கலை பண்பாட்டுத்துறை சார்பில் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் ஒரு பணிக்கும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில் ரூ.387 கோடி மதிப்பீட்டில் 13 பணிகளுக்கும், மாநகராட்சித்துறை சார்பில் ரூ.51 கோடி மதிப்பீட்டில் 8 பணிகளுக்கும், நீர்வளத்துறைச் சார்பில் ரூ.91.58 கோடி மதிப்பீட்டில் 6 பணிகளுக்கும் என மொத்தம் ரூ.582 கோடி மதிப்பிலான 99 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இதை எல்லாம் விரைவில் உறுதியாக நான் வந்து திறக்கப் போகிறேன், விரைவாக, அந்த உறுதியை நான் முன்கூட்டியே வழங்க விரும்புகிறேன்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் 5 திட்டப்பணிகளும், வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் ஒரு பணியும், நில அளவைப் பதிவேடுகள் துறை சார்பில் 3 திட்டப்பணிகளும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில் 33 திட்டப்பணிகளும், கூட்டுறவுத்துறை சார்பில் 14 திட்டப்பணிகளும், பொதுப்பணித்துறை சார்பில் 9 திட்டப்பணிகளும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், 2 திட்டப்பணிகளும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை (சத்துணவு) சார்பில், 6 திட்டப்பணிகளும், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் சார்பில் 3 திட்டப்பணிகளும், நீர்வளத்துறைச் சார்பில் 19 திட்டப்பணிகளும் இன்றைக்குப் பொதுமக்களின் பயன்பாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இவற்றின் மொத்த மதிப்பு என்னவென்று கேட்டால் ரூ.28 கோடி.

ஏராளமான சாலைகள் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. அங்கன்வாடி மையங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. உணவுத் தானியக் கிடங்குகள் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. பல்வேறு இடங்களில் துணைச் சுகாதார நிலையக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கன்வாடி கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிகள் மறுசீரமைப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. பள்ளிகளில் சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன.

இவை அனைத்தையும் நான் இங்கே ஊர் வாரியாக சொல்லத் தொடங்கினால், நேரம் அதிகமாகும். அதனால், ஒட்டுமொத்தமாகச் சொல்லவேண்டுமென்றால், ஒவ்வொரு பகுதிக்கும், ஒவ்வொரு ஊருக்கும், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான திட்டப்பணிகள் செய்து முடிக்கப்பட்டும் இருக்கின்றன. புதியதாகக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டும் இருக்கிறது.

இந்த ஓராண்டுக் காலத்தில் ஓய்வில்லாமல் மக்கள் பணியை ஆற்றி வருகிறோம் என்பதற்கு இந்தக் கரூர் மாவட்டத்தில் செய்யப்பட்டிருக்கக்கூடிய சாதனைகளே சாட்சியாக அமைந்திருக்கிறது!

பொதுவாக, புதியதாக ஆட்சிக்கு வந்த ஒரு அரசாங்கத்திடம் முதல் ஆறு மாத காலம் எதையும் எதிர்பார்க்க மாட்டார்கள். இதுதான் வழக்கம்.




“இப்போதுதான் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள், எனவே அவர்களுக்கு ஆறு மாத காலம் அவகாசம் கொடுக்கலாம்” அப்படி என்று சொல்வார்கள்.

துறைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளும் காலம், முதல் ஆறு மாத காலம். அடுத்த ஆறு மாத காலம் என்பது திட்டமிடும் காலமாக அது அமையும். இரண்டாவது ஆண்டுதான் செயல்படுத்தத் தொடங்கும் காலமாக அமையும். ஆனால் ஆட்சிக்கு வந்த நொடியில் இருந்து செயல்படுத்தும் காலமாகத் தொடங்கிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி!

உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் ஆட்சி! ஏனென்றால் தலைவர் கலைஞர் அவர்கள் என்னுள் இருந்து என்னை இயக்கிக்கொண்டு இருக்கிறார். தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தால், என்ன நினைப்பார், என்ன சிந்திப்பார், எப்படிச் செயல்படுத்துவார் என்று நித்தமும் சிந்தித்து, நான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

இந்த ஓராண்டுக் காலத்தில் திட்டமிட்டோம், செயல்பட்டோம், உருவாக்கினோம், மக்கள் கையில் கொடுத்துள்ளோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு மக்களுக்குப் பயனுள்ள காலமாக இந்த ஓராண்டுக் காலம் அமைந்திருக்கிறது. தேர்தல் நேரத்தில் கரூர் மாவட்டத்திற்கென்று அளித்த வாக்குறுதிகளில் பலவற்றை, அனைத்தையும் அல்ல, பலவற்றை, இந்த ஓராண்டிலேயே நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம்.

இங்கே மாண்புமிகு அமைச்சர் திரு.செந்தில் பாலாஜி அவர்கள் பேசுகின்றபோது சொன்னாரே, கரூர் நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்துவோம் என்று சொன்னோம். செய்து காட்டியிருக்கிறோம்!

புகளூர், பள்ளப்பட்டி பேரூராட்சிகளை நகராட்சிகள் ஆக்குவோம் என்று சொன்னோம். அதை நிறைவேற்றி இருக்கிறோம். அரவக்குறிச்சியில் அரசு கலை, அறிவியல் கல்லூரி தொடங்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தோம். அதை நிறைவேற்றியிருக்கிறோம்.

கரூரில் சுற்றுவட்டச் சாலை, சாயப்பட்டறைப் பூங்கா, காமராசர் மார்க்கெட்டில் புதிய வளாகம் ஆகியவை அறிவிக்கப்பட்டு விரைவில் நிறைவேற்றப்பட இருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஜவுளித்தொழிலில் தலைசிறந்து விளங்கும் இந்தக் கரூர் மாவட்டத்தில், இந்தத் தொழிலை மேலும் மேம்படுத்திட சிப்காட் பூங்கா ஒன்று அமைக்கப்படும் என ஏற்கெனவே அறிவித்து இருந்தோம்.

இதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் இப்போது நடைபெறத் தொடங்கி இருக்கிறது. நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் சொன்னார்களே, நேற்று இரவு நான் கரூருக்கு வந்தவுடனே இந்த மாவட்டத்தில் உட்பட்டிருக்கக்கூடிய தொழில் முனைவோர்கள், என்னைச் சந்திக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை நம்முடைய அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். கிட்டதட்ட ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் அவரோடு நான் கலந்து பேசினேன். அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள், நமது ஆட்சியிலே இப்போது ஒரு வருடத்தில் கிடைத்திருக்கக்கூடிய நன்மைக்கு நன்றி தெரிவித்தார்கள். அதே நேரத்தில் சில கோரிக்கைகளையும் முன்வைத்தார்கள். அந்த அடிப்படையில், சில அறிவிப்புகளை நான் வெளியிடுகிறேன்.

இந்த மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் ஜவுளிப்பொருட்களை வாங்க பல்வேறு மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வரக்கூடிய வாடிக்கையாளர்களுக்கு, இந்தப் பொருட்களைக் காட்சிப்படுத்தத் தேவையான காட்சி அரங்கம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக உள்ளதாகச் சொன்னார்கள். இதனை இந்த அரசு ஏற்று, ஜவுளி உற்பத்தியாளர்களுடன் இணைந்து அத்தகைய பெரும் காட்சி அரங்கம் மற்றும் வளாகம் ஒன்று கரூர் மாவட்டத்தில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று கரூர் மாவட்டத்தில் உற்பத்தியாகும் ஜவுளிப்பொருட்களின் தரம், தொழில்நுட்பம் குறித்த பரிசோதனைகளை இங்கேயே மேற்கொள்வதற்காக, சர்வதேசத் தரத்திலான ஜவுளிப்பொருட்கள் பரிசோதனை நிலையம் (Advanced Testing Lab) ஒன்றும் கரூர் மாவட்டத்தில் அமைக்கப்படும்.

அதேபோல் மாநகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகப் புதிய பேருந்து நிலையம்



வேண்டும் என்பது இந்த மாநகர மக்களின் நீண்டகால கோரிக்கை. இதனை நிறைவேற்றக்கூடிய வகையில், திருமாநிலையூரில் ரூ.47 கோடி செலவில் நவீனப் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

மற்ற கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளோடு, அமைச்சர்களோடு கலந்து பேசி வருங்காலத்தில் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஓராண்டுக் காலத்தில் இந்தக் கரூர் மாவட்டத்திற்குச் செய்திருக்கக்கூடிய சாதனைகள் மட்டுமல்ல, இதேபோல் மற்ற மாவட்டங்களுக்குச் செய்திருக்கக்கூடிய சாதனைகள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்திருக்கக்கூடிய சாதனைகளைப் பார்க்கும்போது நான் மனநிறைவை அடைகிறேன்.

இந்த ஓராண்டுக் காலமானது எனக்கு மனநிறைவைத் தருகிறது. ஒவ்வொருவருக்கும் அவரது மனசாட்சிதான் நீதிபதி என்று சொல்லுவார்கள். அந்த வகையில் எனது மனசாட்சி அளிக்கும் தீர்ப்பு இது!

இதுதான் மக்களுடைய மனங்களிலும் இருக்கிறது என்பதன் அடையாளம்தான் உங்கள் முகங்களில் பார்க்கக்கூடிய மகிழ்ச்சி. நான் செல்கின்ற இடமெல்லாம் மக்கள் அலையலையாக வருகிறார்கள் என்பது மட்டுமல்ல, அந்த மக்களின் முகங்களில் நான் மலர்ச்சியைப் பார்க்கிறேன், மகிழ்ச்சியைப் பார்க்கிறேன்.

'உன்னுடைய ஆட்சிக் காலத்தில் நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம்' என்று அவர்கள் முகங்கள் சொல்கின்றன. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். இந்த முகங்களின் மூலமாகத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மக்களை முன்னேற்றும் ஆட்சியாக அமைந்துள்ளது என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது. அதனால்தான் நான் வீண் விமர்சனங்களுக்கெல்லாம் பதில் சொல்லி என்னுடைய நேரத்தை வீணடிப்பதில்லை. இப்போது எனக்கு மக்களுக்கு நன்மை செய்வதற்கே நேரம் போதவில்லை. அதனால் அக்கப்போர் மனிதர்களின் அரைவேக்காட்டு விமர்சனங்களுக்கு நான் பதில் சொல்வதற்குத் தயாராக இல்லை. அதற்கு நேரமில்லை.

"மானத்தைப் பற்றிக் கவலைப்படும் ஆயிரம் பேருடன் கூடப் போராடலாம். ஆனால் மானத்தைப் பற்றிக் கவலைப்படாத ஒரே ஒரு ஆளுடன் நாம் போராடவே முடியாது" என்று தந்தைப் பெரியார் அவர்கள் சொல்வார். அடிக்கடிச் சொல்வார். அப்படி மானத்தைப் பற்றிக் கவலைப்படாத மனிதர்கள் வைக்கும் விமர்சனத்தைப் பற்றி நான் மதிக்க விரும்பவில்லை.

தி.மு.க. ஆட்சியானது எப்படிச் செயல்படுகிறது என்பதை இதுபோன்ற மனிதர்கள் முன்னால் மைக்கை நீட்டாமல், தமிழ்நாட்டு மக்கள் முன்னால் மைக்கை நீட்டித் தெரிந்து கொள்ளுங்கள், யாருக்குச் சொல்கிறேன், இதோ இங்கே இருக்கக்கூடிய ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களுக்குச் சொல்கிறேன். உரிமையோடு சொல்கிறேன். யார் யாரிடமோ மைக்கை நீட்டுகிறீர்களே, மக்களிடம் சென்று மைக்கை நீட்டிப் பாருங்கள். மிகவும் உரிமையோடு உங்களிடத்தில் கேட்கிறேன்.

பேருந்துகளில் இலவசப் பயணம் என்பது அதிலிருந்து நகைக்கடன் தள்ளுபடி என்பதுவரை பயன்பெற்ற கோடிக்கணக்கான பெண்களிடத்தில் சென்று நீங்கள் கேளுங்கள்! இல்லம் தேடிக் கல்வித் திட்டம் முதல் உயர்கல்வி கற்கக்கூடிய அரசுப் பள்ளி மாணவியருக்கு ஆயிரம் ரூபாய் என்பது வரையிலான கல்வித் திட்டங்கள் குறித்து மாணவச் செல்வங்களிடத்தில் சென்று நீங்கள் மைக்கை நீட்டுங்கள்! நான் முதல்வன் திட்டம் முதல் தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்பது வரையிலான திட்டங்கள் குறித்து இளைஞர்களிடத்தில் சென்று கேளுங்கள்!

இருளர்கள், நரிக்குறவர்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் என விளிம்புநிலைக்குக் கீழே இருக்கக்கூடிய மக்களிடம் இந்த ஆட்சியைப் பற்றிப் போய் கேளுங்கள்! தூர்வாரிய பணிகள் முதல் விளை பொருட்களுக்கான தொகுப்புகள் வரை அதனால் பயனடையும் நம்முடைய வேளாண் பெருங்குடித் தோழர்களிடம் இந்த ஆட்சியைப் பற்றிக் கேளுங்கள்!

'மீண்டும் மஞ்சப்பை' முதல் சுற்றுச்சூழலுக்கான எடுக்கப்பட்ட முன்னெடுப்புகள் பற்றி சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடம் சென்று கேளுங்கள்! இந்த ஆட்சியில் சமூக நீதி எந்தளவுக்குப் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது என்பது குறித்து சமூகநீதிக்காகப் போராடுபவர்களிடம் சென்று கேளுங்கள்!

அவர்கள் இந்த ஆட்சியின் சாதனைகளைப் பற்றிச் சொல்வார்கள். தாங்கள் அடைந்த பயனைப் பற்றிச் சொல்வார்கள். நியாயமான கோரிக்கையை யார் வைத்தாலும் அதை நிறைவேற்றித் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அனைவருடைய கருத்தையும் கேட்டு, அதனைச் செயல்படுத்தித் தருபவனாகத்தான் நான் இருக்கிறேனேத் தவிர, நான் நினைப்பது மட்டும்தான் நடக்க வேண்டும் என்று நினைப்பவனல்ல நான்.

இத்தகைய மக்களிடம் கருத்துக்களைப் பெற்று ஊடகங்கள் ஆட்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். தாங்களும் இருக்கிறோம் என்பதைக் காட்டிக்கொள்வதற்காக நாள்தோறும் மைக் முன்னால் வாந்தி எடுப்பவர்கள் அளிக்கும் பேட்டிகளுக்கு நான் பதில் சொல்வதற்கு என்றைக்கும் தயாராக இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை விமர்சிப்பதன் மூலமாக என்னை எதிர்த்துக் கருத்துச் சொல்வதன் மூலமாகப் பிரபலம் அடையலாம் என்று நினைப்பவர்களைப் பார்த்து நான் வருத்தப்படுகிறேன்.

நான் கோடிக்கணக்கான தமிழ் மக்களின் வீட்டில் அவர்களின் வீட்டில் விளக்கு ஏற்றவேண்டும் என்று விரும்புகிறவன். அதுவும் சாதாரண விளக்காக அல்ல, அது அறிவு விளக்குகளாக, அன்பு விளக்குகளாக, சேவை விளக்குகளாக, மற்றவர்களுக்குப் பயன் தரும் விளக்குகளாக அமைய வேண்டும் என்று நினைக்கிறேன்.

உங்களில் ஒருவனாக என்னை ஏற்றுக்கொண்டு முதலமைச்சர் நாற்காலியைத் தமிழ்நாட்டு மக்கள் எனக்கு வழங்கி இருக்கக் காரணம் என்ன? தங்களுக்கு நல்லது செய்வான் என்ற நம்பிக்கையில்தான்! அந்த நம்பிக்கையை நான் எந்நாளும் காப்பாற்றுவேன்.

இந்த மாவட்டம், முன்பு கருவூர் என்றுதான் அழைக்கப்பட்டது. அதுவே பின்பு கரூர் ஆனது என்பார்கள். அந்தக் கரூரில், 95 வயது வரையில் தமிழ்ச் சமுதாயத்துக்காக எழுதியும், பேசியும், செயல்பட்டும், உழைத்தத் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், சட்டமன்றத்திற்கு முதன்முதலில் நுழையக் காரணமான குளித்தலைத் தொகுதியை உள்ளடக்கிய மாவட்டம் இந்த மாவட்டம்.

தலைவர் கலைஞர் அவர்களின் சட்டமன்ற வாழ்க்கை கருவான ஊர் இந்தக் கரூர் மாவட்டம். அமைச்சர் செந்தில் பாலாஜி என்னை மக்கள் கடல் அலையில் மிதக்க வைத்துள்ளார். நேற்று இரவிலிருந்து இந்த நிமிடம் வரையில். அதற்காக மீண்டும், மீண்டும் உங்கள் அனைவரின் சார்பில் என்னுடைய வாழ்த்துக்களை மீண்டும் ஒருமுறை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



இந்தக் கூட்டத்தின் வாயிலாக ஒரு கோரிக்கையைக் கரூர் மாவட்டத் தொழில் முனைவோர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், கரூர் மாவட்ட மக்களுக்கு நான் வைக்க விரும்புகிறேன். என்னவென்று கேட்டால், நமது மாநிலத்தினுடைய தொழில் துறையில் மிகவும் முன்னேறிய மாவட்டங்களில் ஒன்றாகத் திகழக்கூடிய இந்தக் கரூர் மாவட்டம். ஜவுளி உற்பத்தித் தொழில், கொசு வலை உற்பத்தி, வாகனங்களுக்குக் கூண்டுகள் கட்டுதல், முருங்கை ஏற்றுமதி போன்ற பல்வேறு துறைகளில் நம்முடைய மாநிலத்தில் முதன்மை மாவட்டமாக இந்த மாவட்டம் விளங்குகிறது. இந்தத் தொழில் வளர்ச்சியில் கரூர் மாவட்டம் மேலும், மேலும் உயர்ந்து ஏற்றுமதியில் சிறந்து இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால் திருப்பூர் மாவட்டத்திற்கிணையாக வளர வேண்டும் என்பது என்னுடைய ஆசை. என்னுடைய கோரிக்கை. அதனை நீங்கள் நிறைவேற்றுவீர்களா? உங்களைத்தான் கேட்கிறேன், நீங்கள் நிறைவேற்றத் தயாராய் இருக்கிறீர்களா? எனவே அப்படிப்பட்ட உணர்வோடு நான் சொல்ல விரும்புவது மாவட்டங்களுக்குள் இத்தகைய ஆரோக்கியமான தொழில் போட்டிகள் இருக்கத்தான் வேண்டும். ஏன் என்று கேட்டீர்கள் என்றால், மாவட்டங்கள் வளர, மாநிலம் வளரும், அந்த வளர்ச்சிக்கு எந்நாளும் உதவக்கூடிய கலங்கரை விளக்காகத் திராவிட மாடல் ஆட்சி திகழும், திகழும் என்பதை இந்தக் கரூரில் வீரமாக நான் சூளுரைத்து விடைபெறுகிறேன்.



# ரூ.3.93 கோடியில் 14 நடமாடும் தடய அறிவியல் ஆய்வக வாகனங்கள்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.07.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தடய அறிவியல் துறையின் பயன்பாட்டிற்காக ரூ.3.93 கோடி செலவில் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ள 14 நடமாடும் தடய அறிவியல் ஆய்வக வாகனங்களைக் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.07.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தடய அறிவியல் துறையின் தலைமை ஆய்வகத்திற்குத் தேசியப் பரிசோதனை மற்றும் அளவு ஒப்புகை ஆய்வகங்களின் தர அங்கீகார அமைப்பு (National Accreditation Board for Testing, Calibration of Laboratories) ISO/IEC 17025:2017 வழங்கியுள்ள, சர்வதேசத் தரச் சான்றிதழைத் தமிழ்நாடு தடய அறிவியல் துறை இயக்குநர் (பொறுப்பு) முனைவர் க.திருநாவுக்கரசு அவர்கள் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.



# சென்னையில் "முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு"




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 04.07.2022 அன்று சென்னையில் தொழில்துறை சார்பில் "முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு" என்ற முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டின் வாயிலாக மொத்தம் 60 திட்டங்களின் மூலம் ரூ.1,25,244 கோடி முதலீட்டில், 74,898 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. முதலீடுகளைப் பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடும் வகையில் தமிழ்நாடு அரசு மாநிலப் பொருளாதாரத்தை வலுவடையச் செய்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிருணயித்துள்ள இலக்கான 2030–2031ஆம் நிதியாண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சியடைய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

இன்று நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு உயிர் அறிவியல் கொள்கை 2022, தமிழ்நாடு ஆராய்ச்சி, மேம்பாட்டுக் கொள்கை ஆகியவற்றையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

**டிஎன்டெக்ஸ்பீரியன்ஸ் துவக்கம்:**

மாநிலத்தில் நிதித் தொழில்நுட்பங்கள் பரவலாகப் பின்பற்றப்படுவதை அதிகரிக்கும் வகையில்,

## 74,898 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 60 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

டிஎன்டெக்ஸ்பீரியன்ஸ் (TNTecxperience) திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டம் மூலம் தனிநபர்கள் / புத்தொழில் நிறுவனங்கள் / குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், நிதி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதை மேலும் மேம்படுத்தும் வகையில், நிதிநுட்பச் சேவைகளை இலவசமாகவோ அல்லது சில காலத்திற்குக் குறைவான கட்டணத்திலோ பெறலாம்.

மேலும், டிஎன்டெக்ஸ்பீரியன்ஸ் திட்டத்திற்கான இணைய தளத்தையும் (https://tntecxperience.com) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

**தமிழ்நாடு நிதித் தொழில்நுட்ப முதலீட்டுக் களவிழா (TN PitchFest)**

மேலும், இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு நிதித் தொழில்நுட்ப முதலீட்டுக் களவிழா (TN PitchFest) தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில்களுக்கு ஒரு தளத்தை உருவாக்கும் வகையிலும், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் சூழலைத் தொழில் மூலதன நிறுவனங்கள், புது முதலீட்டாளர்களுக்கு அறியப்படுத்தும் வகையில் ஒரு நிதிநுட்ப முதலீட்டுக் களவிழா (TN PtichFest), மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. வழிகாட்டி நிறுவனமும், StartupTN நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தினை மேற்கொள்கின்றன. இந்த நிகழ்விற்கான விவரங்களை https://tntecxperience.com/users/tnpitchfest என்ற இணைய தளத்தில் பார்த்து அறிந்துகொள்ளலாம்.



தமிழ்நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை 2022 வெளியீடு

**நிதித் தொழில்நுட்ப நிறுவனப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

இந்த நிகழ்வில், 11 நிதித் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் நிறுவனப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டன.

VakilSearch (Uber9 Business Process Services Private Limited), PrimeInvestor Financial Research Pvt Ltd, Qapita FinTech India Private Limited, Flexibees Business Services Private Limited, Simply Vyapar Apps Private Limited, M2P Solutions Private Limited, Gupshup Technology India Private Limited, PayU, Infosys Limited, Mastercard, PhonePe Private Limited.

**நிதித் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான ஊக்கத் தொகுப்புச் சலுகை :**

நிதித் தொழில்நுட்பக் கொள்கையின்கீழ் ஊக்குவிப்புச் சலுகை வழங்குவதற்கு நிதிநுட்ப ஆட்சிமன்றக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட 2 நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகுப்புச் சலுகை அளிப்பதற்கான ஆணைகளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்நிறுவனங்களுக்கு வழங்கினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு: Prime Investor Financial Research Pvt. Ltd, DigiMoney Finance Pvt. Ltd.

**புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

ரூ.65,373 கோடி முதலீடு, 58,478 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 53 திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

அதன் விவரங்கள் பின்வருமாறு:–

தூத்துக்குடியில் Amplus (Petronas) மூலம் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி; தமிழ்நாட்டில் Cubic PV மூலம் மின்னணுப் பொருட்கள் உற்பத்தி; சென்னையில் BAM Digital Realty மூலம் தகவல் தரவு மையம் பொருட்கள் உற்பத்தி; சிறுசேரி, செங்கல்பட்டில் Sify மூலம் தகவல் தரவு மையம் பொருட்கள் உற்பத்தி; ஒசூர், கிருஷ்ணகிரியில் MWIVEN மூலம் விண்வெளி மற்றும் பாதுகாப்பு உதிரிப்பாகங்கள் உற்பத்தி; அம்பத்தூரில் Lumina CloudInfra மூலம் தகவல் தரவு மையம் பொருட்கள் உற்பத்தி; கோயம்புத்தூரில் L&T மூலம் தகவல் தொழில்நுட்பப் பொருட்கள் உற்பத்தி; தூத்துக்குடி & திருவள்ளூரில் Century Ply மூலம் மரச்சாமான்கள் உற்பத்தி; சிறுசேரி, செங்கல்பட்டில் Equinix மூலம் தகவல் தரவு மையம் பொருட்கள் உற்பத்தி; கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டில் ENES Textile mills (Ramraj) மூலம் ஜவுளி மற்றும் ஆடைகள் உற்பத்தி; தமிழ்நாடு முழுவதும் Rane Holdings Limited மூலம் மோட்டார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி; தருமபுரியில் E-Man Automotive India Pvt Ltd மூலம் மின் வாகனங்கள் பொருட்கள் உற்பத்தி; கிருஷ்ணகிரியில் WEG Industries (India) Pvt Ltd மூலம் காற்றாலைகளுக்கான மோட்டார் பொருட்கள் உற்பத்தி; Rockwool Group மூலம் பொது உற்பத்தி; செங்கல்பட்டு, செய்யாறு, கோயம்புத்தூரில் Mahindra & Mahindra Limited மூலம் ஆராய்ச்சி மேம்பாட்டு மைய விரிவாக்கம், சோதனைச் சாலை விரிவாக்கம்; மணலூர், கும்மிடிப்பூண்டியில் Voltas (TATA enterprise) மூலம் மின்னணுப் பொருட்கள் உற்பத்தி; திருவள்ளூரில், Caterpillar India Pvt Ltd மூலம் பொது உற்பத்தி; திருப்பூரில், Sivaraj Spinning Mills Pvt Ltd மூலம் ஜவுளி மற்றும் ஆடைகள் உற்பத்தி; Agger Technologies மூலம் மின்னணு உபகரணங்கள் உற்பத்தி; திருப்பூர், திண்டுக்கலில், KM Knitwear மூலம் ஜவுளி, ஆடைகள் உற்பத்தி; கிருஷ்ணகிரியில், Flex Foods மூலம் விவசாயப் பொருட்கள் உற்பத்தி; திருவள்ளூரில் Ashirvad Pipes Private Limited மூலம் பிவிசி பைப்புகள் உற்பத்தி; ஒசூர், கிருஷ்ணகிரியில், Bharat Fritz Werner Ltd மூலம் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி; கிருஷ்ணகிரியில், Maiva Pharma Pvt Ltd மூலம் மருத்துவப் பொருட்கள் உற்பத்தி; திருப்பூரில், KRG textile Mills Pvt Ltd மூலம் நூற்பாலைப் பொருட்கள் உற்பத்தி; ஈரோடு மற்றும் கிருஷ்ணகிரியில், Gokaldas Group மூலம் ஆடைகள் உற்பத்தி; சென்னையில், Cellestial E-Trac Pvt Ltd மூலம் மின்சார டிராக்டர்கள் உற்பத்தி; சிவகங்கையில், Acat Flying Academy Pvt Ltd மூலம் விமானப் பயிற்சிப் பொருட்கள் உற்பத்தி; ஒரகடத்தில், Bharat Alt Fuel மூலம் மின்சார இரு சக்கர வாகனங்கள் உற்பத்தி; சென்னை, விழுப்புரம் மற்றும் கிருஷ்ணகிரியில், Syrma SGS மூலம் மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் உற்பத்தி; கோயம்புத்தூரில், JS Auto Cast Foundry India Pvt Ltd (Bharat Forge Group) மூலம் வார்ப்புகள் உற்பத்தி; ஒசூர், கிருஷ்ணகிரியில், CIE Hosur Ltd (Phase-3) மூலம் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி; மண்ணப்பாறை, திருச்சியில், Muralya Diary மூலம் பால் பதனிடும் ஆலைப் பொருட்கள் உற்பத்தி; செங்கல்பட்டில், Hablis Health Care மூலம் பல்சிறப்பு மருத்துவமனைப் பொருட்கள் உற்பத்தி; மறைமலைநகர், செங்கல்பட்டில், Reep Industries மூலம் மின்சார பேருந்து உற்பத்தி; திருவள்ளூரில், Tropical Agro மூலம் உரம் உற்பத்தி; சென்னையில், 3i Medical Technologies Pvt Ltd மூலம் மருத்துவப் பொருட்கள் உற்பத்தி; கிருஷ்ணகிரியில், Aventose Energy மூலம் மின் இரு சக்கர வாகனங்கள் உற்பத்தி; திருவண்ணாமலையில், Scott Bader மூலம் இரசாயனப் பொருட்கள் உற்பத்தி; சென்னையில், GX India Private Limited மூலம் புத்தாக்கம், மேம்பாடு மையம் பொருட்கள் உற்பத்தி; சென்னையில், Digiryte




தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை வெளியீடு

Private Limited மூலம் தகவல் தொழில்நுட்பப் பொருட்கள் உற்பத்தி; திருவள்ளூர், விருதுநகரில், Saveetha Group (NMV University) மூலம் பல்சிறப்பு மருத்துவமனைப் பொருட்கள் உற்பத்தி; சிவகங்கையில், JC Indian Airline Academy மூலம் விமானப் பயிற்சிப் பொருட்கள் உற்பத்தி; நாமக்கல் மற்றும் கரூரில், Sethiya Exports Pvt Ltd மூலம் நூற்பாலை பொருட்கள் உற்பத்தி; திருப்பூரில், KPR Sugar & apparels Limited மூலம் ஜவுளி / ஆடைகள் உற்பத்தி; திருவண்ணாமலையில், Galva Decoparts மூலம் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி; குன்றத்தூர், காஞ்சிபுரத்தில், JOST மூலம் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் உற்பத்தி; செங்கல்பட்டில், Linea Fashions (India) Pvt Ltd மூலம் ஆடைகள் உற்பத்தி; சென்னையில், TaskUS India Private Limited மூலம் தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பச் சேவைப் பொருட்கள் உற்பத்தி; கோயம்புத்தூரில், Elgi Sauer மூலம் கப்பலுக்கான பம்புகள் உற்பத்தி; WickedRide Adventure (Bounce) மூலம் மின் வாகன உபகரணங்கள் உற்பத்தி; ஓசூர், கிருஷ்ணகிரியில், Entuple E Mobility மூலம் மின் வாகன உபகரணங்கள் உற்பத்தி; Garuda Aerospace மூலம் டிரோன்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

**சிறப்புத் தொகுப்புச் சலுகை அளிக்கப்பட்ட 7 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

ரூ.59,871 கோடி முதலீடு, 16,420 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் சிறப்புத் தொகுப்புச் சலுகை அளிக்கப்படும் 7 திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

தூத்துக்குடியில், ACME Green Hydrogen and Chemicals Pvt Ltd மூலம் பசுமை அமோனியா பொருட்கள் உற்பத்தி; சிப்காட் கங்கைகொண்டான், திருநெல்வேலியில், Tata Power மூலம் மின்னணுவியல் பொருட்கள் உற்பத்தி; திருவள்ளூரில், Lucas TVS மூலம் லித்தியம் அயன் செல்கள் உற்பத்தி; ஓசூர், கிருஷ்ணகிரியில், MPlastics Toys and Engineering Pvt Ltd மூலம் விளையாட்டுப் பொருட்கள் உற்பத்தி; பொள்ளாச்சி, கோயம்புத்தூரில், VVDN மூலம் தகவல் தொழில்நுட்பப் பொருட்கள் உற்பத்தி; தஞ்சாவூர், விழுப்புரத்தில், Aravind Ceramics மூலம் பொது உற்பத்தி; ஓசூர், கிருஷ்ணகிரியில், IAMPL மூலம் விண்வெளி, பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தி.

என மொத்தம் ரூ.1,25,244 கோடி முதலீட்டில் 74,898 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிடும் 60 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டன.

**ரூ.22,252 கோடி முதலீட்டிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.22,252 கோடி முதலீட்டில், 17,654 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் பின்வரும் 21 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

சேலம், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர், திண்டுக்கல், தென்காசியில், JSW Renew Energy மூலம் காற்றாலை எரிசக்தி உற்பத்தி; சிறுசேரி, செங்கல்பட்டில், Sify Technologies மூலம் தகவல் தரவு மையப் பொருட்கள் உற்பத்தி; காஞ்சிபுரத்தில், L&T Data Centre மூலம் தகவல் தரவு மையப் பொருட்கள் உற்பத்தி; கோயம்புத்தூரில், L&T மூலம் தகவல் தொழில்நுட்பப் பொருட்கள் உற்பத்தி; அம்பத்தூர், சென்னையில், CtrlS மூலம் தகவல் தரவு மையப் பொருட்கள் உற்பத்தி; செங்கல்பட்டில், Equinix மூலம் தகவல் தரவு மையப் பொருட்கள் உற்பத்தி; ஈரோட்டில், Jay Jay Mills (India) Pvt Ltd மூலம் ஜவுளி மற்றும் ஆடைகள் உற்பத்தி; காஞ்சிபுரத்தில், Rajratan Global Wire Ltd மூலம் டயர்களுக்கான உபகரணங்கள் உற்பத்தி; சேலம் / கரூரில், Arthanari Loom Centre (Textiles) Pvt Ltd மூலம் நூற்பாலைப் பொருட்கள் உற்பத்தி; ஈரோட்டில் Ansell Sterile Solutions - Ph 2 மூலம் கையுறைப் பொருட்கள் உற்பத்தி; ஓசூர், கிருஷ்ணகிரியில், WEG Industries (India) Pvt Ltd மூலம் காற்றாலைகளுக்கான மோட்டார் உற்பத்தி; கிருஷ்ணகிரியில், Mylan Laboratories Limited மூலம் மருந்துப் பொருட்கள் உற்பத்தி; கடலூர், புதுக்கோட்டையில், KKP Group of Companies மூலம் நூற்பாலைப் பொருட்கள் உற்பத்தி; கிருஷ்ணகிரியில், Schaeffler India Ltd. மூலம் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி; சென்னை, திருவள்ளூர், புதுக்கோட்டையில், SRF Ltd மூலம் தொழில்நுட்ப ஆடைகள் உற்பத்தி; காஞ்சிபுரத்தில், Avigna Industrial Park மூலம் தொழிற்பூங்காப் பொருட்கள் உற்பத்தி; கோயம்புத்தூரில், Makino India Pvt Ltd மூலம் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி; விருதுநகரில், Kartya Textiles மூலம் நூற்பாலைப்பொருட்கள் உற்பத்தி; ஈரோட்டில், Gokaldas Group மூலம் ஜவுளி, ஆடைகள் உற்பத்தி; திருவண்ணாமலையில், Galva Decoparts மூலம் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி; செங்கல்பட்டில், Levim Lifetech Pvt Ltd மூலம் மருந்துப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

**ரூ.1,497 கோடி முதலீட்டிலானத் திட்டங்களை தொடங்கிவைத்தல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மொத்தம் ரூ.1,497 கோடி முதலீட்டில் 7,050 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் பின்வரும்




12 திட்டங்களின் வணிக உற்பத்தியினைத் தொடங்கி வைத்தார்.

கிருஷ்ணகிரியில், Avigna Industrial Park மூலம் தொழிற்பூங்காப் பொருட்கள் உற்பத்தி; ஓசூரில், CIE Hosur Ltd மூலம் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி; திண்டுக்கல்லில், Gainup Industries (Phase I of IV) மூலம் ஜவுளிப் பொருட்கள் உற்பத்தி; இருங்காட்டுக் கோட்டையில், Steel Shoppe மூலம் எஃகுப் பொருட்கள் (மோட்டார் வாகனம் உற்பத்தி; கோயம்புத்தூரில், Rathinam Tech Zone Phase 2 மூலம் தகவல் தொழில் நுட்பப் பூங்காப் பொருட்கள் உற்பத்தி; ஈரோட்டில், Ansell Sterile Solutions Ph-1 மூலம் பேக்கேஜிங் பொருட்கள் உற்பத்தி; காஞ்சிபுரத்தில், Cubic Modular System India Pvt Ltd மூலம் மின் இணைப்புப் பொருட்கள் உற்பத்தி; கிருஷ்ணகிரியில், Mitsuya Farms Private Limited மூலம் உணவுப் பொருட்கள் உற்பத்தி; ஒரகடத்தில், Subros phase-1 மூலம் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி; காஞ்சிபுரத்தில், BSA Corporation Ltd மூலம் மோட்டார் வாகனங்களுக்கான Wiring உற்பத்தி; கிருஷ்ணகிரியில், Gokaldas Exports Ph-1 மூலம் ஜவுளி பொருட்கள் உற்பத்தி; கோயம்புத்தூரில், Tech Mahindra மூலம் தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பச் சேவைப் பொருட்கள் உற்பத்தி;

இந்த திட்டங்கள் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கரூர், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

**தமிழ்நாடு உயிர் அறிவியல் கொள்கை 2022 வெளியீடு**

2021–2022ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட உரையில் அறிவித்தவாறு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயிர் அறிவியல் துறையில் தமிழ்நாட்டின் பங்கினை மேலும் வலுப்படுத்தும் வகையில், தமிழ்நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை 2022யை வெளியிட்டார்.

**தமிழ்நாடு ஆராய்ச்சி, மேம்பாட்டுக் கொள்கை 2022 வெளியீடு**

2021–2022ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட உரையில் அறிவித்தவாறு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆராய்ச்சி, மேம்பாட்டுத்துறையில் தமிழ்நாட்டின் பங்கினை மேலும் வலுப்படுத்தும் வகையில், தமிழ்நாடு ஆராய்ச்சி, மேம்பாட்டுக் கொள்கை 2022யை வெளியிட்டார்.

**நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை**

உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனது உரையைத் தொடங்குவதற்கு முன்னால், மகிழ்ச்சிகரமான ஒரு செய்தியை உங்களோடு நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். தொழில் தொடங்க சிறந்த மாநிலங்களின் பட்டியலில் நம்முடைய தமிழ்நாடு 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளது என்ற செய்தி மிகப்பெரிய வரலாற்றுச் சாதனையாக அமைந்திருக்கிறது. 14ஆவது இடத்தில் இருந்து, இன்றைக்குத் தமிழ்நாடு 3ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறது. இது, இந்த ஆட்சிக்குக் கிடைத்திருக்கக்கூடிய மிகப் பெரிய ஒரு நற்சான்றிதழ் ஆக அமைந்திருக்கிறது.

ஆட்சிக்கு வந்து ஓராண்டுக் காலத்திலேயே இத்தகைய இமாலயச் சாதனையை நாம் அடைந்திருக்கிறோம். இதற்கு முழுமுதல் காரணமாக அமைந்துள்ள மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். கடந்த காலங்களில் நம்முடைய கழக ஆட்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக இருந்து, மிக மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள். இந்த முறை அமைச்சரவையில் அவருக்கு அதே துறையை வழங்குவதா ? வேறு துறையை வழங்குவதா ? என்று நான் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, திடீரென்று தொழில் துறையை நான் தேர்ந்தெடுத்தேன்.

கடந்த காலத்தில் மிக மிகத் தொய்வாக இருந்த இந்தத் துறையை மீட்டெடுப்பதற்கு, ஆர்வமான, திறமையான,

துடிப்பான பல்வேறு முயற்சிகளைத் துணிச்சலாகச் செய்யக்கூடிய தங்கம் தென்னரசு இருந்தால்தான் சரியாக இருக்கும் என்று நினைத்து அவர் பெயரை நான் 'டிக்' செய்தேன்.

என்னுடைய தேர்வு சரியாக இருந்தது என்பதை நித்தமும் அவர் நிரூபித்துக் கொண்டிருக்கிறார். தமிழ்நாடு அரசின் தொழில்துறையைத் தங்கமாக மாற்றி வரும் தங்கம் தென்னரசு அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதேபோல, இந்தத் துறையின் செயலாளர் திரு.கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களும், அவருக்கு துணைநிற்கக்கூடிய அதிகாரிகள், அலுவலர்கள் என அனைவரையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாநாடு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியோடு தொடங்கியிருக்கிறது. தொழில்துறை சார்பாக நடக்கும் இந்த முதலீட்டு மாநாட்டில் பங்கேற்பதில் மிக்க பெருமையும், மகிழ்ச்சியும் நான் அடைகிறேன்.

நமது அரசு ஆட்சிப் பொறுப்பேற்று இதுவரை 5 மாநாடுகளை நடத்தி இருக்கிறோம். சென்னையில் இரண்டு மாநாடுகள் நடந்திருக்கின்றன. கோவையில் ஒரு மாநாடும், தூத்துக்குடியில் ஒரு மாநாடும், துபாயில் ஒரு மாநாடும் நடந்துள்ளன.

இந்த மாநாடு, ஆறாவது மாநாடாக இங்கே நடந்து கொண்டிருக்கிறது. ஓராண்டுக் காலத்திற்குள் ஆறு முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துவதே ஒரு மிகப்பெரிய சாதனை.

அனைவருக்குமான வளர்ச்சி, அனைத்துத்துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்துச் சமூக வளர்ச்சி, அமைதி, நல்லிணக்கம் என்பதை அடிப்படையாகக் கொண்ட 'திராவிட மாடல்' மாநிலத்தை நோக்கி இந்தியத் தொழிலதிபர்கள், உலக நிறுவனங்கள் வரத் தொடங்கியதன் அடையாளமாக இந்த மாநாடு நடந்துகொண்டிருக்கிறது.

இன்று இந்த மாநாட்டில், நிதிநுட்பங்களுக்கான தொழில் திட்டங்களுக்காகச் சிறப்பு முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். 10 நாட்களுக்கு முன்புதான், மேம்பட்ட உற்பத்தி (Advanced Manufacturing) தொடர்பான ஒரு சிறப்பு மாநாட்டையும் நடத்தினோம். இந்த முதலீட்டு மாநாடுகளுக்கு உயர்ந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

முதலாவதாக, தமிழ்நாட்டை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்த வேண்டும். இரண்டாவதாக, தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு மிகவும் உகந்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்க வேண்டும். மூன்றாவதாக, உலகத்தின் மூலை முடுக்கிற்கெல்லாம், தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட (Made in Tamil Nadu) பொருட்கள் சென்றடைய வேண்டும். நான்காவதாக, மாநிலம் முழுவதும் முதலீடுகள் பரவலாகவும், சீராகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்; அதன்மூலம், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடைய வேண்டும். இந்த இலக்குகளை அடையத் தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் அனைத்துத் தொழில் முயற்சிகளும் இந்த நான்கு இலக்குகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. இவை அனைத்தும் அனைத்து நிறுவனங்களது கவனத்தையும் ஈர்த்திருக்கின்றன. அதன் அடையாளம்தான் தமிழகத்தை நோக்கித் தொழில் நிறுவனங்கள் வருவது.

தமிழ்நாடு அரசின் மீது அபார நம்பிக்கை வைத்து, தொழிலதிபர்களும், தொழில் நிறுவனங்களும் இன்றைக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ள முன்வந்திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. நம் மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள முன்வந்திருக்கக்கூடிய உங்களையெல்லாம் மிகவும் மகிழ்ச்சியோடு, உற்சாகத்தோடு நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உங்கள் தொழில் திட்டங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், அனுமதிகளையும் பெறுவதற்கும், உங்கள் தொழில் சிறந்திடவும், உறுதுணையாக இருப்போம் என்று உங்களுக்கெல்லாம் நான் உறுதி தரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய மாநாட்டின் சிறப்பம்சமாக, நிதிநுட்பத் துறைக்காகப் பல ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மின்னணுமயமாக்கப்பட்ட நிதிச் சேவைகள் அனைத்தும், ஏழை, எளிய மக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும். ஆன்லைன் விற்பனைகள் இன்று பல மடங்கு அதிகரித்திருக்கின்றன. மின்னணுமயமாக்கப்பட்ட வங்கிச் சேவைகளின் பயன்பாடும் அதிகரித்திருக்கிறது. இந்த வளர்ச்சியை நன்கு பயன்படுத்திக்கொண்டு, நாமும் வளர்ந்திட வேண்டியதை அரசின் கடமையாக நான் கருதுகிறேன்.

வளர்ந்து வரும் நிதிச் சேவைகள், துறையின் ஆதரவுடன், உலகின் மிகச்சிறந்த தொழில்நுட்பத் துறையைத் தமிழ்நாடு கொண்டிருக்கிறது.

இதற்காகவே "தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை 2021" அறிக்கையை கோவையில் நான் வெளியிட்டேன். தொழில்துறை வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு நிதிநுட்பப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. தொழில்துறை அமைச்சர் தலைமையில் ஒரு நிதிநுட்ப ஆட்சிமன்றக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. டி.என்–டெக்ஸ்பீரியன்ஸ் (TN-Tecxperience) திட்டத்திற்கான இணையதளத்தினையும் நான் துவக்கி வைத்திருக்கிறேன். இந்தத் திட்டம் மூலம் தொழில்நுட்பச் சேவைகள், ஒரே குடையின்கீழ் அளிக்கப்படும். இதற்கான இளைய அறிவுசக்தி உருவாக்கப்பட்டு வருகிறது.

என்னுடைய கனவுத் திட்டமாக இருக்கக்கூடிய 'நான் முதல்வன்' திட்டம் பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். இந்தத் திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்திடும் பொருட்டு, தமிழ்நாடு அரசு, இன்ஃபோசிஸ் நிறுவனத்துடன் இணைந்து, நிதிநுட்ப அறிவுச் சூழல் அமைப்பை உருவாக்க, தொழில், கல்வித் துறைகளுடன் இணைந்து பணியாற்றும்.

தொழில், கல்வித்துறைகள் இணைந்து, இன்ஃபோசிஸ் நிறுவனத்துடன் கூட்டாக இந்த முன்முயற்சி செயல்படுத்தப்படவுள்ளது.

- நிதிநுட்ப நகரம்: தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) சென்னையில் குறைந்தபட்சம் 10 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டமைக்கப்பட்ட ஒரு நிதிநுட்ப நகரத்தை படிப்படியாக உருவாக்க இருக்கிறது. இதன் மூலம், அடுத்த தலைமுறைத் தொழில்நுட்பங்களான நிதிச் சேவைகள், அது தொடர்பான செயல்பாடுகளின் மையமாக இந்த நிதிநுட்ப நகரம் செயல்படும்.
- தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில்களுக்கு ஒரு தளத்தை உருவாக்கும் வகையிலும், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் சூழலைத் தொழில் மூலதன நிறுவனங்கள், புது முதலீட்டாளர்களுக்கு அறியப்படுத்தும் வகையிலும் தமிழ்நாடு நிதிநுட்ப முதலீட்டுக் களவிழா (TN PitchFest) துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

உலகத்திற்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் அளவுக்குத் தமிழ்நாட்டை ஒரு ஸ்மார்ட் மாநிலமாக உருவாக்குவதுதான் இந்த அரசினுடைய இலக்கு.

நிதிநுட்பத் தொழில்களை மதிநுட்பத்துடன் நம் மாநிலத்திற்கு ஈர்க்க நினைக்கிறோம். அதன் முதற்கட்டத்திலேயே வெற்றியும் பெற்றிருக்கிறோம்.

இன்றைய தினம், இங்கே, 11 நிதிநுட்பத் திட்டங்களுக்கு நிறுவனப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, நிதிநுட்ப ஆட்சிமன்றக் குழு, நிதிநுட்பக் கொள்கையின்கீழ் ஊக்குவிப்புச் சலுகை வழங்குவதற்கு 2 நிறுவனங்களைத் தேர்வு செய்திருக்கிறது. அந்த இரு நிறுவனங்களுக்கும் இன்று ஊக்கத் தொகுப்புச் சலுகைகள் அளிப்பதற்கான ஆணைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

இது வெறும் தொடக்கம்தான். நாங்கள் மேற்கொண்டுள்ள பயணத்தில், உங்கள் அனைவரின் ஈடுபாட்டையும் நான் வரவேற்கிறேன். உங்கள் நிதிநுட்பத் தீர்வைகள் மூலம், இந்த மாநிலத்தினைப் புதிய உயரங்களுக்குக் கொண்டு செல்வதற்கு உங்கள் ஆதரவை இந்த நேரத்தில் நான் வேண்டுகிறேன்.

''தமிழ்நாடு உயிர் அறிவியல் கொள்கை 2022'', ''தமிழ்நாடு ஆராய்ச்சி & மேம்பாட்டுக் கொள்கை 2022'' ஆகிய கொள்கைகளை இன்று நான் வெளியிட்டிருக்கிறேன். இதன்மூலம் முதலீடுகளை ஈர்த்திடும் வரையறையை, மேலும் நீட்டித்துக் கொள்ள முடியும்.

பரிணாம வளர்ச்சி என்பது மனிதர்களுக்கு மட்டுமல்ல, மாநிலத்திற்கும்தான். மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப, நம் வளர்ச்சிப் பாதைகளை வகுத்துக்கொண்டால், நமது போட்டித்தன்மை பன்மடங்கு அதிகரிப்பதோடு, உலகளவில், நம்மால் முதலீடுகளை ஈர்ப்பதில் சிறந்து விளங்க முடியும்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்து, இந்த ஓராண்டுக் காலத்தில், எடுத்த முயற்சிகளின் காரணமாக, இதுவரை 192 ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கிறது. இதன் மொத்த மதிப்பு ரூ.2,20,000 கோடி.

கடந்த ஆண்டு ஈர்த்த முதலீடுகளைவிட, இந்த ஆண்டு இருமடங்கு முதலீடுகளை ஈர்க்கவேண்டும். அதாவது ரூ.1.50 இலட்சம் கோடிக்கான முதலீடுகளை ஈர்க்கவேண்டும் என்று ஒரு அன்புக் கட்டளையிட்டேன். தமிழகத் தொழில்துறை மீதான நம்பிக்கையால்தான் அந்தக் கட்டளையிட்டேன். அதனால்தான் இந்த இலக்கை வைத்தேன்.

அதற்கேற்றவாறே, இன்று மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் சேர்த்தால், இதுவரை ரூ.2,20,000 கோடி அளவுக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருக்கின்றன. இது, கிட்டத்தட்ட இரண்டரை மடங்கு அதிக முதலீடுகள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்குச் சொன்னது போல, நான் மதிப்பாய்வு மேற்கொண்ட தேதியிலிருந்து, ஒன்றரை ஆண்டு நிறைவு செய்வதற்கு இந்த இரண்டு வாரங்களுக்கு முன்பாகவே, தொழில்துறை இந்த இலக்கை அடைந்திருப்பது உள்ளபடியே எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. இதற்காக, சுறுசுறுப்பாக, அல்லும் பகலும் உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றியையும் நான் தெரிவித்திருக்கிறேன்.




பல துறைகளிலும் முதலீடுகளை ஈர்த்து, பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் இந்த அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. பள்ளிக்கல்வி பயின்றவர்களுக்கு, அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய காலணி உற்பத்தி, ஆயத்த ஆடைகள் உற்பத்தி உள்ளிட்ட திட்டங்களை ஊரகப்பகுதிகளில் செயல்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அதேபோல், உயர்கல்வி பயின்றவர்களுக்கு நிதிநுட்பம், உலகளாவிய மையங்கள் (GCC) போன்ற துறைகளிலும்,

வளர்ந்துவரும் தொழில்நுட்பத் துறைகளான மின் வாகனம், லித்தியம் அயான் பேட்டரி, பசுமை ஹைட்ரஜன் போன்ற துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் சீரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காற்றாலை மின் உற்பத்தி, சூரிய சக்தி மின் உற்பத்தி ஆகியவற்றுடன், தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக பசுமை ஹைட்ரஜன் தொழிற்சாலையையும் தூத்துக்குடிப் பகுதியில் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இதன்மூலம் தூத்துக்குடிப் பகுதி "புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையமாக" (Renewable Energy Hub) உருவாகும்.

உலகளவில் அதிகமாகப் பேசப்பட்டுவரும் வளர்ந்து வரும் துறையான செமிகண்டக்டர் உற்பத்திக்கான உயர் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை, ரூ.25,600 கோடி முதலீட்டில் தமிழ்நாட்டில் அமைப்பதற்கு IGSSV நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டிருக்கிறது.

அதைப் போலவே, எதிர்கால எரிசக்தித் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய வளர்ந்துவரும் துறையாகப் பசுமை ஹைட்ரஜன் விளங்குகிறது. ரூ.52,695 கோடி முதலீட்டில் ஆக்மே (ACME) நிறுவனம் தூத்துக்குடியில் பசுமை ஹைட்ரஜன், பசுமை அமோனியா உற்பத்தித் திட்டத்தை அமைக்க இருக்கிறது. இந்தத் திட்டம் தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்டங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவப் போகிறது.

இப்படி அனைத்து வகையான தொழில்களிலும் இறங்கி, முன் முயற்சியைத் தமிழ்நாடு அரசு எடுத்து வருவதை உங்களைப் போன்ற நிறுவனங்களைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள் நன்றாக அறிவீர்கள். அதனால்தான் தமிழகத்தை நோக்கி ஈர்க்கப்பட்டு வருகிறீர்கள். தொழில் புரிவதற்கு எளிதான சூழலமைப்பு (Ease of Doing Business) கொண்ட மாநிலங்களில், அகில இந்திய அளவில் 2020ஆம் ஆண்டில் 14ஆவது இடத்திலிருந்த நம்முடைய தமிழ்நாடு, தற்போது 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளதற்கு இதுதான் காரணம். மூன்றாவது இடத்திலிருந்து விரைவில் முதலிடத்திற்கு வருவோம். அதற்கான திட்டமிடுதலைத் தொடங்கி விட்டோம் என்பதன் அடையாளம்தான் இந்த மாநாடு.

இன்றைய தினம் 60 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதன்மூலம் ரூ.1,25,244 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. 74,898 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். பல்வேறு மாவட்டங்களில், இந்த நிறுவனங்கள் அமைய இருந்தாலும், 68% முதலீடுகள் தென் மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன. பரவலான வளர்ச்சி அடைய முயற்சி செய்வோம் என்று நாங்கள் சொல்வதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. சொன்னதைச் செய்து வருகிறோம்.

21 திட்டங்களுக்கு இன்றைய மாநாட்டில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ரூ.22,252 கோடி முதலீட்டில் இவை தொடங்கப்பட்டுள்ளது. 17,654 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள 21 திட்டங்களில், 20 திட்டங்கள் நமது அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்.

அதுபோலவே, ரூ.1,497 கோடி முதலீடு, 7,050 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் 12 திட்டங்கள் இப்போது துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுவதோடு நம்முடைய கடமை முடிந்து விடுவதாக நாங்கள் இருந்து விடுவது இல்லை. அதனால்தான் ஒப்பந்தங்கள், நிறுவனங்களின் தொடக்க விழாவாக இது மாறி வருகிறது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு மாநாடுகளிலேயே இந்த மாநாடுதான் மிகப் பெரிய மாநாடாக அமைந்துள்ளது. வருங்காலங்களில் இதையும் விடப் பெரிய முதலீட்டு மாநாடுகளை நடத்த வேண்டும் என்று அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நீதி மாநிலமான தமிழ்நாடு, கூட்டாட்சித் தத்துவத்தை முன்னெடுக்கும் தமிழ்நாடு, சகோதரத்துவ மண்ணான இந்தத் தமிழ்நாடு இந்த வரிசையில் தொழில்துறையில் சிறந்த தமிழ்நாடாகவும் உயர வேண்டும்.

என்ன வளம் இல்லை இந்தத் தமிழ்நாட்டில் என்று கேட்கும் தமிழ்நாடாக இது உயர வேண்டும்.

தொழில்துறையின் வளர்ச்சி என்பது அந்தந்த வட்டாரத்தின் சமூக வளர்ச்சியாக மாறி தமிழ்நாடு உன்னதத் தமிழ்நாடாக, மேன்மையான தமிழ்நாடாக உயர வேண்டும். தமிழ்நாட்டு அறிவாற்றலை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் தொழில் நிறுவனங்களும் வரவேண்டும். அந்தத் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தகுதி படைத்தவர்களாகத் தமிழ்நாட்டு இளைஞர்களும் உருவாக வேண்டும்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற இலக்கை நோக்கி முன்னேறுவோம்.

அதற்கு இத்தகைய முதலீட்டு மாநாடுகள் அடித்தளமாக அமையட்டும் என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.





# உடுமலைப்பேட்டை உழவர் சந்தையில் ஆய்வு





**மா**ண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் 05.07.2022 அன்று திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை உழவர் சந்தையில் அதிகாலையில் விவசாயிகள், பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்து அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் கடந்த 1999ஆம் ஆண்டு விவசாயிகளின் நலன் காக்கத் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் உழவர் சந்தை துவக்கிவைக்கப்பட்டது. உழவர் சந்தை என்பது விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் பயிரிடும் காய்கறிகள், பழங்களைப் பயிர் செய்தவற்றை அவர்களே இடைத்தரகர்கள் யாருமின்றி நேரடியாக விற்பனை செய்வதற்காகத் தமிழகத்தின் பல இடங்களில் அமைத்த சந்தைகள் ஆகும்.

உழவர் சந்தையில், ஒவ்வொரு விவசாயிக்கும் தனியே இடம் ஒதுக்கப்பட்டு, இலவசமாக எடைக் கருவிகள் வழங்கப்படுகின்றன. உழவர் சந்தையில் விற்பனை மேற்கொள்ள விவசாயிகளுக்குத் தனி அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அடையாள அட்டை பெற்றவர் தவிர அவருடைய குடும்ப உறுப்பினர்கள் சந்தைக்கு உற்பத்திப் பொருட்களைக் கொண்டு வரக்கூடும் என்கிற நோக்கத்தில் குடும்ப உறுப்பினர்கள் படமும் அந்த அடையாள அட்டையில் இடம்பெற்றுள்ளன.

உழவர் சந்தை ஒவ்வொன்றிற்கும் தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் உழவர் சந்தையில் சுமார் 4 இடங்களில் விலைப்பட்டியல் கொண்ட பலகை வைக்கப்பட்டுள்ளது. உழவர் சந்தை விலைகளை அதற்காக நியமிக்கப்பட்ட குழு நாள்தோறும் நிர்ணயிக்கிறது. பொதுமக்கள் அனைவரும் உழவர் சந்தையில் தங்களுக்குத் தேவையான காய்கறிகள், பழங்களைப் பெற்று பயன்பெற வேண்டும் என மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் உடுமலைப்பேட்டை உழவர் சந்தையில் விவசாயிகள் விற்பனைக்குக் கொண்டு வந்த காய்கறிகளைப் பார்வையிட்டு, பொதுமக்கள், விவசாயிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தும், அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் உழவர் சந்தை அலுவலகத்தை ஆய்வு மேற்கொண்டு அங்கு வைக்கப்பட்டுள்ள காய்கறிகளின் விலைப் பட்டியல், பதிவேடுகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.



# சென்னை, மாநிலக் கல்லூரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கம் அமைக்கப்படும்




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.07.2022 அன்று சென்னை, மாநிலக் கல்லூரியின் (தன்னாட்சி) பட்டமளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவ, மாணவியர்களுக்குப் பட்டங்களையும், பதக்கங்களையும் வழங்கி ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இந்த ஓராண்டுக் காலத்திற்குள்ளாக எத்தனையோ நிகழ்ச்சிகளில் நான் பங்கேற்றிருக்கிறேன். அரசு நிகழ்ச்சிகளில், கழக நிகழ்ச்சிகளில் இதுபோன்ற பல்வேறு கல்லூரி நிகழ்ச்சிகளில், பள்ளி நிகழ்ச்சிகளில், பல்வேறு நிகழ்ச்சிகளில் நான் கலந்துகொண்டு இருக்கிறேன். ஆனால், அந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் பங்கேற்கிறபோது எந்த அளவிற்கு மகிழ்ச்சி அடைவேனோ அதைவிடப் பல மடங்கு மகிழ்ச்சியை நான் படித்த கல்லூரியான இந்த மாநிலக் கல்லூரியில் நடைபெறக்கூடிய இந்த நிகழ்ச்சியின்போது அதிகமான மகிழ்ச்சியை நான் அடைந்து கொண்டு இருக்கிறேன். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், சிறிது இறுமாப்புடன் நின்று கொண்டிருக்கிறேன்.

முதலில் கையில் பட்டங்களுடனும், மனதில் கனவுகளுடனும் அமர்ந்திருக்கும் நம்முடைய மாணவ, மாணவியர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டும்! அமைய வேண்டும் என்ற வேண்டுகோள் மட்டுமல்ல, அமையும் என்ற நம்பிக்கையோடு மீண்டும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டும் நான் உங்களை வாழ்த்த வரவில்லை. இந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவர் என்ற முறையிலும் உங்களை வாழ்த்துவதற்காக நான் வந்திருக்கிறேன். உங்களுடைய சீனியர் என்ற அடிப்படையில் என்னுடைய வாழ்த்துக்களைத் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கு எல்லோரும் சொன்னார்கள், 1972ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 15ஆம் நாள், இந்தக் கல்லூரியில் அரசியல் அறிவியல் பாட மாணவனாக நான் சேர்ந்து படித்தேன். முழுமையாக என்னைக் கல்வியில் ஈடுபடுத்திக் கொண்டேனா என்றால் இல்லை. ஏனென்றால், அப்போதே எனக்கு அரசியல் ஆர்வம் வந்துவிட்டது. அதுவும் அதிகமான ஆர்வம் கொண்டவனாக, நான் நேரடியாக அரசியலில் இறங்கிவிட்டேன்.

1971ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வெற்றிக்காக, அதனுடைய பிரச்சாரத்திற்காகத் தேர்தல் பிரச்சார நாடகங்களை ஊர் ஊராகச் சென்று, தொகுதி தொகுதியாகச் சென்று நான் நடத்தினேன். அந்தக் காரணத்தால், என்னால் முழுமையாகப் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் போய்விட்டது. படிப்பில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளாத நான், இந்தியாவில் நெருக்கடி நிலை ஏற்பட்ட நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்திருக்கக்கூடிய 500க்கும் மேற்பட்டவர்கள், அதாவது மிசா என்ற அந்தக் கொடுமையான சட்டத்தை, நெருக்கடி நிலையை, திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, அதை எதிர்த்த காரணத்தால், கலைஞர் தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருந்த கழக ஆட்சி அன்றைக்குக் கலைக்கப்பட்டது. கலைக்கப்பட்டவுடன் 500க்கும் மேற்பட்ட கழகத்தைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு,



மிசா கைதிகளாகச் சிறையில் அடைக்கப்பட்டார்கள். நான் சென்னை சிறைச்சாலையில் ஓராண்டுக் காலம் இருந்தேன். நினைத்துப் பார்க்கிறேன். அந்த மிசா சட்டத்தில் சென்னை சிறையில் சிறைவாசியாக இருந்தபோதுதான், அங்கிருந்து போலீஸ் பாதுகாப்போடு இந்தக் கல்லூரிக்கு வந்து நான் பரிட்சை எழுதிவிட்டுச் சென்றேன். அதையெல்லாம் இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன்.

இப்போது தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக உயர்ந்துள்ளேன் என்று சொல்லி, இதனையே நீங்கள் அனைவரும் முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது! விதிவிலக்குகள் என்பது விதிகள் ஆகாது! இதைத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டுக் காட்டுவார்கள்!

அந்த வகையில் கல்வியைக் கட்டாயக் கடமையாக வலியுறுத்தி, இன்று ஒரு இயக்கமாகவே அதை நான் தொடங்கியிருக்கிறேன். கல்விதான் யாராலும் திருட முடியாத உண்மையான சொத்து! அத்தகைய அறிவுச் சொத்துக்களை உருவாக்கித் தரக்கூடிய மகத்தான கல்லூரிதான், இந்த மாநிலக் கல்லூரி என்பதை நான் இங்கே பெருமையோடு பதிவு செய்ய விரும்புகிறேன்.

கல்வியைக் கடல் என்று சொல்வார்கள். அந்தக் கடலோரத்தில் இருக்கும் கல்லூரி, இந்த மாநிலக் கல்லூரி. இப்படிக் கடலைப் பார்த்து இருக்கும் கல்லூரிகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். குளிரும், தென்றலும், குளுமையும், இனிமையும் கலந்த சூழலில் இருக்கும் மாநிலக் கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு என்பதே ஒரு மிகப்பெரிய வாய்ப்பு!

அதிலும் இந்தச் சென்னை மாகாணத்தின் முதல் கல்லூரி, இந்த மாநிலக் கல்லூரி! 1840ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கல்லூரி இது. பொதுவாகப் பல்கலைக்கழகங்களுக்குக் கீழ்தான் எல்லாக் கல்லூரிகளும் வரும். ஆனால், சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்படுவதற்கு முன்பே தொடங்கப்பட்ட கல்லூரிதான் இந்த மாநிலக் கல்லூரி!

மாநிலக் கல்லூரி தொடங்கப்பட்டு 14 ஆண்டுகள் கழித்துதான் சென்னைப் பல்கலைக்கழகமே தொடங்கப்பட்டது. எனவே, இதனைச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தாய் நிறுவனம் என்று சொல்வார்கள்.

தாய் நிறுவனத்தில் படித்த பிள்ளைகள் நீங்கள். உங்களது எதிர்காலம் நிச்சயம் சிறப்பாகத்தான் அமையும். கடந்த 182 ஆண்டுக்கால வரலாற்றில் பல இலட்சம் பேருக்குக் கல்வியை வழங்கியதன் மூலமாக, பல தலைமுறைக்கும் கல்வியை வழங்கிய மாபெரும் கல்லூரியாக இது அமைந்திருக்கிறது.

இங்கே பலர் குறிப்பிட்டுச் சொன்னார்கள், திராவிட இயக்கத்தின் மிக மூத்த தலைவர்களான சர். பிட்டி தியாகராயர் முதல் டி.எம்.நாயர் வரை இந்தக் கல்லூரியில் படித்தவர்கள்தான். தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்படும் உ.வே.சாமிநாதர் அவர்கள் இங்குதான் படித்திருக்கிறார். நோபல் பரிசு பெற்றிருக்கக்கூடிய சர்.சி.வி.ராமன் அவர்களும், சுப்பிரமணியன் சந்திரசேகர் அவர்களும் இந்தக் கல்லூரியில் படித்தவர்கள்தான். இந்தியாவின் மிக உயர்ந்த பதவிகளை வகித்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இங்கேதான் படித்தார்.

இத்தகைய பெருமைக்கும், உயர்வுக்கும் காரணமான கல்லூரியில் படித்த நீங்கள் எல்லோரும் அறிவில், ஆற்றலில், சிந்திக்கும் திறத்தில் மாபெரும் வெற்றியைப் பெற்று முன்னேறி அனைவருக்கும் எடுத்துக்காட்டாக வளர வேண்டும் என்று நான் மனதார உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

மாநிலக் கல்லூரியில் மொத்தம் 26 துறைகள் கலை, அறிவியல் பாடங்களில் உள்ளன. 4,645 மாணவ, மாணவியர் படிக்கும் மிகப்பெரிய கல்லூரியாக இது அமைந்திருக்கிறது. சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் ஒவ்வோர் ஆண்டும் மாநிலக் கல்லூரி மாணவர்களே அதிகளவில் முனைவர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் இப்போது முனைவர் பட்ட ஆய்வில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அந்த வகையில், முனைப்பான கல்லூரியாகச் செயல்பட்டு வருகிறது இந்த மாநிலக் கல்லூரி. பெரும்பாலும் முதல் தலைமுறைப் பட்டதாரிகள் அதிகம் படிக்கக்கூடிய கல்லூரி, விளிம்புநிலை மக்கள் அதிகம் படிக்கக்கூடிய கல்லூரி, ஒடுக்கப்பட்ட சமூகத்து மாணவர்கள் அதிகம் படிக்கக்கூடிய கல்லூரி, புறநகர்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அதிகம் படிக்கக்கூடிய கல்லூரி என்கிற வகையில் சமூக நீதிக் கல்லூரியாகவும் இது அமைந்திருப்பது உள்ளபடியே பெருமைக்குரிய ஒன்றாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

இதில் முக்கியமான ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று சொன்னால், இதில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைத்தான் நான் மிக மிக முக்கியமானதாகக் கருதுகிறேன்.

பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர்கள் 94 பேரும், செவித்திறன், பேச்சுத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர்கள் 200க்கும் மேற்பட்டோரும் பயின்று வருகிறார்கள். இவர்களுக்காக பி.காம், பி.சி.ஏ. ஆகிய பாடப்பிரிவுகள் இருக்கின்றன.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது ஆட்சிக் காலத்தில்தான், இவை 2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன என்பதும் பெருமைக்குரிய ஒன்று!

செவித்திறன், பேச்சுத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான எம்.காம்., படிப்புக்கும், தமிழ்நாடு அரசு இப்போது அனுமதி வழங்கி இருக்கிறது.

நான் பெருமையோடு சொல்கிறேன், இந்தியாவில் இப்படி ஒரு வாய்ப்பு எந்த மாநிலத்திலும் கிடையாது. மாற்றுத்திறனாளிகளின் கல்விக்கு உதவுவதன் மூலமாக, மாநிலக் கல்லூரி மனிதநேயக் கல்லூரியாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

கடந்த ஓராண்டுக் காலத்தில் இந்தக் கல்லூரியில் பல்வேறு தனித்திறன் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதை நான் அறிவேன். எழுத்தாளர், மாணவர் சந்திப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் ஏராளமான தமிழ் எழுத்தாளர்கள் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் இலக்கிய ஆளுமைகளை அழைத்து வந்து கூட்டம் நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். திராவிட இயக்கத் தலைவர்களின் அரசியல், சமூகப் பங்களிப்பை விளக்கும் கூட்டங்கள் நடந்து வருகின்றன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்திய ஆட்சிப் பணித் தேர்வுகள் அதற்கான பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. எனது கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தினால் உந்துதல் பெற்றுத் தொழில் முனைவோருக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் பல நடத்தப்பட்டு வருகின்றன. திரைப்படப் பயிற்சி வகுப்புகள் மூலமாக ஒரு நல்ல சினிமாவை ரசிப்பது எப்படி என்ற அந்தக் கோணத்தில், மாணவர்களுக்குச் சினிமா கலை நுட்பங்களைக் கற்பித்து வருகிறார்கள். ஐந்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் இந்தக் கல்லூரியில் நடத்தப்பட்டிருக்கின்றன. இளங்கலைப் பட்டம் பெற்று வெளியில் செல்லும் ஆயிரம் மாணவர்களில், 800க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டிருக்கின்றன.

இவற்றை எல்லாம் முன்னெடுத்து வரும் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ராமன் அவர்களையும், கல்லூரிப் பேராசிரியர்களையும், மாணவ மாணவியரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன், அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாநில 'கல்லூரி'யாக இருந்தாலும், மாநிலக் கல்லூரி பல்கலைக்கழகம் போல இது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தப் பணிகளை விடாமல் தொடருங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பல ஊர்களில் பல அரசு நிகழ்ச்சிக்கு நான் செல்கிறபோது, ஆங்காங்கே சில அறிவிப்புக்களை அரசின் சார்பில், முதலமைச்சர் என்கின்ற முறையில் நான் வெளியிடுவது உண்டு. ஆக, நான் நேற்றிரவு, நாளை நான் படித்த கல்லூரிக்குச் செல்கிறேன். அங்கே சென்று என்ன அறிவிப்புக்களை வெளியிடலாம் என்று அதிகாரிகளோடு கலந்து பேசி, யோசித்துக்கொண்டிருந்தபோது, சில முடிவுகளை எடுத்திருக்கிறோம். அதை இப்போது உங்கள் முன்னால் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இந்தச் சிறப்புக்குரிய மாநிலக் கல்லூரியின் மேம்பாட்டுக்கான ஒரு சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன். 2,000 பேர் அமரக்கூடிய வகையில், நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பெயரால் மாபெரும் அரங்கம் மாநிலக் கல்லூரி வளாகத்தில் கட்டித் தரப்படும்.

இங்கே சட்டமன்ற உறுப்பினர் தம்பி உதயநிதி பேசுகின்றபோது கூட, ஒன்றைச் சுட்டிக்காட்டினார். அதே போல நாடாளுமன்ற உறுப்பினரும் காரில் வரும்போது என்னிடத்தில் எடுத்துச் சொன்னார். ஆக, நான் இந்த கோரிக்கை வைத்தது மட்டும் நீங்கள் விட்டுவிடக் கூடாது, உங்களுக்கு என்று தொகுதி மேம்பாட்டு நிதி இருக்கிறது. எனவே நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் தம்பி தயாநிதிமாறனையும், சட்டமன்ற உறுப்பினராகக்கூடிய தம்பி உதயநிதியையும் நான் கேட்டுக்கொள்கிறேன். உங்களால் இயன்ற அளவு அந்த தொகுதி மேம்பாட்டு நிதியை அதற்கு நீங்கள் வழங்கிட வேண்டுமென்று உங்கள் அனைவரின் சார்பில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

300க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் இங்கே படிக்கிறார்கள். தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களில் இருந்து அவர்கள் இங்கே வந்து, தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கென்று விடுதி கிடையாது. அவர்களுக்கான விடுதி, மாநிலக் கல்லூரி வளாகத்திலேயே அமைத்துத் தரப்படும். முதற்கட்டமாக இந்த இரண்டு அறிவிப்புகளையும் மாநிலக் கல்லூரியின் கல்வித் தொண்டுக்காக நான் அறிவிக்க விரும்புகிறேன்.

பள்ளிகள், கல்லூரிகள் என்பவை படிப்பை மட்டுமில்லாமல், பாடங்களை மட்டுமில்லாமல், மாணவ மாணவியருக்கு அறிவாற்றலையும் தனித்திறமையையும் உருவாக்கும் அடிப்படையில் இயங்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கனவு!

இந்தக் காலத்தில் பள்ளிகளை அதிகம் திறந்து விட்டோம். கல்லூரிகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம். பள்ளி, கல்லூரிச் சாலைக்குள் அனைவரும் வர வேண்டிய சூழலை உருவாக்கியிருக்கிறோம்.

பணம் அதற்கு ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற காரணத்தால், பல்வேறு உதவிகளை அரசு தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. கல்விக்காகச் செலவு செய்வதைத்

**“சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் 2,000 பேர் அமரக்கூடிய வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கம் அமைக்கப்படும்.”**

தாண்டி, படிக்க வந்தால் ரூ.1,000 என்று அரசுப் பள்ளி மாணவிகளுக்குக் கொடுக்கும் என்ற ஒரு தாயுள்ளம் படைத்த அரசாக நம்முடைய தமிழ்நாடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அனைவரும் படிக்க வேண்டும், அதற்கு அனைவரும் முன் வரவேண்டும், பல முன்னேற்றங்களை நீங்கள் பெற்றாக வேண்டும், அனைத்து வாய்ப்புகளையும் அனைவரும் பெற வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் நம்முடைய திராவிட இயக்கம்.

சமூக நீதி என்ற தத்துவமே பிள்ளைகளின் கல்விக்காகத்தான், இளைஞர்களின் வேலை வாய்ப்புக்காகத்தான் உருவாக்கப்பட்டது. இன்றைக்குச் சாமானியர்களைக் கை தூக்கி விடும் சமூக நீதிக் கொள்கை எல்லா இடங்களிலும் செழித்து வரும் நிலையில், அந்த வாய்ப்பை மாணவ, மாணவியர் அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

படியுங்கள்! பட்டம் பெறுங்கள்! ஒரு பட்டத்தோடு நிறுத்திக் கொள்ளாதீர்கள்! எந்தப் பட்டமாக இருந்தாலும், அதில் உள்ள உயர்ந்த நிலையை அடையுங்கள்!

இங்கு மேடையில் அமர்ந்திருக்கும் தமிழ்நாட்டின் உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் முனைவர் பொன்முடி அவர்கள் எத்தனை பட்டங்கள் வாங்கி இருக்கிறார் தெரியுமா? சட்டப் படிப்பு, எம்.ஏ. வரலாறு, எம்.ஏ. அரசியல் அறிவியல், எம்.ஏ. பொதுத்துறை நிருவாகம் ஆக இப்படிப் பல பட்டங்களைப் பெற்றவர்.

அது மட்டுமல்ல, அதைத் தாண்டி, அரசியல் அறிவியலில் முனைவர் பட்டம் பெற்றவர். கலைஞர் கூட அடிக்கடி அவரை சொல்கிறபோது பொன்முடி என்று சொல்ல மாட்டார், அறிவுமுடி என்றுதான் கூப்பிடுவார் பாசத்தோடு. அந்த அளவுக்கு ஆற்றலைப் பெற்றவர். எந்த அவையாக இருந்தாலும், எந்தப் பொருளாக இருந்தாலும், அதைப் பற்றி தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆற்றலோடு பேசக்கூடிய திறமையைப் பெற்றவர் பொன்முடி அவர்கள். கல்லூரிப் பேராசிரியராக இருந்து, இன்று பல்கலைக்கழகங்களின் இணைவேந்தராக இருக்கிறார் என்றால், இதற்குக் காரணம் அவரது கல்வித் திறனும் அறிவாற்றலும்தான்.

அத்தகைய ஆற்றலைப் பெற்றவர்களாக மாணவ, மாணவியர்கள் இருக்கவேண்டும். கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பார்கள். இந்தச் சிறப்பு கற்றோருக்கு மட்டும்தான் உண்டு, மற்றோருக்கு இல்லை என்பதை உணருங்கள். குறிப்பாக, பெண்கள் மிகுதியாகக் கல்வி பெற வேண்டும். ‘கல்வி இல்லாப் பெண்கள் களர் நிலம்’ என்று பாடினார் பாவேந்தர் அவர்கள்.

பெண்கள் கல்வி கற்பது என்பது, வேலைக்குப் போவது என்பதோடு மட்டுமல்ல, அதோடு முடிந்து விடுவது இல்லை, பெண்களுக்குத் தன்னம்பிக்கை அளிப்பதாக, தைரியத்தை வழங்குவதாகக் கல்வி அமைகிறது. எனவே, பெண் பிள்ளைகள் நிச்சயமாகப் படிக்க வேண்டும், பட்டங்களைப் பெற வேண்டும்.

பட்டம் பெற்ற பெண்கள், தங்களது தகுதிக்கேற்ற வேலைக்குச் செல்ல வேண்டும். படிக்கின்ற காலத்தில் பல்வேறு தனித்திறமைகளைப் பெற்றிருக்கும் பெண்கள், 100க்கு 100 மதிப்பெண் வாங்கிய பெண்கள், திருமணம் ஆனதும் தங்களது பணிகளை விட்டு விடுகிறார்கள். கலை, இலக்கியம், நாடகம், நாட்டியம், விளையாட்டுப் போன்றவற்றில் இருக்கக்கூடிய விருப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறார்கள்.

அப்படி இல்லாமல் தங்களது விருப்பங்களை, அறிவாற்றலை வாழ்நாள் முழுக்கப் பயன்படுத்தக்கூடிய சூழலைத் தங்களுக்குத் தாங்களே உருவாக்கிக்கொள்ள வேண்டும். இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளில் ஏராளமான பெண்கள் பல்வேறு பொறுப்புகளில் அமர்ந்திருக்கிறார்கள். 50 விழுக்காடுதான் இட ஒதுக்கீடு என்று சொன்னாலும், நான் மகிழ்ச்சியோடு சொல்கிறேன், இன்றைக்கு 56 விழுக்காடு பெண்கள் அந்தப் பொறுப்புகளை அடைந்திருக்கிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் நாமக்கல் மாவட்டத்தில், நகர்ப்புற உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மாநாடு நடந்தது. அதில் பெரும்பாலானோர் பெண்கள் கலந்து கொண்டார்கள். இப்படி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இதைப் பார்க்க முடியுமா? முடியாது. இதுதான் திராவிட மாடல் ஆட்சி என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் கல்வி பெற்றவர்களுடைய விழுக்காடு என்ன? இன்றைய விழுக்காடு என்ன என்பதைப் பார்த்தால்தான், திராவிட மாடல் என்றால் என்ன என்பது புரியும். இதைச் சொல்வதால், நான் அரசியல் பேசுவதாக யாரும் தயவுசெய்து தவறாகக் கருதிவிடக்கூடாது. எத்தகைய அறிவுச்சூழல் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது என்பதற்காகத்தான் இதைச் சொன்னேனே தவிர வேறு அல்ல.

கடந்த ஓராண்டுக் காலத்தில் பள்ளிக் கல்வித்துறை துள்ளி எழுந்திருக்கிறது. உயர்கல்வித்துறை புதிய உத்வேகத்தோடு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. கடைக்கோடி மனிதரையும் கல்வி பெற வைத்து, உலகச் சமுதாயத்தின் போட்டிக் களத்தில் அவர்களையும் போட்டியாளர்களாக மாற்றும் ஆட்சிதான் இந்த ஆட்சி. அவர்களை வெற்றியாளர்களாக ஆக்கக்கூடிய ஆட்சிதான் இந்த ஆட்சி. அத்தகைய போட்டியாளர்களாக இருக்கக்கூடிய நீங்கள், வெற்றியாளர்களாகவும் திகழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். உங்கள் கனவுகளையும், உங்களை உருவாக்கிய பெற்றோரின் கனவுகளையும், இந்த நாட்டின் கனவுகளையும் நிறைவேற்றுங்கள், நிறைவேற்றுங்கள், நிறைவேற்றுங்கள் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

**“சென்னை மாநிலக் கல்லூரியில் பல்வேறு ஊர்களிலிருந்து இங்கே வந்து, தங்கிப் பயிலும் 300க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கெனக் கல்லூரி வளாகத்திலேயே தங்கும் விடுதி அமைக்கப்படும்.”**




## ரூ.152.02 கோடியில்

# 20 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.07.2022 அன்று தலைமைச் செயலகத்தில், 2021–2022 மற்றும் 2022–2023ஆம் ஆண்டுகளுக்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கையில் அறிவித்தவாறு 20 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கிவைத்தார். மேலும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரி, பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் ரூ.152.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகங்கள், தொழில் முனைவோர் மையங்கள், விடுதிகள் உள்ளிட்ட கல்விசார் கட்டடங்களையும் திறந்துவைத்தார்.

உயர்கல்வியினை அனைவரும் பெறும் வகையிலும், சமத்துவம், சமூக நீதிக்கு உட்பட்டு அனைத்து பிரிவினரையும் கல்வியின் எல்லைக்குள் கொண்டுவரும் வகையிலும், கொள்கைகள் வகுக்கப்பட்டு, தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இலவச கல்வித் திட்டம், முதல் தலைமுறைப் பட்டதாரி சலுகைகள், போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம், பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணாக்கர்களுக்கு நிதியுதவி போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

2021–2022ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின்போது, தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான உயர்கல்வி வழங்குவதற்கும், மாணவர் சேர்க்கை விகிதாச்சாரத்தை அதிகப்படுத்துவதற்கும். விருதுநகர் மாவட்டம் – திருச்சுழி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – திருக்கோவிலூர், ஈரோடு மாவட்டம் – தாளவாடி, திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம், திருநெல்வேலி மாவட்டம் – மானூர், திருப்பூர் மாவட்டம் – தாராபுரம், தருமபுரி மாவட்டம் – ஏரியூர், புதுக்கோட்டை மாவட்டம் – ஆலங்குடி, திருவாரூர் மாவட்டம் – கூத்தாநல்லூர், வேலூர் மாவட்டம் – சேர்க்காடு ஆகிய இடங்களில் புதியதாக 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதேபோன்று, 2022–2023ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின்போது, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மணப்பாறை, விழுப்புரம் மாவட்டம் – செஞ்சி, கிருஷ்ணகிரி மாவட்டம் – தளி, புதுக்கோட்டை மாவட்டம் – திருமயம், ஈரோடு மாவட்டம் – அந்தியூர், கரூர் மாவட்டம் – அரவக்குறிச்சி, தஞ்சாவூர் மாவட்டம் – திருக்காட்டுப்பள்ளி, திண்டுக்கல் மாவட்டம் – ரெட்டியார் சத்திரம், கடலூர் மாவட்டம் – வடலூர், காஞ்சிபுரம் மாவட்டம் – ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் புதியதாக 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்றும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, புதியதாக அறிவிக்கப்பட்ட 20 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2022–2023ஆம் கல்வியாண்டு முதல் மாணவ, மாணவியர்கள் சேர்க்கை பெற்றுப் பயன்பெறும் வகையில், அனைத்து வசதிகளுடன் கூடிய தற்காலிகக் கட்டடங்களில் 20 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

மேலும், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசு கலைக் கல்லூரியில் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள்;

சென்னை மாவட்டம், வெலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில் ரூ.1.69 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள்; சைதாப்பேட்டை, கல்வியியல் மேம்பாட்டு நிறுவன வளாகத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்ககத்திற்கான ஒருங்கிணைந்த நிருவாகக் கட்டடம்; சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் கிண்டி பொறியியல் கல்லூரியில் ரூ.7.48 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முதுநிலை மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்கள், சென்னை பல்கலைக்கழகத்தில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உடற்பயிற்சிக் கூடம்;

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், திரு. ஆ.கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரியில் ரூ.5.70 கோடி மதிப்பீட்டிலும், கிருஷ்ணகிரி, அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.5.08 கோடி மதிப்பீட்டிலும், கிருஷ்ணகிரி, அரசு ஆடவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.4.53 கோடி மதிப்பீட்டிலும், ஒசூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.2.37 கோடி மதிப்பீட்டிலும், பர்கூர், அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.7.31 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள்;

தருமபுரி மாவட்டம், பூமாண்ட அள்ளி, பெரியார் பல்கலைக்கழகத்தில் ரூ.11.16 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முதுகலைப் பட்டப்படிப்பு விரிவாக்க மையம்; காரிமங்கலம், அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.3.04 கோடி மதிப்பீட்டிலும், பாலக்கோடு, பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.5.70 கோடி மதிப்பீட்டிலும், தருமபுரி, அரசு கலைக் கல்லூரியில் ரூ.4.52 கோடி மதிப்பீட்டிலும், வேலூர் மாவட்டம், குடியாத்தம், அரசு திருமகள் ஆலைக் கல்லூரியில் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டிலும், வேலூர், முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரியில் ரூ.33 இலட்சம் மதிப்பீட்டிலும், இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை, அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.71 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள்;

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு கலைக் கல்லூரியில் ரூ.1.52 கோடி மதிப்பீட்டிலும், சேலம், அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் ரூ.1.90 கோடி மதிப்பீட்டிலும், சேலம், அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.1.14 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், கழிவறைகள்;

சேலம், பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.9.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திறன் மேம்பாடு, அடைகாப்பு, தொழில் முனைவோர் மையங்கள், மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கட்டடங்கள், மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்கள், இதர கட்டடங்கள்;

திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறிவியல் கருவியாக்க மையம் (Scientific Instrumentation Centre), தொழில்முனைவோர் புதுமை மையம், கலையரங்கம் கல்விசார் மற்றும் நிருவாகக் கட்டடங்கள்;

அரியலூர், அரசு கலைக் கல்லூரியில் ரூ.5.40 கோடி மதிப்பீட்டிலும், மயிலாடுதுறை, தருமபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.3.75 கோடி மதிப்பீட்டிலும், கடலூர் மாவட்டம், சிதம்பரம், அரசு கலைக் கல்லூரியில் ரூ.2.25 கோடி மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டம், திருவாரூர், திரு.வி.க. அரசு கலைக் கல்லூரியில் ரூ.4.80 கோடி மதிப்பீட்டிலும், சிவகங்கை மாவட்டம், பூலாங்குறிச்சி, வ.செ.சிவ. அரசு கலைக் கல்லூரியில் ரூ.3.27 கோடி மதிப்பீட்டிலும், காரைக்குடி, அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் ரூ.1.52 கோடி மதிப்பீட்டிலும், சிவகங்கை, அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.1 கோடி மதிப்பீட்டிலும், சிவகங்கை, இராஜா துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரியில் ரூ.1.14 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள்;

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை, அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.1.52 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்; திண்டுக்கல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் ரூ.8.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணைவேந்தர், பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், நிதி அலுவலர் ஆகிய அதிகாரிகளுக்கான குடியிருப்புக் கட்டடங்கள், பணியாளர்களுக்கான குடியிருப்புக் கட்டடங்கள்;

மதுரை மாவட்டம், மேலூர், அரசு கலைக் கல்லூரியில் ரூ.1.52 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 கூடுதல் வகுப்பறைகள்; கீழக்குயில்குடி, அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் ரூ.3.22 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஹைட்ராலிக்ஸ் ஆய்வகம், உலோகவியல் ஆய்வகம், சுற்றுச்சுவர்;

திருநெல்வேலி, இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்; திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் ரூ.4.43 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆடவர் விடுதிக்கான உணவகத்துடன் கூடிய நவீனச் சமையல் அறை, கருவியாக்க மையம்;

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகளிர் விடுதிக் கட்டடம்;

என மொத்தம் ரூ.152.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர் கல்வித்துறைக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.



# மனவளர்ச்சி குன்றிய சிறுவனுக்கு மருத்துவ உபகரணங்கள்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.07.2022 அன்று திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் கிராமத்தில் வசித்துவரும் சிறுவன் சிவானந்தம் (வயது 14) என்ற மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளியின் இல்லத்திற்குச் சென்று, அவருக்கு அரசின் அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு மறுவாழ்வு பெற்ற விவரங்களைக் கேட்டறிந்து, அப்பயனாளிக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கி, நலம் விசாரித்தார்.

சிவானந்தத்தின் தந்தை திரு. ஏழுமலை ஓட்டுநராகப் பணிபுரிந்து வருகிறார். அவரது தாயார் திருமதி தமிழரசி விவசாயக் கூலி தொழில் செய்து வருகிறார். இவர்களுக்குச் சிவானந்தம் உட்பட ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். இப்பயனாளியின் குடும்ப வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அண்மையில் மத்திய கூட்டுறவு வங்கி வாயிலாக கறவை மாடு வாங்குவதற்காக ரூ.25,000 வட்டியில்லாக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்திட்டத்தின் மூலம் இல்லந்தோறும் மேற்கொண்ட கள ஆய்வின்போது, ஒன்றரை வயதில் சிவானந்தத்திற்கு மூளை முடக்குவாதம், அறிவுசார் குறைபாடு கண்டறியப்பட்டு, தொடர்ந்து இயன்முறை பயிற்சி, ஆரம்பக்கல்வியும் வழங்கப்பட்டன. இப்பயனாளிக்கு ரூ.9,000 மதிப்புள்ள தசைப்பயிற்சி உபகரணங்கள் (Taylors Brace, Cockup Splint, Foot Drops Splint, Knee Brace & Walker) மற்றும் ரூ.4,000 மதிப்புள்ள சிறப்புக்கல்வி உபகரணங்கள் (ADL Kit, Pictures of flowers, Trees & Fruits, Numbers, Letters. Tamil Models, Colour Papers & Vegetable Model) வழங்கப்பட்டுள்ளன.ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்தின் வாயிலாக இல்லத்திற்கே சென்று தசைப்பயிற்சியும், சிறப்புக்கல்வியும் வழங்கப்பட்டு, தற்போது இப்பயனாளிக்கு 10ஆம் வகுப்புக்கான கல்விப் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பயனாளிக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் மாதந்தோறும் பராமரிப்பு உதவித்தொகையாக ரூ.1,500 கடந்த மூன்று ஆண்டுகளாக வழங்கப்பட்டு, தற்போது ரூ.2,000ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கூடுதலாக உதவியாளருக்கான உதவித்தொகையும் (High Support Need) ரூ.1,000 இம்மாதம் முதல் வழங்கப்படவுள்ளது. இத்துடன் ரூ.15,000 மதிப்புள்ள மூளை முடக்குவாத சிறப்புச் சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித்துறையின் வீட்டுவழிக் கல்வியில் மூளை முடக்குவாதம், அறிவுசார் இயலாமை, ஒன்றுக்கும் மேற்பட்ட குறைபாடுகள், மன இறுக்கம் போன்ற அதிக பராமரிப்புத் தேவைப்படும் குறைபாடுகளை உடைய 10,146 குழந்தைகளுக்கு, அவர்களின் தேவைகளைக் கண்டறிந்து, பொருத்தமான உதவி உபகரணங்கள், உரிய இயன்முறை பயிற்சிகள் மட்டுமில்லாது உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகின்றன. இக்குழந்தைகளைக் கையாளும் சிறப்பு ஆசிரியர்கள், இயன்முறை மருத்துவர்களுக்குச் சிறப்புப் பயிற்சியும் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்டங்களை ரூ.838.01 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தி வருகிறது. 2022–2023ஆம் ஆண்டு உதவி உபகரணங்களுக்காக ரூ.51.18 கோடி ஒதுக்கப்பட்டு மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், பெட்ரோல் ஸ்கூட்டர்கள், பார்வையற்றோருக்கான ஸ்மார்ட் ஊன்றுகோல், உருப்பெருக்கி, காதொலிக்கருவி, மனவளர்ச்சி குன்றியோருக்கான மாற்றுவழியில் தொடர்புகொள்ளும் ஆவாஸ் மென்பொருளுடன் கூடிய கையடக்கக் கருவி ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், பயனாளிகள் விரும்பும் உபகரணங்களைத் தாமே தெரிவு செய்துகொள்ளும் திட்டத்தின்கீழ், 8,436 பயனாளிகளுக்கு ரூ.16.77 கோடி செலவில் உபகரணங்களைக் கொள்முதல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ ★ ★

# "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் இரண்டு இலட்சமாவது மையம் தொடக்கம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.07.2022 அன்று திருவண்ணாமலை மாவட்டம், ஆராஞ்சி ஊராட்சியில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தில் இரண்டு இலட்சமாவது மையத்தைத் தொடங்கிவைத்தார்.

கொரோனா ஊரடங்குக் கட்டுப்பாடுகளினால் பள்ளிகள் இயங்காமல் இருந்த நிலையில், பள்ளி செல்லும் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டதோடு கற்றல் இடைவெளியும் ஏற்பட்டதைச் சரிசெய்திடத் தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித்துறையால் 'இல்லம் தேடிக் கல்வி' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த உன்னதத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், முதலியார்குப்பம் கிராமத்தில் 27.10.2021 அன்று தொடங்கிவைத்தார்.

இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தில் 2 இலட்சம் தன்னார்வலர்கள் 34 இலட்சம் குழந்தைகளுக்கு மாலை நேரத்தில் கல்வி கற்பித்து வருகின்றனர். குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் மாபெரும் ஆதரவு இத்திட்டத்தை வெற்றித் திட்டமாக மாற்றியுள்ளது. முதல்கட்டமாக 12 மாவட்டங்களில் தொடங்கப்பட்ட இத்திட்டம் ஒரு மாதத்தில் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டத்தில், தன்னார்வலர்களின் கல்வித் தகுதி, ஆர்வம், குழந்தைகளைக் கையாளும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியானவர்கள் தன்னார்வலர்களாகத் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. மேலும், வாசிப்புப் பழக்கத்தைக் குழந்தைகளிடம் வளர்க்கும் நோக்கத்தில் 1,000 இல்லம் தேடிக் கல்வி மைய நூலகங்கள் தொடங்கப்பட்டன.

ஒவ்வொரு நாளும் மாலை ஒன்றரை மணி நேரம் மாணவர்கள் மகிழ்வுடன் கற்கும் வகையில் இல்லம் தேடிக் கல்வி மையங்கள் நடைபெறுகின்றன. இல்லம் தேடிக் கல்வி மையங்களில் பயிலும் மாணவர்களின் கற்றல் நிலைகளைக் கண்டறிய அடிப்படை ஆய்வு நடத்தப்பட்டு, இதில் 18 இலட்சம் மாணவர்களின் கற்றல் நிலைகள் ஆய்வு செய்யப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாணவரின் கற்றல் நிலைக்கு ஏற்ற வகையில் குறைதீர் கற்றலை வடிவமைக்க இந்த அடிப்படை ஆய்வு உதவுகிறது.





இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தில், குழந்தைகளிடம் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க 'ரீடிங் மாரத்தான்' என்ற தொடர் வாசிப்பு இயக்கத்தை ஜூன் 1 முதல் ஜூன் 12ஆம் தேதி வரை நடத்தப்பட்டது. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் இயங்கும் கூகுள் ரீட் அலாங் செயலி வழியாகக் குழந்தைகளுக்கான கதைகள் படிக்கும் போட்டி நடத்தப்பட்டது. கோடை விடுமுறைக் காலத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 18.36 இலட்சம் குழந்தைகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். நம் குழந்தைகள் இந்தப் போட்டியில் தமிழிலும் ஆங்கிலத்திலும் 263.17 கோடி சொற்களை வாசித்து உலக சாதனை புரிந்தார்கள். இந்தப் போட்டியில் 81.4 இலட்சம் கதைகள் 9.82 இலட்சம் மணி நேரத்திற்குத் தொடர்ந்து வாசிக்கப்பட்டன. கூகுள் ரீட் அலாங் செயலி மூலம் வாசிப்பதில், உலகில் உள்ள பல்வேறு மொழிகளில் தமிழ் மாணவர்கள் முதலிடம் பெற்றுள்ளனர் என்பது தமிழ் மொழிக்கும் தமிழகத்திற்கும் கிடைத்துள்ள மிகப்பெரிய பெருமையாகும்.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் இல்லம் தேடிக் கல்வித் திட்டம் போன்ற திட்டத்தைச் செயல்படுத்தி கோவிட் பெருந்தொற்றால் ஏற்பட்டுள்ள கற்றல் இழப்பை ஈடு செய்ய வேண்டும் என்று பிரபலப் பொருளாதார அறிஞர் ஜீன் டிரேஸ் அவர்கள் ஜார்கண்ட் மாநில முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருப்பது இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

இல்லம் தேடிக் கல்வித் திட்டம், பெற்றோரிடத்திலும் மாணவர்களிடத்திலும் பெரும் வரவேற்பினைப் பெற்றதையடுத்து 2022–2023ஆம் நிதியாண்டில் மேலும் 6 மாதங்களுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், தொடக்கக் கல்வியில் அடிப்படை எண் அறிவையும் எழுத்தறிவையும் உறுதிப்படுத்தும் எண்ணும் எழுத்தும் என்ற மாபெரும் இயக்கத்திற்கு உறுதுணை புரியும் வகையில் இல்லம் தேடிக் கல்வி இரண்டு இலட்சம் மையங்களாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், தமிழ்நாட்டின் ஒவ்வொரு குழந்தையின் கல்வியையும் உறுதி செய்வதில் இல்லம் தேடிக் கல்வி பேருதவி புரிகிறது.

இவ்விழாவின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லம் தேடிக் கல்வித் திட்டம் தொடர்பான காணொலியையும், புகைப்பட விளக்கப் புத்தகத்தையும் வெளியிட்டார். மேலும், தொடர் வாசிப்புப் போட்டியில் சிறப்பிடம் பெற்ற மாவட்டங்கள், வட்டாரங்களுக்குக் கோப்பைகளையும் வழங்கினார்.



# காஞ்சிபுரம்
# ரூ.120.75 கோடி மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்புப் பணிகள்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 06.07.2022 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ.120.75 கோடி மதிப்பீட்டில், தந்திக்கால் வாய்க்கால், போரூர் உபரிநீர் கால்வாய், வரதராஜபுரம், ராயப்பா நகரின் வெளிவட்ட சாலை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத் தடுப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையின்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, வரும் பருவமழைக் காலங்களில் மக்களுக்கு மழை வெள்ளப் பாதிப்புகள் ஏற்படாத வகையில் அதிக அளவில் நீர் தேங்கும் இடங்களில் மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். அதன்படி தமிழகமெங்கும் வெள்ளத் தடுப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

கடந்த பருவமழையின்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முடிச்சூர், வரதராஜபுரம் பகுதி மக்களின் கோரிக்கையின் அடிப்படையில், வெள்ளப் பாதிப்பிற்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், திட்டங்கள் தீட்டப்பட்டு வெள்ளத் தடுப்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கொளுத்துவான்சேரி சாலையில் ரூ.16.70 கோடி மதிப்பீட்டில் தந்திக்கால் கால்வாய் முதல் போரூர் ஏரி உபரிநீர் கால்வாய் வரை புதிய மூடுதளத்துடன் கூடிய கால்வாய் அமைக்கும் பணியில், உள்வட்ட சாலையில் அமைந்துள்ள தந்திக்கால் வாய்க்காலில் நடைபெற்றுவரும் உபரிநீர் போக்கி மற்றும் கதவுகள் அமைக்கும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது இவ்வெள்ளத் தடுப்புப் பணிகளை மழைக்காலத்திற்கு முன்பாக விரைவாக முடித்திட அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

பின்னர், போரூர் ஏரியின் உபரிநீர் கால்வாயினை ரூ.34 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும், ஒழுங்கியம் அமைக்கும் பணியில், உள்வட்ட சாலையில் அமைந்துள்ள போரூர் உபரிநீர் கால்வாயில் நடைபெற்றுவரும் அடித்தள கான்கிரீட் அமைக்கும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் தாம்பரம் பகுதிக்கு அருகில் அடையாறு ஆற்றுப் பகுதியை ஒட்டியுள்ள குடியிருப்புப் பகுதிகளை வெள்ள அபாயத்திலிருந்து தவிர்க்கும் பொருட்டு, ரூ.70.05 கோடி மதிப்பீட்டில் சோமங்களம் கிளை ஆற்றிலிருந்து ஒரு புறவழி பெரு மூடு வடிகால்வாய், அடையாறு ஆற்றின் L.S. 5,970 மீட்டர் முதல் L.S. 19,150 மீட்டர் வரை வெள்ள நீர் கடத்தும் திறனை அதிகப்படுத்தும் பணியில், வரதராஜபுரம், ராயப்பா நகர், வெளிவட்ட சாலையில் நடைபெற்றுவரும் மூடுதளக் கால்வாய் அமைக்கும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, வெள்ளத்தடுப்புப் பணிகளைத் தரமாகவும், துரிதமாகவும் மேற்கொள்ள வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.



# திருவண்ணாமலையில்

# 1,71,169 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 09.07.2022 அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.70.27 கோடி செலவில் 91 முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்துவைத்து, திருவண்ணாமலை நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் உட்பட ரூ.340.21 கோடி மதிப்பீட்டிலான 246 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,71,169 பயனாளிகளுக்கு ரூ.693.03 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

இங்குக் குழுமியிருக்கக்கூடிய உங்களைப் பார்க்கிற நேரத்தில் உங்கள் எழுச்சியை, உணர்ச்சியை, ஆர்வத்தை, ஆரவாரத்தைக் காணுகிற நேரத்தில் குறிப்பாக, பெரும் திரளாகத் திரண்டிருக்கக்கூடிய அருமை தாய்மார்கள், சகோதரிகள், மகளிர் அணியைச் சார்ந்திருக்கக் கூடியவர்கள், உங்களை எல்லாம் பார்க்கிற நேரத்தில் எனக்கு என்ன தோன்றுகிறது என்று கேட்டால், கொஞ்ச நேரம் பேசாமல், அப்படியே உங்கள் முகத்தைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு வந்திருக்கிறது. எவ்வளவு கட்டுப்பாடு, அதுவும் பெண்களிடத்தில் காணக்கூடிய கட்டுப்பாட்டைப் பார்க்கிறபோது நான் மெய்சிலிர்த்து நிற்கிறேன். தப்பாக நினைத்துவிடக் கூடாது. நான்கு பெண்கள் இருந்தால், அங்கே என்ன கூச்சல் இருக்கும், குழப்பம் இருக்கும், சலசலப்பு இருக்கும், ஒரு கலகலப்பு இருக்கும். ஆனால் ஆயிரக்கணக்கில் திரண்டிருக்கக் கூடிய தாய்மார்கள், பெண்கள் உங்களிடத்தில் காணக்கூடிய இந்தக் கட்டுப்பாட்டைப் பார்க்கிறபோது இதுதான் திராவிட உணர்வு என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.




மாபெரும் வரலாற்றுச் சிறப்புகளையும், ஆன்மீக அடையாளங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கக்கூடிய திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெறும் இந்த இனிய நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, உங்களையெல்லாம் சந்தித்து உரையாற்றக்கூடிய வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொன்னூர் மலை, பர்வதமலை, கவித்திமலை, திருவண்ணாமலை என, இப்படிப் பல மலைகள் சூழ்ந்த மாவட்டம் இந்தத் திருவண்ணாமலை மாவட்டம்!

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே, மனிதர்கள் வாழ்ந்த தடயங்களைக் கொண்ட மாவட்டம் இது. இங்கு, கற்கால மனிதர்கள், அவர்கள் வரைந்த பாறை ஓவியங்கள், அவர்கள் பயன்படுத்திய பல்வேறு கருவிகள் கண்டறியப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, செங்கம் நடுகற்கள், பல்லவர் காலக் குடைவரைகள், சோழர் காலக் கற்றளிக் கோவில்கள், விஜயநகரப் பெருங்கோவில்கள் எனப் பண்பாட்டு அடையாளங்களும் பரவிக் கிடக்கும் பெருமைமிகு மாவட்டம் இந்தத் திருவண்ணாமலை மாவட்டம். இந்த மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஜவ்வாதுமலை சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. இம்மலையை ஒட்டி அமைந்துள்ள அணைகளும், தென்பெண்ணையாற்றின் குறுக்கே அமைந்துள்ள சாத்தனூர் அணையும் புகழ்பெற்ற சுற்றுலா மையமாக அமைந்திருக்கிறது.

217 அடி உயரம் கொண்ட அந்த இராஜகோபுரத்தை உடைய இந்தத் திருவண்ணாமலைக்குப் புகழ் சேர்க்கும் வகையில்



இந்தத் திருவண்ணாமலையை 1989ஆம் ஆண்டு தனி மாவட்டமாக உருவாக்கியதே நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான்!

நான் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த காலத்தில், இதே திருவண்ணாமலை மாவட்டத்தில், 16,850 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு நான்கரை மணிநேரம் மேடையிலே நின்று, என் கையால் நம்முடைய மகளிர் அணி சகோதரிகளுக்குச் சுழல்நிதி வழங்கிய காட்சிகள் என் நெஞ்சில் இன்றைக்கு நிழலாடிக் கொண்டிருக்கிறது!

இத்தகைய புகழ்மிக்க திருவண்ணாமலை மாவட்டத்தில் எழுச்சியோடு, ஏற்றத்தோடு, அழகோடு இந்த அரசு விழாவை ஏற்பாடு செய்துள்ள மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களையும், மாண்புமிகு சட்டப்பேரவையின் துணைத்தலைவர் பிச்சாண்டி அவர்களையும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், குறிப்பாக மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் மற்றும் இந்த மாவட்ட அரசு அதிகாரிகள் அத்தனை பேரையும் நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், ஏன் அவர்களுக்கெல்லாம் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே, ‘எதிலும் வல்லவர் வேலு, அதனால்தான் அவர் எ.வ.வேலு’ என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

இளைஞர் அணி என்ற அந்த அமைப்புக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இளைஞர் அணிக்கு அறக்கட்டளை அமைக்கப்பட்டபோது ரூ.55 இலட்சம் நிதி வழங்கியதைப்போல, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, முப்பெரும் விழாவை மாபெரும் மாநாட்டைப் போல நடத்தி கலைஞர் அறக்கட்டளைக்கு ஏழை, எளிய நலிந்தோருக்கு வழங்க ரூ.55 இலட்சம் நிதியை அளித்தவர்தான் எ.வ.வேலு அவர்கள்!

நிதியளித்ததைவிட, தன்னைக் கலைஞருக்காகவும், எனக்காகவும் ஒப்படைத்துக் கொண்டவர் எ.வ.வேலு அவர்கள். நேற்று மாலை நடைபெற்ற விழாவில், வேலு அவர்களை நான் குறிப்பிட்டுச் சொன்னேன், ‘விழா வேந்தன்’ என்று நான் குறிப்பிட்டேன். அந்தளவுக்குக் கட்சி நிகழ்ச்சிகளாக இருந்தாலும், அரசு நிகழ்ச்சிகளாக இருந்தாலும் அல்லது வேறு நிகழ்ச்சிகள் இருந்தாலும், எல்லாவற்றிலும் தனி முத்திரையைப் பதிக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றவர் எ.வ.வேலு அவர்கள்.

இன்றைக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெறக்கூடிய பல்வேறு மாபெரும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால்,

- மதுரையில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பெயரால் மாபெரும் நூலகம் தயாராகிக்கொண்டிருக்கிறது.
- சென்னையில் ரூ.230 கோடி மதிப்பீட்டில் பன்னோக்கு சிறப்பு மருத்துவமனை அமையப் போகின்றது.
- இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை வங்கக் கடலோரம் வாஞ்சைமிகு தாலாட்டில், தனது அண்ணனுக்கு அருகில் துயில் கொள்ளும், நம்முடைய தலைவர் கலைஞருக்கு நினைவகம் நிறுவப்பட்டு வருகிறது.
- கடந்தகால ஆட்சியாளர்களால் முடக்கி வைக்கப்பட்ட மாபெரும் திட்டமான மதுரவாயல் – துறைமுகம் உயர்மட்டச் சாலை அமையப் போகின்றது.
- கிழக்குக் கடற்கரைச் சாலை விரிவாக்கம் செய்யப்பட இருக்கிறது.

இப்படி எண்ணற்ற பெரும் பணிகள்..!

இவை அனைத்தையும் செயல்படுத்தும் பணிகளில் தன்னை ஒப்படைத்துக் கொண்டிருக்கக்கூடியவர்தான் எ.வ.வேலு அவர்கள். கலைஞர் நினைவகமாக இருந்தாலும், மதுரை நூலகமாக இருந்தாலும், கிண்டி மருத்துவமனையாக இருந்தாலும், இவையெல்லாமே வருங்காலத்தில் தமிழ்நாட்டின் அடையாளங்களாக மாறப்போகின்றது!

அதனைச் சிறந்த செயல்வீரருக்கான அடையாளமாக இருக்கின்ற வேலு அவர்கள் அதை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். தனிப்பட்ட அவருக்கு மட்டுமல்ல, எனக்கு மட்டுமல்ல, நம் அரசுக்கு மட்டுமல்ல, நம் மாநிலத்துக்கே பெருமைமிகு அடையாளங்களாக இவை அமையப் போகின்றது.

நேற்று மாலை, திருவண்ணாமலை நகரத்தில் பேரறிஞர் அண்ணா பெயரிலான நுழைவு வாயிலையும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் திருவுருவச் சிலையையும் திறந்துவைத்தேன்.

தீபங்களால் நிறைந்த திருவண்ணாமலையே மின் விளக்குகளால் ஜொலித்து, பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், தலைவர் கலைஞர் அவர்களுக்கும் சிறப்புச் செய்ய இந்தத் திருவண்ணாமலை நகரம் எந்த வகையில் எல்லாம் பொருத்தமானது என்பதை அந்த விழாவில் நான் குறிப்பிட்டுப் பேசினேன்.

1963ஆம் ஆண்டு நடந்த திருவண்ணாமலை இடைத் தேர்தல்தான் 1967ஆம் ஆண்டு நடந்த ஆட்சி மாற்றத்துக்கு அடித்தளம் அமைத்தது என்பதையும் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அதேபோல், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’ என்ற தலைப்பில் என்னுடைய பயணத்தை நான் தொடங்கினேன்.

கோடிக்கணக்கான மக்களைச் சந்திக்கும் எனது பயணத்தின் தொடக்கம் என்பது இதே திருவண்ணாமலையில் இருந்துதான் நான் தொடங்கினேன்.

திருவண்ணாமலையில் இருந்து தொடங்கிய அந்தப் பயணமானது, முதலில் பயணமாகத் தொடங்கியது. பின்பு, வெற்றிப் பயணமாக மாறியது. இப்பொழுது, ஆட்சிப் பயணமாக தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது.

அதற்கு அடித்தளம் இட்ட இடம்தான் இந்தத் திருவண்ணாமலை என்பதை நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். இதற்குக் காரணமான இந்தத் திருவண்ணாமலை மாவட்ட மக்களுக்கு முதலில் என்னுடைய நன்றியை நான் இதயபூர்வமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கழக ஆட்சி அமைந்தாலே, திருவண்ணாமலை மாவட்டமானது புத்தெழுச்சி பெறும். அதை இங்கே கூடியிருக்கிற மக்களாகிய உங்கள் முகங்களில் நான் பார்க்கிறேன். திருவண்ணாமலை மாவட்டத்தை உருவாக்கியதே தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்று நான் முன்பே சுட்டிக்காட்டினேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைத்துக் கொடுத்தவரும் கலைஞர்தான். சாத்தனூர் அணையைப் புனரமைப்புச் செய்ததும் கழக ஆட்சியில்தான்! திருவண்ணாமலையைத் தனிப்போக்குவரத்து மண்டலமாக ஆக்கியதும் கழக ஆட்சியில்தான்!

ரூ.120 கோடியில் புதிய மருத்துவக் கல்லூரி, செய்யாறு சிப்காட் தொழிற் பூங்கா, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், காரப்பட்டில் அரசு பட்டயக் கல்லூரி, திருவண்ணாமலை நகருக்குப் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டம், திருவண்ணாமலை நகராட்சிக்கு ரூ.36 கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம், புதிய விளையாட்டு அரங்கம், புதிய நீச்சல் குளம், கலசப்பாக்கம், மிருகண்டாநதி நீர்த்தேக்கம், செங்கம், குப்பநத்தம் அணை, போளூர், செண்பகத்தோப்பு அணை, தண்டராம்பட்டு தனித் தாலுகா, தண்டராம்பட்டில் நுகர்பொருள் வாணிபக் கிடங்கு, புதுப்பாளையத்துக்குச் சாத்தனூர் அணை கூட்டுக் குடிநீர்த் திட்டம், அம்மாபாளையத்தில் ரூ.60 கோடியில் பால்பவுடர் தொழிற்சாலை, வந்தவாசியில் அரசுக் கல்லூரிக்கு ரூ.8 கோடியில் புதிய கட்டடம், ஆரணியில் அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி இப்படிப் பல்வேறு திட்டங்களைச் செய்து கொடுத்த அரசுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு.



இதில் மிக முக்கியமானது, 1975ஆம் ஆண்டு அண்ணாமலையார் கோவில் அந்தத் திருப்பணியை முழுமையாகச் செய்தது கழக அரசுதான். இந்தத் திருப்பணிக்குத் தனிக்குழுவை அமைத்து முதலமைச்சர் அவர்கள் அதற்காக அக்கறை எடுத்துக்கொண்டார். அன்றைய நாளில் ஒரு பெரும் தொகையாக, ரூ.7.25 இலட்சம் அதற்காக நிதி ஒதுக்கினார்.

மேலும், ஆணையர் பொதுநல நிதியில் இருந்து ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தார். தமிழகத்தின் பல்வேறு கோவில்களில் இருந்து நன்கொடைகள் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்தார்.

இதைவிட முக்கியமாக இன்னொன்று, அண்ணாமலையார் கோவிலைப் பாதுகாத்ததும் கழக அரசுதான். அண்ணாமலையார் கோவிலானது பழம்பெருமையும், அழகியலும் பிரம்மாண்டமும் கொண்டது.

அதனுடைய தொன்மை, கம்பீரம் காரணமாக அதைத் தொல்பொருள் துறை 2004ஆம் ஆண்டு கையகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அப்போது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது பிரச்சாரத்திற்காகத் தலைவர் கலைஞர் அவர்கள் திருவண்ணாமலைக்கு வந்தார். அவரை ஊர் பொதுமக்களும், பக்தர்களும் வந்து சந்தித்துக் கோரிக்கை வைத்தார்கள்.

“தொல்பொருள் துறை கட்டுப்பாட்டுக்குள் அது போனால், ஆன்மிகப் பணிகள் தொய்வடையும்” என்று சொன்னார்கள். அப்போது தலைவர் கலைஞர் சொன்னார், “அடுத்து அமையும் ஆட்சியின் கவனத்துக்கு இதனைக் கொண்டு செல்வேன்” என்று உறுதி தந்தார்.

அன்றைக்கு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 வெற்றிப் பெற்றோம். ஒன்றியத்தில் அமைந்த காங்கிரசு அரசுடன் பேசி, அண்ணாமலையார் கோவிலில் பக்தர்களின் எண்ணத்திற்கேற்ப மீட்டுக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை மறந்துவிடக் கூடாது. இன்றைக்கு, மதத்தின் பெயரால் அரசியல் நடத்துபவர்களுக்கு இந்த வரலாறு எல்லாம் தெரியாது.

அண்ணாமலையார் கோவில் என்பது தமிழ்நாட்டின் சொத்து. அதைக் கட்டிக் காத்தது கழக அரசு! இவ்வாறு கழக

அரசுக்கும் திருவண்ணாமலைக்கும் நீண்ட உறவு இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

இன்றைய அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பாக, மொத்தம் 1.71 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.693 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது.

ரூ.70.27 கோடி மதிப்பிலான 91 முடிவுற்றப் பணிகள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

ரூ.340.21 கோடி மதிப்பீட்டிலான 246 புதிய பணிகளுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்றன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு அரசுத் திட்டங்கள் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக, நீர் மேலாண்மைப் பணிகளை மிகச் சிறப்பாகச் செய்திருக்கக்கூடிய மாவட்டமாக இந்த மாவட்டம் அமைந்திருக்கிறது. வீடியோவில் பார்த்தீர்களே.

நீர் மேலாண்மையை ஒரு பேரியக்கமாகவே நடத்திக் காட்டி இருக்கிறீர்கள். 1,121 பண்ணைக் குட்டைகளை 30 நாட்களில் அமைத்து சாதனைப் படைத்த மாவட்டம்தான் இந்தத் திருவண்ணாமலை மாவட்டம்.

தற்போது இந்தப் பண்ணைக் குட்டைகளில் மீன்வளத் துறை மூலமாக, மீன் குஞ்சுகள் இன்றைக்கு வளர்க்கப்பட்டு வருகிறது.

பண்ணைக் குட்டைகளின் கரைகளில் மரம், காய்கறி, பழச்செடிகள் நடப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம், உழவர்களுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கைகள் காரணமாக, திருவண்ணாமலை மாவட்டத்தின் நிலத்தடி நீர்மட்டம் 6 முதல் 7 அடி வரை உயர்ந்துள்ளதாக ஆய்வில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இது மிகப்பெரிய சாதனை.

நீரின்றி அமையாது உலகு! மனிதரின் மிக முக்கியமான தேவையாக இருப்பது நீர்தான். நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்திக் காட்டுவதன் மூலமாக மக்களின் உயிர்ப் பிரச்சினையான குடிநீர்த் தேவையில், மாபெரும் சாதனையைச் செய்துள்ள திருவண்ணாமலை மாவட்ட நிருவாகத்தை உங்களின் அனைவரின் சார்பிலே, தமிழக அரசின் சார்பிலே நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

இத்தகைய சாதனையை அனைத்து மாவட்டங்களும் செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் என்கின்ற முறையிலே கேட்டுக்கொள்கிறேன்.

➢ இந்திய அளவில் முதன்முறையாக தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தில், சுயஉதவிக் குழுக்களின் வட்டார அளவிலான கூட்டமைப்பு மூலம் பாரத் பெட்ரோலிய நிறுவனத்துடன் இணைந்து பெட்ரோல் மற்றும் டீசல் சில்லரை விற்பனை மையம் (Petrol Bunk) அமைக்கப்பட்டு நல்ல முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

  இந்த விற்பனை மையம் 834 மகளிர் சுய உதவிக்குழுக்களின் 11,175 உறுப்பினர்களுடன் சிறப்பாகச் செயல்பட்டு மாதம் ரூ.1.30 இலட்சம் லாபம் ஈட்டுகிறது என்பதை அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

➢ இதேபோல் இந்திய அளவில் முதல்முறையாக, ஜவ்வாது மலையில் பழங்குடியின மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 2,500 பேர் சேர்ந்து, உற்பத்தியாளர் நிறுவனத்தைத் தொடங்கி இருக்கிறார்கள். மலைப் பொருட்களைக் கொண்டதாக, இந்த நிறுவனம் இருக்கிறது. இது மிக நல்ல முயற்சி. பழங்குடியின மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு எனது பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதே போல் பல்வேறு முன் முயற்சிகளை இந்த மாவட்ட நிருவாகம் செய்து வருவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

➢ நிலக்கடலை சாகுபடியில் மாநிலத்தில் முதலிடம் பெற்றிருக்கிறது இந்தத் திருவண்ணாமலை மாவட்டம்.

➢ நெல் உற்பத்தியில் மூன்றாவது இடம் பெற்றிருக்கிறது. மலைக்குன்றுகளைப் பசுமையாக்கும் முன்மாதிரி முயற்சியாக, "பசுமைக் குன்றுகள் திட்டம்" என்ற ஒரு அற்புதமான திட்டம் இந்த மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

➢ இந்தத் திட்டத்தின்கீழ் 4 மலைக்குன்றுகள் தேர்வு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒருங்கிணைந்த பண்ணைப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஜமுனாமரத்தூர் மலைப்பகுதியில் தேனீப் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. புறக்கடைக் கோழிவளர்ப்புக் கொட்டகை அமைக்கும் பணி நடந்து வருகிறது. தோட்டக்கலை நாற்றங்கால் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய சிறப்புப் பணிகளில் திருவண்ணாமலை மாவட்டத்தைப்போல மற்ற மாவட்டங்களும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கமான திட்டங்களையும் தாண்டிய, சிறப்புத் திட்டங்களில் ஒவ்வொரு மாவட்டங்களும் தனிக் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு சிறப்பு இருக்கும். அதை மையப்படுத்தி திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏராளமான ஆன்மீகப் பணிகளும் நடந்து வருகின்றன.

➢ அருள்மிகு திருஅண்ணாமலையார் வலம் வரும் நான்கு மாடவீதி சாலைகள், கான்கிரீட் சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று நான் ஏற்கெனவே சட்டப்பேரவையில் அறிவித்திருக்கிறேன்.

அதன் முதல் கட்டமாக, தற்போது காந்தி சிலை முதல் திருவூடல் தெரு சந்திப்பு வரை ரூ.15 கோடி மதிப்பீட்டில் 1 கி.மீ. தூரத்திற்குப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

- அருணாசலேசுவரர் திருக்கோவில் வளாகத்தில் முதலுதவி மையத்தைக் காணொலி மூலமாக நான் ஏற்கெனவே தொடங்கி வைத்தேன். ஓதுவார் பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டு மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.
- ரூ.1.14 கோடி மதிப்பீட்டில் கோயில் மின்வசதி மேம்படுத்தப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் 37 கோவில்களின் திருப்பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.
- கிராமப்புறப் பகுதியில் உள்ள 37 கோவில்களில் திருப்பணி செய்யவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. செய்யாறு அருள்மிகு பட்சீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.5 கோடி மதிப்பீட்டிலான 4.28 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டிருக்கிறது.



- திருவண்ணாமலை நகரம் அருள்மிகு வடவீதி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம் மீட்கப்பட்டிருக்கிறது. இந்த மாவட்டத்தில் மட்டும், ஓராண்டில் 13 திருக்கோயில்களின் குடமுழுக்கு விழா சிறப்பாக, விமரிசையாக நடந்திருக்கிறது. 131 திருக்கோயில்களில் ரூ.6,094 இலட்சம் மதிப்பீட்டிலான திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்போதும் என்னிடம் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. என்ன கோரிக்கை ?
- அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் வழிபாடு செய்யவும், கிரிவலம் செல்லவும், தினசரி ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகிறார்கள். ஒவ்வொரு மாதமும் பவுர்ணமி, சித்ரா பவுர்ணமி மற்றும் தீபத்திருவிழாவின் போதும் கிரிவலம் செல்வதற்காகத் தமிழ்நாடு மட்டுமின்றி நாட்டின் மற்ற மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் வருகை தருகிறார்கள். அந்த கிரிவலத்திற்கு வருகை தரக்கூடிய பக்தர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் இந்த அரசு நிச்சயமாகச் சொல்கிறேன், நிறைவேற்றித் தரும்.

திருவண்ணாமலை கிரிவலப்பாதை என்பது திருவண்ணாமலை நகராட்சி, அத்தியந்தல், ஆணாய்ப் பிறந்தான், அடி அண்ணாமலை, வேங்கிக்கால் ஆகிய 4 ஊராட்சிகளை உள்ளடக்கிய 14 கி.மீ. தொலைவு கொண்டது. எனவே, கிரிவலப் பாதையில் செல்லும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

நிதிப் பற்றாக்குறை காரணமாக மின் விளக்குகள், கண்காணிப்புக் கேமராக்கள், பொது அறிவிப்பு அமைப்பு ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளும் உடனுக்குடன் சரிசெய்ய இயலாத நிலை இருக்கிறது. இதனைக் கருத்தில்கொண்டு, அறநிலையத்துறையும், உள்ளாட்சி அமைப்பையும் இணைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு ஏற்படுத்தி, அந்தக் குழுவிற்கு, இந்தத் தொடர் செலவினங்களை முறைப்படுத்திக் கண்காணிக்கவும் ஆவன செய்யப்படும் என்பதை நான் இங்கே அறிவிக்கிறேன்.

அதேபோல், திருவண்ணாமலை மாவட்டத்திலும், வேலூர் மாவட்டத்திலும், இருக்கக்கூடிய ஜவ்வாது மலைப் பகுதியில் சுமார் 75,000 பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் வாழக்கூடிய 20 மலைக் கிராமங்கள் இணைக்கக்கூடிய பரமனந்தல் ஜமுனாமுத்தூர் அமிர்த சாலையை மேம்படுத்த வேண்டுமென்று இந்த வழியாகப் போதிய பேருந்து வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்றும் இவர்கள் நீண்ட காலமாகக் கோரிக்கையை வைத்து வருகிறார்கள். இந்தக் கோரிக்கையை ஏற்று இதற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்து வனத் துறையினுடைய அனுமதியைப் பெற்று ரூ.140 கோடி செலவில் அது அகலப்படுத்தப்படும், மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவையெல்லாம் மதத்தை வைத்து அரசியல் செய்கின்ற கண்களுக்குத் தெரியாது. மதத்தை வைத்து அரசியல் செய்கின்றவர்களுக்கு, அவர்கள் கண்களுக்கெல்லாம் இது தெரியவே தெரியாது. ஏனென்றால் அவர்கள் உண்மையான ஆன்மீகவாதிகள் அல்ல, அவர்கள் உண்மையான ஆன்மீக வியாதிகள்! ஆன்மீகப் போலிகள்! ஆன்மீகத்தைத் தங்களது அரசியலுக்காக மட்டுமே பயன்படுத்தக்கூடிய எண்ணத்தைக் கொண்டவர்கள்!

நாங்கள் மதத்தை வைத்து கட்சி நடத்தவில்லை! கட்சியானாலும், ஆட்சியானாலும் மக்கள் முன் நின்று நாங்கள் ஆட்சி நடத்துகிறோம், கட்சி நடத்துகிறோம்!!

அதுதான் அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்துத் தொழில் வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய திராவிட மாடல் அரசை இன்றைக்கு நாம் நடத்தி வருகிறோம். அந்த அடிப்படையில்தான் இந்து சமய அறநிலையத்துறை மூலமாகவும் சிறப்பான பணிகளை இந்த அரசு இன்றைக்குச் செய்துகொண்டிருக்கிறது.

கோவிலுக்குத் திருப்பணி செய்வது திராவிட மாடலா? என்று சிலர் கேட்கிறார்கள், கேள்வி எழுப்பி வருகிறார்கள். அனைத்துத் துறையையும் சமமாக வளர்ப்பதுதான் 'திராவிடமாடல்' என்று நான் தொடர்ந்து சொல்லி வருகிறேன்!

இன்னும் சொன்னால், திராவிட இயக்கத்தின் தாய்க் கழகமான நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில்தான், இந்துசமய அறநிலையத்துறை சட்டமே போட்டோம், 1925ஆம் ஆண்டு அந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது.

எதற்குக் கோவில்களை முறைப்படுத்துவதற்காக, ஒரு சட்டம் வேண்டுமென்று ஆன்மீக எண்ணம் கொண்டவர்கள் கோரிக்கை வைத்தபோது அதனை ஏற்று, சட்டம் போட்ட ஆட்சிதான் நீதிக்கட்சியின் ஆட்சி.

எது திராவிட மாடல்? என்று பிற்போக்குத்தனங்களுக்கும் பொய்களுக்கும் பெருமை எனும் முலாம் பூசிப் பேசுபவர்கள் இதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆன்மீகத்தின் பெயரால் இன்றைக்கு அவர்கள் அரசியல் நடத்த முயற்சிக்கிறார்கள். ஆன்மீகத்திற்கு நாங்கள் எதிரிகள் அல்ல! ஆன்மீகத்தின் பெயரால் மனிதர்களைச் சாதியால், மதத்தால் பிளவுபடுத்துபவர்களுக்குத்தான் நாங்கள் எதிரிகள். மனிதர்களைப் பிளவுபடுத்தும் கருவியாக ஆன்மீகம் இருக்க முடியாது. மனிதர்களைப் பிளவுபடுத்துவதற்கு ஆன்மீகத்தைப் பயன்படுத்துபவர்களும் உண்மையான ஆன்மீகவாதிகளாக, அவர்கள் நிச்சயமாக இருக்க முடியாது.

- ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்பதுதான் எங்கள் அறநெறி! ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பதுதான் எங்கள் அறநெறி!
- பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பதுதான் எங்கள் அறநெறி! எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு, என்பதுதான் எங்கள் அறநெறி. அத்தகைய அறநெறியைக் கொண்ட ஆட்சியை நாங்கள் நடத்தி வருகிறோம்.

அறம் என்றால் என்னவென்றேத் தெரியாத, அறிவுக்கு ஒவ்வாத மூடக்கருத்துகளை முதுகில் தூக்கிச் சுமந்து கொண்டிருக்கும் சிலருக்குப் போலியான பிம்பங்களைக் கட்டமைக்க வேண்டுமானால் உளறல்களும் பொய்களும்தான் தேவை!

மக்களுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள், வேளாண்மை, தொழிலாளர் நலன், வேலைவாய்ப்புகள், புதிய தொழில்கள், புதிய முயற்சிகள் என்று தமிழ்நாடும், தமிழினமும் முன்னேறச் சிந்தித்துச் செயல்படுவதுதான், திராவிட முன்னேற்றக் கழகம்! அதுதான் திராவிட அரசியல் மரபு!

அறிவார்ந்த யாரும், எவரும் இந்த அரசுக்கு ஆலோசனைகள் சொல்லலாம். அதனை நாங்கள் செயல்படுத்துவோம். அறிவார்ந்தவர்கள் பேசுவதை மட்டுமே நாம் காதில் கேட்க வேண்டும்!

நமக்கு ஆக்கப்பூர்வமான பணிகள் காத்துக் கிடக்கின்றன! இது தேர்தல் காலம் அல்ல! மக்களுக்கு நன்மை செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள காலம் இது.

பொய்யும் புரட்டும் மலிவான விளம்பரம் தேடும் வீணர்களைப் பற்றி ஐ டோன்ட் கேர்!

நான் மட்டுமல்ல, நீங்கள் ஒவ்வொருவரும், 'ஐ டோண்ட் கேர்' என்று சொல்லி நகர வேண்டும்! அப்படி பொய்களை அநாதைகளாக விட்டு, உண்மை எனும் வெளிச்சத்தைத் துணையாகக் கொண்டு நடந்தாலே, நாம் முன்னேறலாம்! நம்முடைய இலக்குகளை அடையலாம்!

நான் இங்கே இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் சொல்ல விரும்புவது, காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது என்பதை யாரும் மறக்க வேண்டாம்!

கலைஞர் அவர்கள் சொல்வார், "கோப்புகள் சிகப்பு நாடாவிலே கட்டப்பட்டு உறங்கிக் கொண்டிருக்கும்போது, ஊழல் எழுந்து உட்கார்ந்து ஊர் சுற்றப் புறப்பட்டு விடுகிறது" என்று குறிப்பிடுவார். அதை மனதில் கொண்டு மக்கள் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை எந்தக் கோப்பும், எந்தப் பணியும் தேங்க விடக்கூடாது என்ற எண்ணத்தோடு பணியாற்றுங்கள்.

இதனை அனைத்து மட்டத்திலும் உறுதி செய்வதற்காகத்தான், எத்தனை அலுவல்களுக்கு நடுவிலும், நேரம் கிடைக்கும்போதெல்லாம் நான் திடீர் ஆய்வுகளை மேற்கொள்கிறேன் என்றால், இதுதான் காரணம்.

ஏனென்றால், மக்கள்தான் நம் எஜமானர்கள்!

இதே திருவண்ணாமலையில், 1957ஆம் ஆண்டு நடந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய பேரறிஞர் அண்ணா அவர்கள், குறிப்பிட்டாரே, நேற்றைக்கு மாலையில் சொன்னேன்.

"எங்களுக்கு இந்த உலகத்தில் இரண்டு எஜமானர்கள்தான் உண்டு. ஒன்று எங்களின் மனசாட்சி. மற்றொன்று இந்த நாட்டு மக்கள்" என்று சொன்னார்.


என்னுடைய மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் நாங்கள் மக்கள் பணியாற்றி வருகிறேன். என்மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. உங்கள் நம்பிக்கையைத்தான் நான் எல்லாவற்றையும்விட மேலானதாக நினைக்கிறேன்.

என்மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை என்பது, தனிப்பட்ட என் மீதான நம்பிக்கை மட்டுமல்ல. ஒடுக்கப்பட்டிருந்த இந்தத் தமிழினம் ஒளிபெற, உதயசூரியன் என உதித்த, திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை. அந்த நம்பிக்கையைக் காப்பாற்ற என்றும் உங்களில் ஒருவனாக உழைப்பேன்!

பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர் காட்டிய கொள்கைகளின் வழி நடப்போம்!

அனைத்து வளங்களும் கொண்ட மாநிலமாக இந்தத் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டுவோம்!

திராவிட மாடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையை அடைவோம்! என்று கூறி விடைபெறுகிறேன்.



# “திராவிட மணி”



**த**மிழகப் பட்டியலின மக்களில் முதல் பட்டதாரி; அண்ணல் அம்பேத்கர், அயோத்திதாசப் பண்டிதர், காந்தியடிகள் போன்ற பேராளுமைகளோடு இணைந்து ஒடுக்கப்பட்ட மக்களின் விடியலுக்காக உழைத்த “திராவிட மணி” இரட்டைமலையாரின் பிறந்தநாளில் அவரது பங்களிப்புகளை நினைவுகூர்ந்து போற்றுகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு – (07.07.2022)



சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில், தமிழ்நாடு அரசின் சார்பில், இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு 07.07.2022 அன்று மாண்புமிகு அமைச்சர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## ஜூன் 24: கவியரசு கண்ணதாசன் அவர்களின் பிறந்தநாள்



கவியரசு கண்ணதாசன் அவர்களின் 96ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 24.06.2022 அன்று தியாகராய நகர், கோபதி நாராயண சாலையில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் ஆகியோர் அன்னாரது திருவுருவச் சிலையின்கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## ஜூன் 26: ம.பொ.சிவஞானம் அவர்களின் பிறந்தநாள்



சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் 117ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 26.06.2022 அன்று சென்னை, தியாகராய நகரில், அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சிறுகதை

# செவ்வாழை

- அறிஞர் அண்ணா

**செ**ங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப்பிள்ளைபோல் வளர்த்து வந்தான். இருட்டுகிற நேரம் வீடு திரும்பினாலும்கூட, வயலிலே அவன் பட்ட கஷ்டத்தைக் கூடப் பொருட்படுத்தாமல், கொல்லைப்புறம் சென்று, செவ்வாழைக் கன்றைப் பார்த்து விட்டு, தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப்பட்டிருக்கிறதா என்று கவனித்துவிட்டுத்தான், தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்து வந்தான். கன்று வளர வளர அவன் களிப்பும் வளர்ந்தது. செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும்போதும், கல் மண்ணைக் கிளறிவிடும்போதும், அவன் கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியால். கரியனிடம், அவனுடைய முதல் பையன் காட்டியதைவிட அதிகமான அன்பும், அக்கரையும் காட்டுகிறாரே என்று ஆச்சரியம், சற்றுப் பொறாமைகூட ஏற்பட்டது, குப்பிக்கு.

“குப்பி! ஏதாச்சும் மாடு கீடு வந்து வாழையை மிதிச்சிடப்போகுது. ஜாக்கிரதையாக் கவனிச்சுக்கோ. அருமையான கன்று, ஆமாம். செவ்வாழைன்னா சாமான்யமில்லே. குலை, எம்மாம் பெரிசா இருக்கும் தெரியுமோ? பழம், வீச்சு வீச்சாகவும் இருக்கும், உருண்டையாகவும் இருக்கும், ரொம்ப ருசி, பழத்தைக் கண்ணாலே பார்த்தாக்கூடப் போதும்; பசியாறிப் போகும்” என்று குப்பியிடம் பெருமையாகப் பேசுவான் செங்கோடன்.

அப்பா சொல்லுவதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப்பார்கள், அதுமட்டுமா, பக்கத்துக் குடிசை, எதிர்க் குடிசைகளிலே உள்ள குழந்தைகளிடமெல்லாம், இதே பெருமையைத்தான் பேசிக்கொள்வார்கள். உழவர் வீட்டுப் பிள்ளைகள், வேறே எதைப்பற்றிப் பேசிக்கொள்ள முடியும், அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப் பற்றியா, அம்மாவின் வைரத்தோடு பற்றியா, அண்ணன் வாங்கிவந்த ரேடியோவைப் பற்றியா, எதைப்பற்றிப் பேச முடியும்?



செவ்வாழைக் கன்றுதான், அவர்களுக்கு, மோட்டார், ரேடியோ, வைரமாலை, சகலமும்!

மூத்த பயல் கரியன், “செவ்வாழைக் குலை தள்ளியதும், ஒரு சீப்புப் பழம் எனக்குத்தான்” என்று சொல்லுவான்.

“ஒண்ணுக்கூட எனக்குத் தரமாட்டாயாடா, நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன்? கவனமிருக்கட்டும், வறுத்த வேர்க்கடலை கொடுத்திருக்கிறேன்; கவனமிருக்கட்டும்” என்று எதிர்க்குடிசை எல்லப்பன் கூறுவான்...

கரியனின் தங்கை, காமாட்சியோ, கண்ணைச் சிமிட்டிக் கொண்டே “உனக்கு ஒரு சீப்புன்னா, எனக்கு இரண்டு தெரியுமா? அம்மாவைக் கேட்டு ஒரு சீப்பு, அப்பாவைக் கேட்டு ஒரு சீப்பு” என்று குறும்பாகப் பேசுவாள்.

மூன்றாவது பையன் முத்து, “சீப்புக் கணக்குப் போட்டுக்கிட்டு ஏமாந்து போகாதீங்க, ஆமா பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்து விடுவாங்களோ, யாரு கண்டாங்க” என்று சொல்லுவான். வெறும் வேடிக்கைக்காக அல்ல, திருடியாவது மற்றவர்களைவிட அதிகப்படியான பழங்களைத் தின்றே தீர்த்து விடுவது என்று தீர்மானித்தே விட்டான்.

செங்கோடனின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தது செவ்வாழை. உழைப்பு அதிகம் வயலில். பண்ணை மானேஜரின் ஆர்ப்பாட்டம் அதிகம். இவ்வளவையும் சகித்துக் கொள்வான், செவ்வாழையைக் கண்டதும் சகலமும் மறந்துபோகும். குழந்தைகள் அழுதால், செவ்வாழையைக் காட்டித்தான் சமாதானப்படுத்துவான்! துஷ்டத்தனம் செய்கிற குழந்தையை மிரட்டவும், செவ்வாழையைத்தான் கவனப்படுத்துவான்! குழந்தைகள், பிரியமாகச் சாப்பிடுவார்கள், செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோடனுக்கு, பண்ணை வீட்டுப் பிள்ளைகள் ஆப்பிள், திராட்சை தின்ன முடிகிறது, கரியனும் முத்துவும், எப்படி விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெற முடியும்? செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்லமாக வளர்க்கும்படிச் செய்தது. உழவன் செங்கோடனிடம், எவ்வளவு பாடுபட்டாலும், குழந்தைகளுக்குப் பழமும் பட்சணமும் வாங்கித் தரக்கூடிய ‘பணம்’ எப்படிச் சேர முடியும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்பவே உதவும், குப்பியின் ‘பாடு’ குடும்பத்தின் பசியைப் போக்கக் கொஞ்சம் உதவும். இப்படிப் பிழைப்பு! பலனில் மிகப் பெரும் பகுதியோ, பண்ணைக்குச் சேர்ந்து விடுகிறது. இந்தச் ‘செவ்வாழை’ ஒன்றுதான் அவன் சொந்தமாக மொத்தமாகப் பலன் பெறுவதற்கு உதவக்கூடிய, உழைப்பு! இதில் பங்கு பெற, பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம் போக, மிச்சமிருப்பதிலே, அலுத்துப் படுக்க வேண்டிய நேரத்திலே

பாடுபட்டு கண்ணைப் போல வளர்த்து வரும், செவ்வாழை! இதன் முழுப் பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான் பட்ட பாட்டுக்கு உரியப் பலனைத் தானே பெற முடிகிறதே என்ற சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனதிலே, தெளிவாகத் தோன்றிய கருத்துக்கள் அல்ல. புகைப்படலம் போல, அந்த எண்ணம் தோன்றும், மறையும், செவ்வாழையைப் பார்க்கும்போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந்தான்.

கன்று வளர்ந்தது கள்ளங் கபடமின்றி, செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது, விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான்! மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும் ஏற்படும் பிரேமைபோல, அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம் பாசம் ஏற்பட்டுவிட்டது.

“இன்னும் ஒரு மாசத்திலே குலை தள்ளுமாப்பா?” கரியன் கேட்பான், ஆவலுடன், செங்கோடனை.

“இரண்டு மாசமாகும்டா கண்ணு” என்று செங்கோடன் பதிலளிப்பான்.

செவ்வாழை குலை தள்ளிற்று, செங்கோடனின் நடையிலேயே ஒரு புது முறுக்கு ஏற்பட்டுவிட்டது. நிமிர்ந்து பார்ப்பான், குலையைப் பெருமையுடன்.

பண்ணை பரந்தாம முதலியார், தமது மருமகப் பெண் முத்துவிஜயாவின் பொன்னிற மேனியை அழகுபடுத்திய வைர மாலையைக்கூட அவ்வளவு பெருமையுடன் பார்த்திருக்க மாட்டார்! செங்கோடனின் கண்களுக்கு, அந்தச் செவ்வாழைக் குலை, முத்துவிஜயாவின் வைர மாலையைவிட விலை மதிப்புள்ளதாகத்தான் தோன்றிற்று, குலை முற்றமுற்ற, செங்கோடனின் குழந்தைகளின் ஆவலும், சச்சரவும், பங்குத் தகராறும், அப்பாவிடமோ அம்மாவிடமோ ‘அப்பீல்’ செய்வதும் ஓங்கி வளரலாயிற்று, “எப்போது பழமாகும்?” என்று கேட்பாள் பெண். ‘எத்தனை நாளைக்கு மரத்திலேயே இருப்பது?’ என்று கேட்பான் பையன். செங்கோடன், பக்குவமறிந்து குலையை வெட்டி, பதமாகப் பழுக்கவைத்துப் பிள்ளைகளுக்குத் தர வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப் பலனை நாம் பெறப்போகிறோம், இடையே தரகர் இல்லை, முக்காலே மூன்று வீதம் பாகத்தைப் பறித்துக்கொள்ளும் முதலாளி இல்லை. உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணையாருடையது, அவர் எடுத்துக் கொண்டது போக மீதம்தானே தனக்கு என்று, வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ண வேண்டும், அதுதானே முறை! ஆனால் இந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும், உடைமையும் செங்கோடனுக்கே சொந்தம்.

இரண்டு நாளையில், குலையை வெட்டிவிடத் தீர்மானித்தான், பிள்ளைகள் துள்ளின சந்தோஷத்தால், மற்ற உழவர் வீட்டுப் பிள்ளைகளிடம் ‘சேதி’ பறந்தது, பழம் தர வேண்டும் என்று சொல்லி, அவலோ, கடலையோ, கிழங்கோ, மாம்பிஞ்சோ, எதை எதையோ, ‘அச்சாரம்’ கொடுத்தனர். பல குழந்தைகள், கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம். இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப்போலவே, வயலிலும் நாம் பாடுபடுவது நமக்கு முழுப்பயன் அளிப்பதாக இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்! செவ்வாழைக்காக நாம் செலவிட்ட உழைப்புப் பண்ணையாரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம்கூட இராது, ஆனால் உழைப்பு நம்முடையதாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால் பலனை அவர் அனுபவிக்கிறார் பெரும்பகுதி. இதோ, இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது, எனவே பலன் நமக்குக் கிடைக்கிறது, இதுபோல, நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால், எவ்வளவு இன்பமாக இருக்கும். அப்படி ஒரு காலம் வருமா! உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம், பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக்கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா என்றெல்லாம்கூட, இலேசாகச் செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இதுபோன்ற சித்தாந்தங்களைக் கிளறிவிட்டது அவன் மனதில். குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலாயிற்று.

செங்கோடன் செவ்வாழைக் குலையைக் கண்டு களித்திருந்த சமயம், பண்ணை பரந்தாமர், தமது மருமகப் பெண் முத்து விஜயத்தின் பிறந்தநாள் விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார். அம்பிகை கோயிலில் அபிஷேக ஆராதனை செய்வதற்காக, ‘ஐயரிடம்’ சொல்லிவிட்டார். கணக்கப் பிள்ளையைக் கூப்பிட்டு, ‘பட்டி’ தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப் பற்றிக் குறிப்பு எழுதும்போது, ‘பழம்’ தேவை என்று தோன்றாமலிருக்குமா? ‘இரண்டு சீப்பு வாழைப்பழம்’ என்றார் பண்ணையார்.

“ஏனுங்க பழம், கடையிலே நல்ல பழமே இல்லை, பச்சை நாடாத்தான் இருக்கு” என்று இழுத்தான் சுந்தரம், கணக்கப்பிள்ளை,

“சரிடா, அதிலேதான் இரண்டு சீப்பு வாங்கேன்?, வேறே நல்ல பழமா எங்கே இருக்கு!” என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள், சுந்தரம், “நம்ம செங்கோடன் கொல்லையிலே, தரமா, ஒரு செவ்வாழைக் குலை இருக்குதுங்க, அதைக் கொண்டுகிட்டு வரலாம்” என்றான். “சரி” என்றார் பண்ணையார்.

செங்கோடனின் செவ்வாழைக் குலை! அவனுடைய இன்பக் கனவு!! உழைப்பின் விளைவு!! குழந்தைகளின் குதூகலம்!! அதற்கு மரண ஓலை தயாரித்துவிட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்து, செங்கோடனின் குடும்பம் பூராவும் பூரித்தது அந்தக் குலையை! அதற்குக் கொலைகாரனானான் சுந்தரம். மகிழ்ச்சி, பெருமை, நம்பிக்கை இவைகளைத் தந்து வந்த, அந்தச் செவ்வாழைக் குலைக்கு வந்தது ஆபத்து.

தெருவிலே, சுந்தரமும் செங்கோடனும் பேசும்போது குழந்தைகள், செவ்வாழையைப் பற்றியதாக இருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றிற்று, நாக்குக் குழறிற்று, வார்த்தைகள் குபுகுபுவென்று கிளம்பி, தொண்டையில் சிக்கிக் கொண்டன.

மாட்டுப் பெண்ணுக்குப் பிறந்தநாள் பூஜை, என்று காரணம் காட்டினான் சுந்தரம். என்ன செய்வான் செங்கோடன்! என்ன சொல்வான்? அவன் உள்ளத்திலே, வாழையோடு சேர்ந்து வளர்ந்த ஆசை அவன் குழந்தைகளின் நாக்கில் நீர் ஊறச் செய்த ஆசை, இன்று, நாளை, என்று நாள் பார்த்துக் கொண்டிருந்த ஆவல், எனும் எதைத்தான் சொல்லமுடியும்? கேட்பவர் பண்ணை பரந்தாமர்! எவ்வளவு அல்பனடா, வாழைக் குலையை அவர் வாய் திறந்து, உன்னை ஒரு பொருட்டாக மதித்துக் கேட்டனுப்பினால் முடியாது என்று சொல்லிவிட்டாயே! அவருடைய உப்பைத் தின்று பிழைக்கிறவனுக்கு, இவ்வளவு நன்றி கெட்டதனமா? கேவலம், ஒரு வாழைக் குலை! அவருடைய அந்தஸ்துக்கு, இது ஒரு பிரமாதமா! என்று ஊர் ஏசுகிறதுபோல், அவன் கண்களுக்குத் தெரிகிறது.

'அப்பா' ஆசை காட்டி மோசம் செய்யாதே! நான் கூடத்தான் தண்ணீர் பாய்ச்சினேன், மாடு மிதித்து விடாதபடி பாதுகாத்தேன், செவ்வாழை ரொம்ப ருசியாக இருக்கும். கல்கண்டு போல இருக்கும் என்று நீதானே என்னிடம் சொன்னாய். அப்பா! தங்கச்சிக்குக்கூட 'உசிர்' அந்தப் பழத்திடம். மரத்தை அண்ணாந்து பார்க்கும்போதே, நாக்கிலே நீர் ஊறும். எங்களுக்குத் தருவதாகச் சொல்லிவிட்டு, இப்பொழுது ஏமாற்றுகிறாயே நாங்கள் என்னப்பா, உன்னைக் கடையிலே காசு போட்டுத் திராட்சை, கமலாவா வாங்கித் தரச் சொன்னோம். நம்ம கொல்லையிலே நாம் வளர்த்ததல்லவா! என்று அழு குரலுடன் கேட்கும் குழந்தைகளும், 'குழந்தைகளைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா?' என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும், அவன் மனக்கண்களுக்குத் தெரிந்தனர்! எதிரே நின்றவரோ, பண்ணைக் கணக்கப்பிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான். 'அப்பா, குலையை வெட்டப் போறாரு, செவ்வாழைக் குலை' என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின. செங்கோடனின் கண்களிலே நீர்த்துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான், உள்ளே கொண்டு வந்தான், அரிவாளைக் கீழே போட்டான், 'குலையைக் கீழே வை அப்பா, தொட்டுப் பார்க்கலாம்' என்று குதித்தன குழந்தைகள். கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன். "கண்ணு! இந்தக் குலை, நம்ம ஆண்டைக்கு வேணுமாம் கொண்டு போகிறேன், அழாதீங்க, இன்னும் ஒரு மாசத்திலே, பக்கத்துக் கண்ணு மரமாகிக் குலை தள்ளும். அது உங்களுக்குக் கட்டாயமாகக் கொடுத்து விடறேன்" என்று கூறிக்கொண்டே, வீட்டை விட்டுக் கிளம்பினான், குழந்தையின் அழுகுரல், மனதைப் பிளப்பதற்குள்.

செங்கோடன் குடிசை அன்று பிணம் விழுந்த இடம் போலாயிற்று, இரவு நெடுநேரத்திற்குப் பிறகுதான் செங்கோடனுக்குத் துணிவு பிறந்தது வீட்டுக்கு வர! அழுது அலுத்துத் தூங்கிவிட்ட குழந்தைகளைப் பார்த்தான். அவன் கண்களிலே, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்பிற்று. துடைத்துக் கொண்டு, படுத்துப் புரண்டான், அவன் மனதிலே ஆயிரம் எண்ணங்கள். செவ்வாழையை, செல்லப் பிள்ளைபோல் வளர்த்து என்ன பலன்...!

அவருக்கு அது ஒரு பிரமாதமல்ல, ஆயிரம் குலைகளையும் அவர் நினைத்த மாத்திரத்தில் வாங்க முடியும்! ஆனால் செங்கோடனுக்கு...? அந்த ஒரு குலையைக் காண அவன் எவ்வளவு பாடுபட்டான், எத்தனை இரவு அதைப் பற்றி இன்பமான கனவுகள், எத்தனை ஆயிரம் தடவை, குழந்தைகளுக்கு ஆசை காட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்கரை எத்துணை! எல்லாம் ஒரு நொடியில் அழிந்தன!

நாலு நாட்கள் சமாதானம் சொல்லியும், குழந்தைகளின் குமுறல் ஓயவில்லை. கரியன் ஒரே பிடிவாதம் செய்தான், ஒரு பழம் வேண்டுமென்று. குப்பி, பழங்காலத்திலிருந்து ஒரு காலணாவை எடுத்துக் கொடுத்தனுப்பினாள். பழம் வாங்கிக்கொள்ளச் சொல்லி. பறந்தோடினான் கரியன்.

கடையிலே செவ்வாழைச் சீப்பு, அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தது. கணக்கப்பிள்ளை, பண்ணை வீட்டிலே இருந்து நாலு சீப்பை முதலிலேயே தீர்த்துவிட்டான், அவன் விற்றான் கடைக்காரனுக்கு, அதன் எதிரே, ஏக்கத்துடன் நின்றான் கரியன்! "பழம், ஒரு அணாடா, பயலே, காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமா, போடா" என்று விரட்டினான், கடைக்காரன். கரியன் அறிவானா, பாபம், தன் கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப்போது கடையில் கொலு வீற்றிருக்கிறது என்ற விந்தையை! பாபம்! எத்தனையோ நாள், அந்தச் சிறுவன், தண்ணீர் பாய்ச்சினான், பழம் கிடைக்குமென்று! பழம் இருக்கிறது; கரியனுக்கு எட்டாத இடத்தில்! விசாரத்தோடு வீட்டிற்கு வந்தான், வறுத்த கடலையை வாங்கிக் கொரித்துக் கொண்டே. செங்கோடன், கொல்லைப் புறத்திலிருந்து வெளியே வந்தான், வாழை மரத்துண்டுடன்.

"ஏம்பா! இதுவும் பண்ணை வீட்டுக்கா?" என்று கேட்டான் கரியன்.

"இல்லேடா, கண்ணு! நம் பார்வதி பாட்டி செத்துப் போயிட்டா, அந்தப் பாடையிலே கட்ட" என்றான் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே, செவ்வாழையின் துண்டு! பாடையைச் சுற்றி அழுகுரல்!

கரியனும், மற்றக் குழந்தைகளும், பின்பக்கம்.

கரியன் பெருமையாகப் பாடையைக் காட்டிச் சொன்னான். "எங்க வீட்டுச் செவ்வாழைடா" என்று.

"எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழைக் குலையைப் பண்ணை வீட்டுக்குக் கொடுத்து விட்டோம். மரத்தை வெட்டிப் 'பாடை'யிலே கட்டி விட்டோம்" என்றான் கரியன்.

பாபம், சிறுவன்தானே!! அவன் என்ன கண்டான், செங்கோடனின் செவ்வாழை. தொழிலாளர் உலகிலே சர்வ சாதாரணச் சம்பவம் என்பதை.



# இயற்கை வேளாண்மையில் முக்கியப் பங்கு வகிக்கும் உயிர் உரங்கள்

**த**ற்போது இரசாயன உரங்களின் விலை உயர்வினால், சாகுபடிச் செலவு கணிசமாக அதிகரித்துள்ளது. இந்நிலையில், வளிமண்டலம், மண்ணிலுள்ள சத்துக்களைக் கிரகித்தும், மண்ணில் இருந்தாலும், பயிர்களுக்கு முழுவதும் கிடைக்காத நிலையில் உள்ள சத்துக்களைப் பயிர்களுக்குக் கிடைக்கும் நிலையில் மாற்றிக் கொடுப்பதிலும் உயிர் உரங்களின் பங்கு மிக முக்கியமானதாகும்.

உயிர் உரங்கள் என்பது கண்ணுக்குத் தெரியாத, ஆனால் உயிருள்ள பாக்டீரியா நுண்ணுயிரிகளை உள்ளடக்கிய உரமாகும். இத்தகைய உயிர் உரங்களை விதையுடன் கலந்தோ அல்லது மண்ணில் இடும்பொழுதோ வேரைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், பயிர்களுக்குள்ளும் பலமடங்காகப் பெருகி, பயிருக்குத் தேவையான சத்துக்களைத் தந்து, பயிர் வளர்ச்சியை மேம்படுத்துகின்றன.

இத்தகைய உயிர் உரங்கள் பயிர் வாரியாக தயாரிக்கப்படுகின்றன. நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துக்கள் என அனைத்துப் பயிர்களின் தன்மைக்கேற்ப அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா எனப் பல்வேறு வகையான உயிர் உரங்கள் தற்போது பயன்பாட்டில் உள்ளன.

அசோஸ்பைரில்லம், ரைசோபியம் போன்ற உயிர் உரங்கள் காற்றிலுள்ள தழைச்சத்தினை கிரகித்து, பயிர்களுக்குக் கிடைக்கும் வகையில் தழைச்சத்தினை மண்ணில் மாற்றி வழங்குகின்றன. பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஷ் பாக்டீரியா போன்ற உயிர் உரங்கள் மண்ணில் எளிதில் கிடைக்காத நிலையிலுள்ள மணிச்சத்து, சாம்பல் சத்துக்களைக் கரைத்து பயிர்களுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் மாற்றி அளிக்கிறது. மேலும் வறட்சி, கார, உவர் தன்மையைத் தாங்கி வளரும் திறனையும் இத்தகைய உயிர் உரங்கள் நிலத்திற்குத் தருகிறது. பயிர் வளர்ச்சி ஊக்கிகள், நோய்க்கான காரணிகளை எதிர்க்கும் தன்மை கொண்ட வேதி மூலக்கூறுகளையும் உற்பத்தி செய்வதால், பயிர் வளர்ச்சி மேம்படுகிறது. நிலத்திற்கும், சுற்றுப்புறச் சூழலுக்கும் மிகவும் உகந்த இடுபொருட்களாக இருப்பதால், உயிர் உரங்கள் இயற்கை வேளாண்மையில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

பயிர் சாகுபடியில் மிக முக்கியமான பங்கு வகிக்கும் இத்தகைய உயிர் உரங்களை விவசாயிகளுக்கு மிகவும் குறைந்த விலையில் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில், நமது மாநிலத்தில் வேளாண்மைத் துறையின்கீழ் 22 உயிர் உர உற்பத்தி மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்கள் மூலம் அசோஸ்பைரில்லம் – நெல், அசோஸ்பைரில்லம் – இதரப் பயிர்கள், ரைசோபியம் – பயறு வகைகள், ரைசோபியம் – நிலக்கடலை, பாஸ்போபாக்டீரியா, திரவ பொட்டாஷ், அசோபாஸ் – நெல், அசோபாஸ் – இதரப் பயிர்கள் போன்ற எட்டு வகையான உயிர் உரங்கள் திரவ வடிவில் ஆண்டிற்கு 12 இலட்சம் லிட்டர் உற்பத்தி செய்யப்பட்டு,









அரசு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேலும், அடர்த்தியாக்கப்பட்ட உயிர் உரங்களைப் புற ஊதா கதிர்கள், சூரிய வெப்பம், நீரிழப்புப் போன்றவற்றால் பாதிப்புகள் ஏதும் ஏற்படாமல் 12 மாதங்கள் வரை பயன்படுத்தும் வகையில், சிறப்பு ஊடகத்தில் கலந்து கலன்களில் அடைத்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.



இத்தகைய உயிர் உரங்களின் விலை இரசாயன உரங்களோடு ஒப்பிடுகையில் மிகவும் குறைவுதான். 100 மி.லி. உயிர் உரம் ரூ.36க்கும், 250 மி.லி. உயிர் உரம் ரூ.85க்கும், 500 மி.லி. உயிர் உரம் ரூ.150க்கும், ஒரு லிட்டர் உயிர் உரம் ரூ.280க்கும் கிடைக்கிறது.

விதை நேர்த்திக்கு ஏக்கருக்கு 50 மி.லிட்டரும், நாற்றை நனைத்துப் பயன்படுத்துவதற்கு ஏக்கருக்கு 150 மி.லிட்டரும், நேரடியாக வயலில் இடுவதாக இருந்தால் ஏக்கருக்கு 150 மி.லிட்டரும், வேரின் மூலம் உரமிடுவதாக இருந்தால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மி.லிட்டரும் உயிர் உரங்கள் போதுமானதாகும்.



**விதை நேர்த்திக்குப் பயன்படுத்தும் முறை**

50 மி.லி. திரவ உயிர் உரத்தை ஒரு லிட்டர் ஆறிய அரிசிக் கஞ்சியுடன் 1 ஏக்கருக்குத் தேவைப்படும் விதையைக் கலந்து 30 நிமிடங்கள் நிழலில் உலர்த்திப் பின்னர் விதைக்கலாம். உயிர் உரங்களுடன் விதை நேர்த்தி செய்யும்போது எவ்வித இரசாயன மருந்துகளையும் பயன்படுத்தக்கூடாது என்பதை விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**நாற்றை நனைத்துப் பயன்படுத்தும் முறை**



ஏக்கர் ஒன்றுக்கு 150 மி.லி. திரவ உயிர் உரத்தைச் சிறிய பாத்தி அமைத்துத் தேவையான அளவு தண்ணீரில் கலந்து நாற்றின் வேர் நனையுமாறு 30 நிமிடங்கள் வைத்திருந்து பின்னர் நடவு செய்யலாம்.

**நேரடியாக வயலில் இடுவதற்குப் பயன்படுத்தும் முறை**

ஏக்கர் ஒன்றுக்கு 200 மி.லி. திரவ உயிர் உரத்தை மக்கிய தொழு உரத்துடன் நன்கு கலந்து நடவுக்குமுன் வயலில் இடலாம்.

**நீர் வழி மூலம் உரமிடும்போது பயன்படுத்தும் முறை**



ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மி.லி. திரவ உயிர் உரம் என்ற அளவில் கலந்து, விதைத்த நாளிலிருந்து முறையே 15, 30, 45ஆம் நாட்களில் உபயோகிக்கலாம்.

விவசாயிகளுக்குத் தேவையான உயிர் உரங்கள் போதுமான அளவில் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எனவே, வேளாண்மை விரிவாக்க மையங்களில் நெல் உள்ளிட்ட விதைகள் வாங்கும்போது, தவறாது உயிர் உரங்களையும் சேர்த்து வாங்கி, குறைந்த செலவில் மண்ணின் வளம் அதிகரிக்கும் வகையில், தங்கள் நிலங்களில் இட்டு, பயனடையுமாறு அனைத்து விவசாயிகளும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ●

# புதுக்கோட்டை மாவட்டம்

# “அரண்” இயக்கம்



திருமதி **கவிதா ராமு**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்

**ஒ**ரு நாட்டை பகைவர்களிடமிருந்து பாதுகாக்கக் கோட்டைக்கு மதில் சுவர்கள் அரணாக இருப்பதுபோல், பருந்துகள் பற்றிக்கொண்டு செல்லாமல் ஓடி வரும் தன் குஞ்சுகளைக் காப்பாற்ற தாய்க்கோழிகளுக்கு அரவணைக்கும் சிறகுகள் அரண்களைப்போல், குழந்தைகள், இளைஞர்கள், இளம்பெண்கள் நலன்காக்கப் பாதுகாப்புச் சட்ட உதவி, மனநலம், பாலியல் நலக்கல்வி, உடல்நலம், பாலினச் சமத்துவம், கற்றல் தொடர்பான வழிகாட்டுதல் போன்ற உதவிகளை உறுதி செய்யும் வகையில் புதுக்கோட்டை மாவட்ட நிருவாகத்தால் உருவாக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்படும் ஓர் அமைப்பே ‘அரண்’ ஆகும்.

அனைத்து அரசுத்துறைகளையும் ஒருங்கிணைத்துப் பொதுமக்களுடன் இணைந்து குழந்தைகள், இளம்பெண்களின் பாதுகாப்புக் குறித்துக் கலந்துரையாடல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நலத்திட்டங்கள் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள வாய்ப்புகள் உருவாக்கும் பணிகளை அரண் இயக்கம் மேற்கொள்கிறது.


1800 425 2411 என்ற உதவி எண் மற்றும் வாட்ஸ்ஆப் எண் 9443314417 ஆகிய எண்களில் கற்றல் தொடர்பான ஆலோசனைப்பெறவும், பாலினச் சமத்துவம், உடல்நலம், மனநலம் குறித்து ஆலோசனைப்பெறவும் தொடர்புகொள்ளக் குழந்தைகள், இளைஞர்களுக்கு அரியவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவசரக்கால உதவி எண் மூலமாக மாவட்ட ஆட்சியரிடம் நேரடியாகக் குழந்தைகளும், இளைஞர், இளம் பெண்கள் தங்களது தேவைகளையும், பிரச்சினைகளையும் பகிர வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

அதுமட்டுமில்லாது மாணவ, மாணவியர்களுக்குத் தகுந்த பாதுகாப்பையும், நம்பிக்கையும் ஊட்டும் வகையில் பாலியல் வன்கொடுமைகள் எங்கேனும் நிகழ்ந்தாலோ, யாருக்கேனும் நிகழ்வதைத் தெரிந்துகொண்டாலோ மேற்கண்ட எண்களில் தொடர்புகொண்டு புகார்கள் தகவல்கள் தெரிவிக்க அரண் இயக்கம் அரண்போல் உதவுகிறது.

அதுமட்டுமில்லாது 08.03.2022 அன்று ஒரே நாளில் புதுக்கோட்டை மாவட்டத்தின் அனைத்துப் பள்ளிகள், கல்லூரிகளில் 3.42 இலட்சம் மாணவ, மாணவியர்கள் அரண் இயக்கத்தின் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டார்கள் என்பது முத்தாய்ப்பான சாதனை.

அரண் இயக்கத்தின்கீழ் பயன்பெற்ற புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி **அ. மாலதி** அவர்கள் தெரிவித்ததாவது :





அனுப்புநர்:-

அ. மாலதி,
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு,
[illegible] அரசு மகளிர் கலைக் கல்லூரி (த),
புதுக்கோட்டை.

பெறுநர்:-

மாண்புமிகு. தமிழ்நாடு முதல்வர் அவர்கள்,
சென்னை.

கல்லூரியில் பயிலும் என்னைப் போன்ற மாணவியர்களுக்கு ஏற்படும் மனம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களால் அரண் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் நோக்கம் மற்றும் தொடர்பு எண்கள் குறித்து மாணவியர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் எங்களது கல்லூரியில் அனைத்து வகுப்புகளிலும் இதுதொடர்பான விழிப்புணர்வு [illegible] ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

எனவே, மாணவ, மாணவிகளுக்கு ஏற்படும் மன உளைச்சலில் இருந்து விடுபட்டு மனதை நிலைப்படுத்த. செயல்களில் சாதனை புரிய அரண் இயக்கம் பெரிதும் உதவுகிறது. மாணவ மாணவியர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ள அரண் அமைப்பை ஏற்படுத்திய மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் மாணவ, மாணவியர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
அ. மாலதி



# “நெகிழி அரவை அலகு திட்டம்”



திருமதி **இரா.லலிதா,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்

**மா**ண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, முடிகண்டநல்லூர் ஊராட்சியில் உள்ள நெகிழி அரவை அலகினை, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செவ்வந்தி மகளிர் சுயஉதவிக் குழுவிடம் ஒப்படைத்ததன் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுவில் உள்ள உறுப்பினர்களுக்குத் தினசரி வேலை கிடைக்கிறது. சொந்த ஊராட்சியிலேயே மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் நெகிழி அலகில் வேலை செய்து தனது குடும்பத்திற்கு நல்ல வருமானம் ஈட்டிப் பொருளாதாரத்தில் மேம்பட்டு வருகின்றனர்.

எனவே, வாழ்வாதாரத்திற்கு ஒரு தொழிலினை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் மகளிர் குழுவினர் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

தினசரி ஊராட்சியில் உள்ள தூய்மைக் காவலர்கள், துப்புரவுப் பணியாளர்களால் சேகரிக்கப்படும் குப்பைகள் மக்கும் குப்பை, மக்கா குப்பை எனத் தரம் பிரிக்கப்பட்டு மக்காத குப்பையில் உள்ள நெகிழி பேப்பர்கள், நெகிழி பாட்டில்கள் முதலானவை ஒவ்வொரு ஊராட்சியிலிருந்து முடிகண்டநல்லூர் நெகிழி அலகிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அரைக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள் ஊரகப் பகுதியில் அமைக்கப்படும் தார்சாலைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. தார்சாலை அமைக்கும் பணியில் தார் உருக்கப்படும்போது அதனுடன் சேர்ந்து உருக்கப்படுவதால் பிளாஸ்டிக் உருக்கப்பட்டு ஜல்லியுடன் நன்கு ஒட்டி தார்ச்சாலை மிகவும் தரமானதாக அமைகிறது. அரைக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள் ரூ.35க்கு ஊரகப் பகுதிகளில் சாலை அமைக்கும் ஒப்பந்ததாரர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.




நெகிழி இல்லாத தமிழகத்தை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுவரும் சூழலில் ஊராட்சிப் பகுதிகளில் பயன்படுத்தப்பட்டு ஆங்காங்கே போடப்படும் பிளாஸ்டிக் பேப்பர்கள், பாட்டில்கள் நீர்நிலைகளில் சேர்ந்து நீர்வழி பாதையில் அடைப்பதில் இருந்தும், பல்வேறு சுற்றுச்சூழல் கேடுகள் விளைவிப்பதில் இருந்தும் பாதுகாக்கப்பட்டு ஊராட்சிகள் குப்பைகளின்றிச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் செயல்பட வழிவகுக்கின்றன.



இந்த நெகிழி அரவை அலகு அமைக்கப்பட்டதினால் இந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகள் ஆங்காங்கே பிளாஸ்டிக் கழிவுகள் இல்லாமல் சுத்தமாகக் காணப்படுகிறது.

நெகிழி அரவை அலகுத் திட்டத்தின்கீழ்ப் பயன்பெற்ற மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி **பா. பாரதி** அவர்கள் தெரிவித்ததாவது :



அனுப்புனர் :-

B. பாரதி
D/o பாலசுப்பிரமணியன்
1/59 [illegible]
முடிகண்டநல்லூர் (P.O)
[illegible] (T.K)
மயிலாடுதுறை (D.t)

பெறுநர் :-

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தலைமை செயலகம்
சென்னை

பொருள் :- நன்றி தெரிவித்தல் சார்பாக

மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்களுக்கு வணக்கம். நான் முடிகண்டநல்லூர் [illegible] வசித்து வருகிறேன்.

என் பெயர் :- பாரதி எனக்கு 24 வயது ஆகிறது. நான் 12 வரை படித்துள்ளேன். எனக்கு தந்தை இறந்து 8 ஆண்டுகள் ஆகிறது. எனக்கு தந்தையில்லாத காரணத்தால் நானும் எனது அம்மாவும் வறுமையில் கஷ்டப்பட்டு [illegible]. எனக்கு குடும்பத்தை நடத்துவதற்கு, [illegible] போதுமான வருமானம் கிடைக்கவில்லை என்பதால், மகளிர் சுயஉதவிக்குழு மூலம் நெகிழி அரவை அலகில் வேலை பார்த்து குடும்பத்தை நடத்திக்கொண்டு வருகிறேன். இந்த நெகிழி அரவை அலகில் மகளிர் குழு மூலம் வேலை கிடைத்ததற்கு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
B. Bharathi



## ஜூலை 15: பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள்

# "தமிழ்நிலம் மணக்க வந்த திருவே"

இன்றைக்கு உன்றன் பிறந்தநாள்—கொள்கைக்
குன்றுக்கு எங்கணும் திருவிழா!

விருதையில் பிறந்து வீரனாய் வளர்ந்தாய்
சரிதையில் நிறைத்த தலைவனாய் நின்றாய்!

சிறையின் கொடுமையும் சித்ர வதையும்
சிரித்த முகத்துடன் ஏற்ற தியாகி.

ஆயிரம் உண்டு கருத்து மோதல்—எனினும்
அழியாத் தொண்டு மறந்திடப் போமோ?

தமிழ்நிலம் மணக்க வந்த திருவே!
அமிழ்தெனும் பொதுப்பணியின் உருவே!

கருத்திருக்கும் உன்றன் உடல் என்றாலும்—நெஞ்சில்
கருத்திருக்கும் காலமெல்லாம் உழைப்பதற்கு!

கதராடை மேனிதனை அலங்கரிக்கும்—
கதறுகின்ற ஏழைகளைக் கரம் அணைக்கும்!

கட்சிகளை நோக்கி, நீ கடுமொழிகள்
தொடுத்திடுவாய்—பிற
கட்சித் தலைவர்க்கோர் இன்னலென்றால்
துடித்திடுவாய்!
பெரியாரின் கல்லறையில் உன் கண்ணீர்!

பேரறிஞர், மூதறிஞர் மறைந்தபோதும் உன் கண்ணீர்!
பெற்ற தாய்தனை நான் இழந்தபோதும்
உற்றார் உறவுபோல் நீ வந்து உகுத்தாய்க் கண்ணீர்!
பெருமகனே! உனக்காக எம் கண்ணீர்
பேராற்றுப் பெருக்கெனவே பாய்ந்த தன்றோ!
தனிமனிதன் வாழ்வல்ல உன் வாழ்வு
தன்மானச் சரித்திரத்தின் அத்தியாயம்!

குமரி முதல் இமயம்வரை உன்கொடி பறக்கக்
கோலமிகு தமிழகத்தின் புகழ் பொறித்தாய்.
"குணாளா! குலக்கொழுந்தே!" என்று பண்பின்
மணாளர் எங்கள் அண்ணன் உனை அழைத்தார்.
பச்சைத் தமிழன் எனப் பகுத்தறிவுத் தந்தை
இச்சையுடன் உன் உச்சி முகர்ந்தார்.

கருப்புக் காந்தியென உன்னை—இந்தக்
கடல்சூழ நாடு கைகூப்பித் தொழுததன்றோ!
வாழ்க்கையின் ஓரத்தில் நீ எம்மிடம் வாஞ்சையும்
காட்டினாய்! —உன்

வாழ்வையே ஒரு பாடமாய் அனைவர்க்கும் நிலை
நாட்டினாய்!
இன்றைக்கு உன்றன் பிறந்தநாள்
என்றைக்கும் அது சிறந்த நாள்!



– முத்தமிழறிஞர்
டாக்டர் **கலைஞர்** அவர்கள்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.07.2022 அன்று சென்னை, காமராஜர் சாலையில், 44ஆவது செஸ் ஒலிம்பியாட்–2022 போட்டி குறித்து விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், செஸ் ஒலிம்பியாட் இலச்சினை மற்றும் சின்னத்துடன் பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட 15 பேருந்துகளைத் தொடங்கி வைத்தார்.

# தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

*Date of Publication : 2nd week of every month*
*Date of Posting : 27th - 30th of every month*





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் 13.06.2022 அன்று திருவள்ளூர் மாவட்டம், புழல் ஒன்றியம், அழிஞ்சிவாக்கம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் “எண்ணும் எழுத்தும்” மாதிரி வகுப்புகளைப் பார்வையிட்டபோது, மூன்றாம் வகுப்பு பயிலும் சிறுமியை அழைத்து, “தமிழ்” என்று எழுதுமாறு கேட்டு, அச்சிறுமி சரியாக எழுதியதைப் பாராட்டினார்.


Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,